விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 19 செவ்வாய்க்கிழமை (03.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 074

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# மனித உரிமை தொடர்பில் இலங்கையில் முன்னேற்றம்

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(ஜெனிவா)

புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர் மனிதவுரிமை தொடர்பில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என இலங்கை அறிவித்துள்ளது. நேற்று ஆரம்பமான ஐக்கிய நாடுகள் சபையின் 28 ஆவது மனிதவுரிமை தொடரில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உரையாற்றியுள்ளார். புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், மனித உரிமை தொடர்பில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)



## சுஷ்மா சுவராஜ் இலங்கை வருவார்



(புதுடில்லி)

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இரண்டு நாள் உத்தியோக பயணம் மேற்கொண்டு எதிர்வரும் 6 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார் என இந்திய தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 23ஆம் பக்கம் பார்க்க....

## ஜெனிவா கூட்டத்தில் அமெரிக்கா பாராட்டு

(வாஷிங்டன்)

ஜெனிவாவில் ஆரம்பமான ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 28 ஆவது கூட்டத்தொடரில், உரையாற்றிய அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, இலங்கை விவகாரத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உயர் மட்டப் பிரதிநிதிகளின் உரை அமர்வில் ஆற்றிய உரையின் போதே அவர் இவ்வாறு பாராட்டியுள்ளார். பர்மா, 23ஆம் பக்கம் பார்க்க....

## புனர்வாழ்வளிப்பில் உரிமை மீறல்கள்

(கொழும்பு)

கைது செய்யப்பட்ட அல்லது சரணடைந்த முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டதில் பாரிய உரிமை மீறல்கள் இடம் பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது. இலங்கையின் யுத்தக்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான அறிக்கைகளை சர்வதேச அமைப் 23ஆம் பக்கம் பார்க்க....

## கெடுபிடிகள் இல்லாத ஜனாதிபதியின் வருகை

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போன்று பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவுமற்ற நிலையிலேயே இன்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முதற்தடவையாக யாழிற்கு வருகை தரவுள்ளார். இந்த விஜயத் 23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி இன்று யாழ்.வருகை அபிவிருத்தி குறித்து ஆராய்வார்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கிறார்.

இந்த விஜயத்தின் போது யாழ் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் கூட்டத்தையும் தலைமையேற்று நடத்தவுள்ளதுடன் இதன் போது மீள்குடியேற்றம் உள்ளிட்ட பல அறிவிப்புக்களையும் வெளியிட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டின் பல இடங் 23ஆம் பக்கம் பார்க்க....



## இனப்படுகொலைத் தீர்மானம் தமிழர்களின் வரலாற்று ஆவணம்



### ஐ.நா.பிரதிநிதியிடம் முதலமைச்சர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடகிழக்கு தமிழர் தாயகத்தில் நடைபெற்றது இன படுகொலையே என சுட்டிக்காட்டும் வட மாகாணசபையின் தீர்மானம் தமிழ் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு வரலாற்று ஆவணம்எனவட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஐ.நா அரசியல் விவகாரங்களுக்கான பிரதி செயலாளர் ஜெவ்ரி வெல்ட்மனிடம் சுட்டிக் 23ஆம் பக்கம் பார்க்க....

## ஆயுத களஞ்சிய விசாரணையை நிறுத்த 300 மில்லியன் இலஞ்சம்

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

காலி துறைமுகத்தில் கைப்பற்றப்பட்ட மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் தொடர்பான விசாரணைகளை இடைநிறுத்தி வைப்பதற்கு முக்கிய அமைச்சர் ஒருவருக்கு 300 மில்லியன் ரூபாயை இலஞ்சமாக கொடுக்க குறித்த கடல் பாதுகாப்பு நிறுவனம் முயன்றதாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

முன்னாள் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவால் ஆரம்பிக்கப் 23ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறாது நெறிகாக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு விற்பனைக்கு**

1500 ச.அடி கொண்ட நல்ல நிலையில் உள்ள பழைய வீடு விற்பனைக்கு உண்டு. கதவுகள், நிலைகள், யன்னல்கள், தீராந்திகள், ஓடுகள், பனை மரங்கள் உட்பட தொடர்புக்கு

**தீபன்:-021 226 4099**

(சி-197)

# கொக்குவில் கிணறுகளில் கழிவு எண்ணெய்க் கசிவு

## பரிசோதனை மூலம் உறுதியானது

(கொக்குவில்)

சுன்னாகத்து கிணறுகளில் காணப்பட்ட கழிவு எண்ணெய்க் கசிவு கொக்குவில் கிணறுகளிலும் பரவியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொக்குவில் சம்பியன் லேனில் உள்ள வீட்டுக்கிணறு ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரி, பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட போது அந்த நீரில் கழிவு எண்ணெய் கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

கொக்குவில் பகுதியிலுள்ள கிணறுகளில் கழிவு எண்ணெய்க் கசிவு ஏற்பட்டுள்ள போதிலும் அப் பகுதி மக்கள் அதனை அறியாமல் தொடர்ந்தும் தமது கிணற்று நீரை பருகுவதால் அவர்களின் உடல் ஆரோக்கியத்திற்குப் பாதிப்பு ஏற்படக் கூடிய வாய்ப்பு உள்ளது.

எனவே கொக்குவில் பகுதியில் குழாய் நீர்ப் பரிசோதனை முழுமையாகச் செய்யப்படவேண்டும் என அப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ந)

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603, 021 567 1532**

**SPEED**

PURIFIED DRINKING WATER

சுத்தமான குடி தண்ணீர்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)

விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.




**ஸ்ரீமுருகன்**

தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ் வீதி,

யாழ்ப்பாணம்.

021 222 5392

(சீ-192) (C-8284)

**A/L பொருளியல்**

**சந்தை அமைப்புக்கள்**

வினா–விடை

**வே.கருணாகரன்**

இரண்டாம் பதிப்பு

மேலதிக விடயங்களுடன்

ரூபா 90

(9654)

பூபாலசிங்கம் புத்தகசாலை

அன்னை புத்தகசாலை

## கண்ணீர் அஞ்சலி

அமரர் Dr.தியாகராஜா கங்காதரன்




02.03.2015 திங்கட்கிழமை அன்று இறைபதம் எய்திய எமது மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய அமரர் Dr.T.கங்காதரன் அவர்களின் மறைவினால் நாமும் துயரமடைவதுடன் அவர்களின் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நிர்வாகி, தாதியர்கள் மற்றும் ஊழியர்கள்**
**இல.60 வண் மேற்கு வைத்தியசாலை,**
**ஐயனார் கோவிலடி, யாழ்ப்பாணம்.**

(9657)

## மரண அறிவித்தல்

### வைத்திய கலாநிதி தியாகராஜா கங்காதரன்



ஐயனார் கோவில் வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி தியாகராஜா கங்காதரன் நேற்று (02.03.2015) திங்கட்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் பிறைசூடி தியாகராஜா - சுகிர்தவதி அம்மாள் அவர்களின் அன்பு மகனும், அமரர் சீதாதேவி அவர்களின் அன்புக் கணவரும் அமரர் வைத்திய கலாநிதி ராஜேந்திரம் ஜெரிமையா- அமரர் சிவகாமி அம்மாள் அவர்களின் அன்பு மருமகனும், அமரர் மனோன்மணி, அமரர் திலகவதி, மகேஷ்பரா (ஓய்வுபெற்ற பொறியியலாளர்), அமரர் மரகதம், நடராசா (சட்டத்தரணி), அமரர் இராஜேந்திரா அவர்களின் அன்பு சகோதரனும், கலாநிதி சிதம்பரநாதன் (நியூசிலாந்து), சிவபாக்கியம் (நியூசிலாந்து), அமரர் பத்மநாதன், கமலாதேவி, ஓய்வுநிலை மேல் நீதிமன்ற நீதிபதி விஸ்வநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், வைத்திய கலாநிதி சந்திரிக்கா (அவுஸ்திரேலியா), சுலோச்சனா, ஹரிச்சந்திரன், நாகேந்திரா (பொறியியலாளர் அவுஸ்திரேலியா) ஆகியோரின் அருமை தந்தையாரும், குமரன (அவுஸ்திரேலியா), அமரர் குகானந்தன், சுலோச்சனா, இரஞ்சனி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், வைத்திய கலாநிதி சொரூபிணி, அர்ஜுனன் (சட்டநிபுணர்), நிருஜன் (மருத்துவ பீடமாணவன், கொழும்பு), சஞ்சீவன் (மருத்துவ பீடமாணவன், பங்களாதேஷ்), ஹேமலதா (மாணவி உயிரியல் மருத்துவ விஞ்ஞானம்) கலாநிதி கணேஷ் (பொறியியலாளர்), அருண் (பொறியியலாளர்), சிவகாமி (உடல் இயக்கவியல் நிபுணர்) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.03.2015) புதன்கிழமை மாலை 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**60/3 ஐயனார் கோவில் வீதி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி:-021 222 5290**

தகவல்: பிள்ளைகள்

(9655)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA VACANCIES

Applications will be received by me up to 2nd April 2015 from suitably qualified candidates for the following posts;

**01) Post-TECHNICAL OFFICER GRADE II SEG.B (TRAINEE)**

(Vacancies exist at the University of Jaffna including Killinochchi premises and Vavuniya Campus of the University of Jaffna)

**Qualifications;**

I. (a) Three (03) G.C.E (Advance Level) Passes in Science subjects in one sitting subject combination (s) to be decided by the faculty concerned upon the recommendation of the Department.

AND

(b) Passed a skill oriented formal programme of training relevant to the post of at least one year (Full time) duration or equivalent. The acceptability of the training programme for this purpose shall be judged by the faculty concerned.

AND

II. Age Limit : Not more than 35 years

Salary Scale:U-MT1 (IIIA) 16, 535-7X155; 10X185-19,470 P.M

Selection:By Practical Test and Interview

**2.LABORATORY ATTENDANT (LOWER GRADE)**

**Qualifications:**

I.Pass in the 8th Standard

II.Knowledge of Laboratory equipment, apparatus and chemicals of common use.

III.Age limit:Not more than 45 years

Salary Scale:U-PL2 (III) Rs.14.670-16x140-16.910P.M

Selection:By Aptitude Test and Interview

Age Limit for the above posts is not applicable for applicants in the Government Departments/ State Corporation and Statutory bodies.

**STATUTORY BENEFITS;**

1. Allowance approved by the university Grants Commission.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
3. Gratuity Payments.
4. Employment Trust Fund Benefits.
5. Free Medical care

Application forms may be obtained from the Establishments Branch (Non Academic) University of Jaffna. Thirunelvely, Jaffna, either in person or by post on a payment of Rs.100/- per application form.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ postal Order drawn in favour of **"Bursar, University of Jaffna, Thirunelvely, Jaffna"** together with a self addressed Rs 10.00 stamped envelope of 23X10 cm .in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal order RS.100/- to the applications forms drawn in favor of the Bursar, University of Jaffna.

Duly completed application form should be sent under registered cover to reach the senior Assistant Registrar/ Establishments Branch (Non Academic), University of Jaffna, Thirunelvely, Jaffna on or before 02.04.2015.

Applications sent on the specified form only will be accepted. Applications received after the closing date or illegible and incomplete applications will be rejected without intimation.

Those who are in public Service/ Corporations/ Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/ Boards.

Advance copies of applications may be sent in the first instance, However, no such applicant will be considered for the appointment if the applications routed through the Head of Department is not received.

**Registrar**
**02.03.2015**

(C-196)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் விவாதிக்கப்படும்

## அனுர பிரியதர்சன யாப்பா தெரிவிப்பு



(கொழும்பு)

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் செனவிரட்னவிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம், நிச்சயம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகையொன்று அனுர பிரிதர்சனவிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஜோன் அமரதுங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம், ஏற்கனவே சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தீர்மானத்திற்கு ஆதரவாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 114 உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவது காலதாமதமடைந்துள்ள போதிலும், நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எனவே விரைவில் அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் நாடாளுமன்றை கலைக்கப் போவதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


### தேவை

துறைமுகத்தில்20-40 அடிகென்டெயினர்களுக்கு சாரதிகள்/ உதவியாட்கள் தேவை. உதவியாட்களுக்கு பாரமான வேலை இல்லை. 6 மாதங்களின் பின்னர் சாரதியாகக் கூடிய இயலுமையுடன் 42000/- சம்பளம். கனரக/ மென்ரக சாரதிகளும் தேவை தொடர்புகளுக்கு 0772926538 (சி-9634)

### காணி விற்பனைக்கு

மானிப்பாயிலுள்ள வில்லியம் மெதடிஸ் சேர்ச் அருகாமையில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (சி-187)

தொடர்புகளுக்கு:- 077 258 6091


# முன்னாள் முதலமைச்சர் ஷசீந்திரவின் மனு மேன்முறையீட்டு மன்றத்தினால் தள்ளுபடி!

ஊவா மாகாண முதலமைச்சர் பதவியில் இருந்து தன்னை நீக்கியமை சட்டவிரோதமானது என அறிவிக்க கோரி முன்னாள் முதலமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ தாக்கல் செய்திருந்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களை அடுத்து, ஊவா மாகாண எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஹரின் பெர்னாண்டோவுக்கு மாகாண சபையில் அங்கம் வகித்த பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியதை அடுத்து அவரை ஆளுநர் முதலமைச்சராக நியமித்தார்.

இந்த நிலையில், தன்னை முதலமைச்சர் புதவியில் இருந்து நீக்கியமை அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என கூறி, ஷசீந்திர ராஜபக்ஷ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

அவரது மனுவில் சட்டம் தொடர்பான குறைபாடுகள் இருப்பதாக கடந்த முறை வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்த மனுவை நேற்று விசாரணைக்கு எடுத்த நீதிமன்றம் ஷசீந்திர ராஜபக்ஷ தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்துள்ளது. (இ-5)

# பங்காரு அடிகளாரின் பவளவிழா நிகழ்வு

யாழ். மேல் மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி ஆன்மீக இயக்கம் நடத்தும் மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர்பீட ஆன்மீக குரு அருள்திரு பங்காரு அடிகளாரின் 75 ஆவது பவளவிழா நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நல்லூர் பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழாவானது கூட்டு வழிபாட்டுடன் ஆரம்பமாகி மகேஸ்வர பூசையுடன் நிறைவு பெறவுள்ளது. (இ-3)


# 6-ம் வருடம் நினைவலைகள்



முருகையா ரவிச்சந்திரன்
ரவிச்சந்திரன் நிர்மலாதேவி

கண்ணின் மணிகளாய் - ஒரே
கருவறையில் விளைந்த - அன்புத்
தம்பியே, தந்தையே, மைத்துனியே
எம் துயர் இன்னமும் தீரவில்லை
மனம் துடித்து மடல் வரையும்
எம் துயர் இன்னமும் தீரவில்லை
மனம் துடித்து மடல் வரையும்
எம் துயர் எப்போதையா தீரும்
என்று வாடுகின்றோம்
எமது கண்ணீர் அஞ்சலியும்,
ஆத்ம சாந்தியும் நீவிர்
மூவருக்கும் சமர்பணமும் ஆகட்டும்

நிலையில்லா இவ்வுலகில் நிம்மதி தொலைந்து
சிலையாக நாமாகி ஆறாண்டு கடந்ததுவோ!
பார்க்கின்ற இடமெல்லாம் பாவையுன்
முகம் பூக்கின்ற பூவெல்லாம் உன்
வாசம் - இன்று மணக்கோலம் நாம்
காணும் வயதம்மா கனக்கின்றதே
எமதுள்ளம் நித்திய இவ்வுலகு
நிம்மதியே இல்லையம்மா சித்தி
சித்தப்பா அப்பப்பாவுடன் நிம்மதியாய்
உறங்கம்மா நிச்சயம்
ஒருநாள் ஒன்று சேர்வோம்



சிவபாலன்
சிவகௌரி

பிறப்பு : 30.12.1989
மறைவு : 03.03.2010

சின்னையா
முருகையா



(9646)

இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

உங்கள் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, தம்பி,
பிள்ளைகள், சகோதரர்கள்.


# இராசி பலன்

03.03.2015
மாசி 19 செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 8.14 மணிவரை
ஆயிலியம் முழுவதும்
இராகுகாலம் 3.27-4.57 மணிவரை
சுபநேரம் 10.57-12.57 மணிவரை

வளவன்

**மேடம்:** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க பிரியப்படுவீர்கள்.

**இடபம்:** நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு.

**மிதுனம்:** மாமன், மைத்துனர் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், புதிய நட்பால் பொருளாதார நிலை உயரும், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**கடகம்:** பயணங்களால் பலனுண்டு, நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**சிம்மம்:** தாராளமாகச் செலவுகள் செய்து மகிழ்வீர்கள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், திடீர் பண வரவு மனதிற்கு சந்தோசம் தரும், நல்ல தகவல்கள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**துலாம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், எதிர்பாராத பணவரவுகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, எதிர்பாராத வெகுமானங்கள் வந்து சேரலாம்.

**தனுசு:** திட்டமிட்ட பணிகளில் சிறு தடை தாமதங்களைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, பயணத்தால் மன உளைச்சல்கள் ஏற்படலாம், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை.

**மகரம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பேச்சில் கனிவு பிறக்கும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், சுவாரஸ்யமான நாள்.

**மீனம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 155**

## பயத்தை எதிர்கொள்ளல்

மரணம் ஞானத்தையே கொடுக்கக்கூடிய குருவாகும். சாதரணமாக நம் எல்லோருடைய வாழ்விலும் சரியான காலத்தில் வருவது மரணம் மட்டுமே! நாம் ஒரு நிமிடம் கூட அதிகம் கேட்க முடியாது. மேலும் நமது வாழ்வில் மரணம் நம்மிடமிருந்து எல்லாவற்றையும் எடுத்துச் சென்று விடுகிறது. நமது உறவினர்கள் நமது செல்வம் எல்லாவற்றையுமே ஆனால் நசிகேதனுக்கோ மரணம் எல்லாவற்றையும் கொடுக்கிறது. ஞானத்தையும் கூட ஏன் இந்த பாரபட்சம்? நமக்கும் நசிகேதனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? ஓரே ஒரு காரணம் தான் நாமெல்லாம் மரணத்திடம் இருந்து ஓடி விடுகிறோம். ஆனால் நசிகேதன் மரணத்தை எதிர்கொள்கிறான்.

இந்த அற்புதமான கதையிலிருந்து நான்கு விடயங்களைப் புரிந்து கொள்ளவேண்டும்.

முதல் விடயம்;- நாம் மரணத்தை எதிர்கொள்ளும் பொழுது அது அங்கு இருக்காது.

இராண்டாவது விடயம்;- அப்படியே மரணம் அங்கு இருந்தாலும் நாம் நினைப்பது போல் பயங்கரமான ஒன்றல்ல. அது அன்பாகவும் கொடுப்பதாகவும் இருக்கிறது.

மூன்றாவது விடயம்;- மரணம் நமக்கு இறுதியான பரிசான ஞானத்தைக் கொடுக்கக் கூடியது.

எப்படியோ பெரும்பாலன மக்களுக்கு வாழ்க்கை ஸ்வாதிஷ்டமான சக்கரத்தைத் தாண்டிச் செல்வதேயில்லை. வாழ்க்கை ஒரு போதும் மரணத்தைப் பற்றிய பயத்தைத் தாண்டிச் செல்வதேயில்லை. நாம் மூலாதார மற்றும் ஸ்வதிஷ்டமான சக்கரங்களுக்கிடையே ஆசைகளுக்கும் பயத்திற்கும் இடையே வாழ்ந்து மடிந்து விடுகிறோம். நமக்கு வாழ்வில் வேறெந்த வழியையும் எடுத்துக் கொள்வதற்கான தைரியம் இல்லை.



முந்தைய காலங்களில் மக்கள் நமக்கு இன்றிருக்கும் வாழ்க்கைப் பாதுகாப்பு எதுவும் இல்லாமல் வாழ்ந்தன. உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் நோய்களுக்கு எந்தத் தடுப்பூசியும் கிடையாது. இயற்கைப் பேரழிவுகளை செயற்கைக்கோள் துணையுடன் முன் கூட்டியே கணித்து எச்சரிக்கும் அமைப்புகள் கிடையாது. பஞ்சத்திற்கோ அல்லது வெள்ளத்திற்கேபா எதிரான பாதுகாப்பு எதுவும் கிடையாது. அதனால் மக்கள் எப்பொழுதும் மனதளவில் போராட்டத்திற்குத் தயாராகவே இருந்தனர்.

இறப்பிற்கும் கூட முக்கியாமாக போர்வீரர்கள் எப்பொழுதும் இறக்கத் தயாராகவே இருக்க வேண்டும். பழங்கால ஜப்பானிய சாமுராய் வீரர்கள் மரணத்தை அமைதியுடன் எதிர்கொள்ளும் வழியை அறிந்திருந்தனர். அவர்கள் போரில் தோற்கடிக்கப்பட்டால் வெறுமனே ஒரு நீளமான ஊசியை ஸ்வாதிஷ்டான சக்கரத்தில் சொருகிக்கொண்டு விடுவார்கள். இது ஒரு மிகவும் உயர்ந்த தொழில் ரிதியான உத்தியாகும். இதில் ஸ்வாதிஷ்டான சக்கரத்தில் இருக்கும் உயிர் ஆற்றல் வெளிப்படுத்தப்பட்டு அதன் விளைவாக உடனடியான வலியற்ற மரணம் நேரிடுகிறது.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# சின்ன வெங்காயச் செய்கையில்

## தின்னவேலிச் சிவப்பு

பயிர்ச்செய்கை முறை:-

பாத்தி முறை:- உயர் பாத்தி- 3 மீற்றர் X70 ச.மீ காலபோகத்திற்கு சிறந்தது

தாழ் பாத்தி- 1மீ X 1மீ சிறுபோகத்திற்கு சிறந்தது.

வரம்பு சால் முறை- 30 ச.மீ X 30 ச.மீ மாறி மாறி அமைத்தல்

மட்டமான தரை பயிரிடல் - மண்ணற்பாங்கான இடம் சிறந்தது

விதைத்தெரிவு:

இயற்கை பசளை இட்டு உற்பத்தி செய்த விதை வெங்காயம் நீண்ட காலம் சேமிக்கக்கூடியதாகவும் அழுகல் தொற்றும் காணப்படாது. இவற்றை நடுகைக்கு பாவிப்பது சிறந்ததாகும்.

களைகட்டல்



வெங்காயத் தாள்கோதி



பனிப்பூச்சி



ஊதாப்புள்ளி நோய்



குமிழ் அழுகல்



அந்திரக்நோஸ

வெங்காய நிலத்தை 15-20 நாட்களுக்கு முதல் ரவுண்டப்களை நாசினி பாவித்த பின் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதுடன் குமிழ் நட்ட உடன் கோல் என்ற களை நாசினி 16 மி.லீ/10லீற்றர் என்ற விகிதத்தில் பாவித்தால் பயிர்ச் செய்கை காலங்களில் களைகள் மிகவும் குறைவாகவே காணப்படும். அல்லது ஒரு களைகட்டல் மாத்திரம் மேற்கொள்ளவேண்டி ஏற்படும். மேற் கூறப்பட்ட சிபார்சின் படி வேதாள இன வெங்காயத்திற்கும் 2ஆவது மேற்கட்டை தவிர்த்து தின்னவேலி சிவப்பிற்கும் தகுந்த நேரத்தில் பிரயோகித்தால் விளைச்சலும் சிறந்ததாக இருக்கும் அத்துடன் 01 ஏக்கருக்கு 4-5 தொன் உக்கிய மாட்டெரு அல்லது கூட்டெரு அடியுரத்துடன சேர்த்து பாவிக்கும் போது சேதனப்பசளையும் வினைத்திறனாக பயன்படும்.

நோய்கள் கூடுதலாக கால போகத்தில் மழை பனிக்காலங்களில் ஏற்படுகிறது. ஊதாப்புள்ளி நோய் அதிகமாக பனிக்காலங்களிலும், தொடர்ந்த மப்பு மந்தாரமான மழை காலத்தில் அந்திரக்நோஸ் தாக்கமும் வோதள இனத்துடன் ஒப்பிடும் போதும் தின்னவேலிச் சிவப்பில் குறைவாகும். ஊதாப்புள்ளி அந்திரக்நொஸ் நோயிற்கும் தாள்கோதி தாக்கத்திற்கு உட்பட்டால் ஒரு முறை மட்டும் பங்கசு நாசினியான பொலிரும் பூச்சி நாசினியாக அற்றபுறோனும் பாவித்து கட்டுப் படுத்தக் கூடியதாக உள்ளதால் பயிர்ச் செய்கைக்கான செலவை குறைத்துக் கொள்ளலாம்.

பொதுவாக வெங்காயச் செய்கைக்குத் தேவையான காரணிகளாவன

-நீர்த்தேவை 26 ஏக்கர் அங்குலம்

-புருவ நடுகை அதிகவிளைவு கூடிய பருமனுடைய குமிழ்

-மட்டம்பெயரும் காலத்தில் கூடிய நீர்ப்பாசனம் தவிர்த்தல்- விளைவைப் பாதிக்கும்

-10-12 மணித்தியாலம் சூரிய ஒளி தேவை

-நடுத்தர குமிழ் அதிக விளைவைத் தரும்

-அறுவடைக்கு 01 வாரத்திற்கு முன் தாள்கள் மடிக்கப்பட வேண்டும்

-விதைத்தெரிவ அறுவடை செய்த 4-6 வாரம் உறங்கு நிலை முடிந்த பின் நடுகை நெய்தல் சிறந்தது.

-நன்கு உலர்ந்த பின் பிடிகளாக கட்டி காற்றோட்டமுள்ள இடங்களில் கட்டித் தொங்க விடலாம்

-அதிக சேதனப்பசளையிட்டு பயிர் செய்தால் இவ்விளைவை இருமடங்காக அதிகரிக்கலாம்.

முற்றும்

| பீடைகள் | அறிகுறி | கட்டுப்பாடு |
|---|---|---|
| வெங்காயத் தாள்கோதி | தாள்களின் வெளிப்பகுதி அரித்துக் காணப்படும் ஊட்பகுதியை தாக்கும் போது தாள்கள் சிகரெட் சாம்பல் போல் சுருங்கி வெள்ளையாக காணப்படும் | அற்றபுறோன்-10 மி.லீ/10 லீற்றர் நீரில் |
| பனிப்பூச்சி | தாக்கப்பட்ட இலை நுனி மெலிதாகி வெண்ணிறமடையும் | காபறில்-0.7 கி.கிராம்/கெக்ரயர் பென்தியோன்-1400மி.லீ/ கெக்ரயர் |
| விலாங்குப்புழு | தாக்கப்பட்ட பயிர்கள் அடியுடன் சுருண்டு பச்சை நிறமாக காணப்படும் | காபோபியறான் 20 கிராமை 01 ச.மீக்கு பிரித்து இரு முறை இடலாம் |
| குமிழ் அழுகல் | குமிழ்கள் அழுகி தாள் மஞ்சளாக மாறி அழிந்து விடும் துர் நாற்றம் வீசும் | கேப்மாய்/ரொப்சின் 30கிராம்/10லீற்றர்நீரில் குமிழ்களை 30 நிமிடம் ஊறவிட்டு தோற்று நீக்கி நடவும் |
| ஊதாப்புள்ளி நோய் | தாள்களில் சிறிய வட்டமாக புள்ளிகளட தோன்றி இறுதியில் காய்ந்தவீடும் | போலிகர்- 05 மில்லி லீற்/16மி.லீ தாங்கிக்கு டைகோனில் 40மி.லீ/16 மி.லீ தாங்கிக்கு |

திருமதி.சோ .விஜயதாசன்
விவசாயப்போதானாசிரியர்
விவசாய ஆராய்ச்சி நிலையம்
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி.தமிழ்ச் சங்கம் நடத்தும் 12 ஆவது திருக்குறள் மாநாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கம் நடத்தும் தமிழ் விழாவும் 12 ஆவது திருக்குறள் மாநாடும் நாளை புதன்கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் காலை, மாலை அமர்வுகளாக நடைபெறவுள்ளது. இதில் காலை அமர்வு காலை 9 மணிக்கும் மாலை அமர்வு பி.ப 1.30 மணிக்கும் ஆரம்பமாகும்.

இதன்போது கருத்தரங்குகள், பட்டிமன்றம், கலைநிகழ்வுகள், பரிசளிப்பும் நன்மதிப்பு நிகழ்வும் நடைபெறும். முதலாம் நாள் தமிழ்விழா நிகழ்வு நாளை புதன்கிழமை காலை அமர்வு 9 மணிக்கு தமிழவேள் பொன் கணேசமூர்த்தி அரங்கில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும்.

இதன்போது திருக்குறள் நூல் குறளோவியக் கண்காட்சி திறந்து வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து கருத்தரங்கு நடைபெறும்.

இதில் காலந்தோறும் தமிழ் எனும் தலைப்பில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தலைவர் முனைவர் அகளங்கன், தமிழ் வளர்த்த சான்றோர் எனும் தலைப்பில் திருவையாறு உ.நி.ப.ஆசிரியர் க.லோகேசுவரன், தமிழ் வழிக்கல்வி எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் மா.சின்னத்தம்பி ஆகியோர் கருத்தரங்கை நடத்துவர்.

மாலை அமர்வு பி.ப 1.30 மணிக்கு ஆரம்பமாகும். இதன்போது திருவள்ளுவர் திருவுருவப்படம் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் வில்சன் வீதிச் சந்தியிலிருந்து ஊர்வலமாக மாநாட்டு மண்டபத்திற்கு எடுத்து வரப்படும்.

அதனைத் தொடர்ந்து நூல்கள் வெளியிடப்படும். அதன்பின்னர் மேன்மைத்தமிழ் வாழுமா? என்னும் தலைப்பில் வே.இறைபிள்ளை நடுவராக இருக்க பட்டிமன்றம் நடைபெறும்.

நிகழ்ச்சியின் நிறைவில் தமிழ் இசைப்பாடல், நாடகம், ஆடல், தனிஆடல், கருத்துரை என்பன இடம்பெறும். இரண்டாம் நாள் திருக்குறள் மாநாடு நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

தென்னிலங்கை திருச்சபை பேராயர் அதி. வண.முனைவர் எ.சு.ஜெபநேசன் தலைமையில் இடம்பெறும்.

வள்ளுவர் உள்ளம் எனும் தலைப்பில் கருத்துரை வழங்கப்படவுள்ளது. இதில் அற உள்ளம் எனும் தலைப்பில் சைவப்புலவர் க.பத்மானந்தன் ஒழுக்க உள்ளம் எனும் தலைப்பில் இலங்கை வங்கி வைப்பக மேலாளர் கு.சிவஞானசுந்தரம் தந்தை உள்ளம் எனும் தலைப்பில் கிளிநொச்சி மாவட்ட குமுகாயப்பணி அலுவலர் த.தபேந்திரன் அன்பு உள்ளம் எனும் தலைப்பில் கிளிநொச்சி மாவட்ட துணைச் செயலர் ச.கிருச்னேந்திரன், மேனாள் தமிழ்ச்சங்கத்தலைவர் மருத்துவர் ச.முருகானந்தம் ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

மாலை அமர்வு பி.ப 1.30 மணிக்கு ஆரம்பமாகும்.

இதன்போது தமிழ்க் காவலர் வே.இறைபிள்ளை தலைமையில் திருவள்ளுவர் விழாவும் பரிசில் வழங்கல் நிகழ்வும் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

நூல்வெளியீடு, விருது வழங்கல், பேச்சு ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும். (அ-2)





கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் வெற்றிக்கிண்ணத்திற்கான அரச உத்தியோகத்தர்கள் பங்கேற்ற விளையாட்டுப்போட்டி அண்மையில் கிளி/கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பங்கேற்பதைப் படங்களில் காணலாம். (படங்கள் :-கிளிநொச்சி-1 செய்தியாளர்)

# கரைதுறைப்பற்று பிரதேச செயலகபிரிவில் 806 பெண் தலைமைத்துவ குடும்பங்கள்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட கரைத்துறைப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் வன்னியில் நடைபெற்ற யுத்தம் காரணமாகவும் மற்றும் ஏனைய வழிகளிலும் குடும்பத்தலைவரை இழந்த நிலையில் 806 பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களும் குடும்பப் பிணக்குகள் காரணமாக கணவனைப் பிரிந்த நிலையில் 208 பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களும் மற்றும் மனைவியை இழந்த நிலையில் 336 தபுதாரர்களும் வசித்து வருவதாக முல்லைத்தீவு மாவட்ட செயலக புள்ளி விபரத் தகவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, போர் காரணமாகவும் ஏனைய வழிகளிலும் குடும்பத்தலைவர்களை இழந்த நிலையில் 20 வயது தொடக்கம் 40 வயதிற்குட்பட்ட 79 பெண்களைத் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களும் 41 வயது தொடக்கம் 60 வயதிற்குட்பட்ட 371 பெண்களைத் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களும் 60 வயதிற்கு மேற்பட்ட 356 பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுமாக மொத்தம் 806 பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் வாழ்வாதாரத்திற்கான தொழில் வாய்ப்பின்றி தமது குடும்பப்பாரத்தை சுமக்கின்றனர்.

இதேவேளை பொருளாதார பிரச்சினைகள் காரணமாகவும் மற்றும் ஏனைய பிரச்சினைகள் காரணமாகவும் கணவனை பிரிந்த நிலையில் 208 பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களும் பொருளாதார பிரச்சினை காரணமாக பல்வேறு பிரச்சினைகளுடன் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

எனவே இது தொடர்பாக புலம்பெயர் உறவுகள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கவனத்தில் எடுத்து தமக்கான வாழ்வாதார தொழில் முயற்சிகளை ஏற்படுத்தித்தர வேண்டுமென பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோரிக்கை விடுக்கின்றன. (அ-2-15)




## விழிப்புணர்வு செயற்றிட்டங்கள் முன்னெடுப்பு

அரசின் 100 நாட்கள் வேலைத் திட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமை த்துவ நிலையத்தின் ஊடாக நான்கு விழிப்புணர்வு செயற்றிட்டங்கள், சுனாமி முன்னெச்சரிக்கைக்கான ஒத்திகை பார்த்தல் ஆகிய நிகழ்வுகள் நடைபெற்று வருவதாக கிளிநொச்சி அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எஸ்.சுகுணதாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் ஏற்படும் அனர்த்தத்திற்கு எவ்வாறு முகம் கொடுத்தல், உயிரிழப்புக்களை தடுத்தல் மற்றும் குறைத்தல் போன்றவற்றை உள்ளடக்கிய விழிப்புணர்வு கருத்தரங்கும் கிளிநொச்சி வலைப்பாட்டில் அமைந்துள்ள சுனாமி முன்னெச்சரிக்கை நிலையத்தை ஒத்திகை பார்த்தல் செயற்றிட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-277)

# ஒரு ஆசிரியருடன் 71 பாடசாலைகள்

## கல்வி அமைச்சு தகவல்

(மல்லாவி)

நாடு தழுவிய ரீதியில் இலவசக் கல்வியை மாணவர்களுக்குப் போதிப்பதற்காக 9ஆயிரத்து 905 அரச பாடசாலைகள் இயங்கி வருவதாகவும் இப்பாடசாலைகளில் ஆசிரியர் வளத்தைப் பொறுத்த வரையில் தலா ஒரு ஆசிரியருடன் 71 பாடசாலைகளும் தலா இரண்டு ஆசிரியர்களுடன் 141 பாடசாலைகளும் 2 ஆயிரத்து 733 பாடசாலைகளில் தலா 3 தொடக்கம் 9 ஆசிரியர்களும் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கின்றனர்.

அத்தோடு 4 ஆயிரத்து 411 பாடசாலைகளில் தலா 10 தொடக்கம் 25 வரையான ஆசிரியர்களும் ஆயிரத்து 654 பாடசாலைகளில் தலா 26 தொடக்கம் 50 ஆசிரியர்களும் கல்வி கற்பிக்கின்றனர்.

இதேவேளை 676 பாடசாலைகளில் தலா 51 தொடக்கம் 100 வரையான ஆசிரியர்களும் 205 பாடசாலைகளில் தலா 101 இற்கு மேற்பட்ட ஆசிரியர்களும் மாணவர்களுக்கான இலவச கல்வியினைக் கற்பித்து வருவதாக கல்வி அமைச்சின் புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2-15)

# வவு.எட்டு பாடசாலைகள் மூடப்பட்ட நிலையிலுள்ளன

(மல்லாவி)

வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் கீழ் 8 பாடசாலைகள் மக்கள் மீள்குடியேற்றத்தின் பின்னர் பல்வேறு காரணங்களால் இதுவரை மீள ஆரம்பிக்கப்படாது உள்ளதாக வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், வன்னியில் போருக்கு முன்னரான காலப்பகுதியில் வவுனியா வடக்கில் இயங்கிய மேற்படி 8 பாடசாலைகளும் யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து செல்லும்போது படிப்படியாக பாடசாலைகள் மூடப்பட்டன.

தற்போது வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் கீழுள்ள மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டபோதும் மூடப்பட்டுள்ள பாடசாலைகள் அமைந்துள்ள கிராமங்களுக்குரிய அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை என்பதை காரணம் காட்டி ஒருசில குடும்பங்களே மீள்குடியேறியுள்ளன.

இதனால் மாணவர்களின் வரவின்றி வவு/புதுக்குளம் அ.த.க.பாடசாலை, வவு/கோரமோட்டை அ.த.க.பாடசாலை, வவு/நொச்சிக்குளம் அ.த.க.பாடசாலை, வவு/வெடி வைத்த கல்லு அ.த.க.பாடசாலை, வவு/பெரிய அடம்பன் ஸ்ரீ கணேசா வித்தியாலயம், வவு/ஓமந்தை இ.மருதங்குளம் அ.த.க.பாடசாலை, வவு/கோழியாகுளம் அ.த.க.பாடசாலை, வவு/நாம்பன் குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் வித்தியாலயம் ஆகிய 8 பாடசாலைகளும் இதுவரை ஆரம்பிக்கப்படாதுள்ளன. (அ-2-15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோட்டல் உரிமையாளர்களுடன் வணிகர் கழகத்தில் கலந்துரையாடல்

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டும் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டும் புதிய அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்திருந்த போதும் இதன் பயன்கள் சாதாரண மக்களை சென்றடையாமை பற்றியும் குறிப்பாக ஹோட்டல் உரிமையாளர்களில் சிலர் இன்னும் பழைய விலைகளிலேயே உணவு வகைகளை விற்பனை செய்து வருவதாகவும் பலரும் தமது கவலைகளை யாழ். வணிகர் கழகத்திற்கு தெரியப்படுத்தி வருகின்றனர்.

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் சிறந்ததொரு புரிந்துணர்வு நிலைமைக்கு இட்டுச் செல்லும் நோக்குடன் யாழ்.வணிகர் கழகம் நாளை மறுதினம் 5 ஆம்திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு 165, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள யாழ். வணிகர் கழக பணிமனையில் அவசர கலந்துரையாடலுக்கு அழைப்பதென தீர்மானித்துள்ளது.

எனவே இக்கலந்துரையாடலில் அனைத்து ஹோட்டல் உரிமையாளர்கள் மற்றும் ஹோட்டல் வாடிக்கையாளர்கள், நலன் விரும்பிகள் போன்ற அனைத்து தரப்பி னரையும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என யாழ். வணிகர் கழகத்தின் செயலாளர் இ.ஜனக்குமார் அறிவித்துள்ளார். (இ



(நன்றி:- மிரர்)


# காணாமற் போனவர்களின் உறவினர்கள் யாழில் நாளை கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் காணாமற்போனவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து நாளை புதன்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக வடபகுதியில் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட பொதுமக்கள், பெற்றோர், பாதுகாவலர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அச்சங்கத்தின் தலைவர் திருமதி செல்வராஜா இன்பராணி, செயலாளர் திருமதி து.கமலநாயகி ஆகியோர் இணைந்து விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காணாமற் போனோர் சங்கத்தைச் சேர்ந்த நாம் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக ஒன்றுகூடி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தி பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மகஜர் அனுப்பி வைக்கப்படவுள்ள அதேவேளை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் எச்.எம்.ஜீ.எஸ். பளிஹக்கார ஆகியோருக்கும் மகஜர் கையளிக்கப்படவுள்ளது.




எமது போராட்டத்தில் தமிழ் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

அதேவேளை காணாமற் போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த அனைவர்களையும் கலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடபகுதியில் பாதுகாப்புப்படையினரால் கைது செய்யப்பட்ட பொதுமக்கள், பெற்றோர், பாதுகாவலர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட பதிவு நடவடிக்கையில் 500இற்கு மேற்பட்வர் பங்கு கொண்டு தமது உறவினர்கள் தொடர்பான பதிவுகளை மேற்கொண்டிருந்தனர்.வடக்கில் காணமற் போனவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை மிகவும் சொற்பமானதே என்று சுட்டிக்காட்டிய அவர்கள் பதிவுகளையும் விசாரணைகளையும் எதிர்கொண்டு காணாமற் போனவர்களின் உறவினர்கள் சலித்துப் போய்விட்டனர் எனவும் தெரிவித்தனர்.



அதுமட்டுமன்றி குடும்ப வறுமை அச்சுறுத்தல்கள் காரணமாக காணாமற் போனவர்களைத் தேடும் நடவடிக்கையில் உறவினர்கள் பின்னடிப்பதாகவும் தெரிவித்தனர்.

மேலும் வடக்கில் காணாமற் போனவர்களின் உறவினர்கள் வறுமையாலும் மனரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அத்தகைய குடும்பங்களைத் தெரிவு செய்து வடக்கு மாகாணசபை உதவ முன்வரவேண்டுமெனவும் காணாமற் போனவர்களை' தேடும் உறவுகளுக்கு வடக்கு மாகாணசபை பக்கபலமாக இருக்கவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை காணாமற் போனவர்களின் உறவினர்களின் கண்ணீரில் அரசியல் செய்வதை விடுத்து உண்மையாக போராடவேண்டுமென்வும் அரசியல் பழிவாங்கல்களுக்கு காணாமற்போனவர்க ளின் உறவினர்களினால் முன்னெடுக்கப்படும் போராட்டங்களைப் பயன்படுத்த வேண்டாம் எனவும் மன்றாட்டமாக கேட்டுக்கொண்டனர்.

மேலும் நாளை புதன்கிழமை காலை மாவட்ட செயலகம் முன்பாக இடம்பெறவுள்ள கவனயீர்ப்பு போராட்டத்திற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் காணாமற் போனவர்களின் உறவினர்கள் விடும் கண்ணீரைப் போக்க அனைவரும் பாடுபட வேண்டும் எனவும் அச்சங்கத்தினர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ

# சகல பேருந்துகளிலும் மனிதநேயம் மதிக்கப்பட வேண்டியது அவசியமே

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சேவையில் ஈடுபட்டு வரும் பேருந்துகளில் முதியவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், கைக்குழந்தைகளுடன் பயணம் செய்யும் பெண்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் இது குறித்து பேருந்துச் சாரதிகளும் நடத்துநர்களும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. அரசு, தனியார் பேருந்துக்களில் கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகளுடன் பயணம் செய்பவர்கள், மதகுருமார்கள்மற்றும் வயோதிபர்களுக்கு என ஆசனங்கள் தனித்தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆசனங்களை ஒதுக்குவதில் அக்கறை செலுத்தும் பேருந்து உரிமையார்களும் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் அந்த ஆசனங்களில் அமர வேண்டியவர்கள் அமர்கின்றனரா? என்பதை கொஞ்சம் கூட கவனிப்பதில்லை.

நேரக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பதிலும் அதிக பயணிகளை ஏற்றிப் பயணிப்பதிலும் அக்கறையும் ஆர்வமும் காட்டுகின்றனரே தவிர பயணிகள் நலனின் அக்கறை செலுத்துவதில்லை.

எனவே எதிர்காலத்திலாவது பயணிகளின் நன்மை கருதி பேருந்துச் சேவை இடம்பெற வேண்டுமெனவும் பேருந்துகளில் வெறுமனவே எழுத்துருவில் உள்ள மனித நேயம் செயற்பாட்டுக்கு கொண்டு வரப்பட வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை தனியார் பேருந்துச் சங்கங்கள், இலங்கை போக்குவரத்துச் சபை என்பன உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதுமட்டுமின்றி பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளும் மனித நோயத்துடன் பிற பயணிகளின் நிலையறிந்து தாமாக முன்வந்து உதவிட வேண்டுமெனவும் பாதிக்கப்பட்ட பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ

# யாழ்.இந்திய துணைத்தூதுவருடன் கட்டைக்காடு மீனவர்கள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காடு கடற்றொழில் கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகளுக்கும் யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஏ.நடராஜனுக்கும் இடையிலான சந்திப்பொன்று யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி மீனவர்கள் சங்கப் பிரதிநிதிகள் இதன்போது விரிவாக தூதுவரிடம் எடுத்துரைத்தனர்.

மீனவர்களின் பிரச்சினைகள் பற்றி உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு, சாதகமான பதிலுடன் எதிர்வரும் 29ஆம் திகதி மீனவர்களின் பிரதேசத்துக்கு நேரில் சென்று சந்திப்பதாக இந்திய துணைத்தூதர் உறுதியளித்தார்.

கடந்த மாதம் இந்திய மீனவர்களின் அத்துமீறல் காரணமாக பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நட்டஈடு வழங்குவது பற்றியும் சாதகமான பதிலைத் தருவதாக நடராஜன் உறுதியளித்தார்.

யாழ். இந்தியத் துணைத்தூதரக பிரதித் தூதுவர் எஸ்.டி.மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பகுதியிலிருந்து ராணுவத்தை மீளப்பெற ஐ.நாவில் இந்திய அரசு வலியுறுத்த வேண்டும்

## தொல்.திருமாவளவன் கோரிக்கை



(கொழும்பு)

**தமிழர் பகுதிகளிலிருந்து இராணுவத்தை திரும்பப்பெற ஐ.நா. மனிதவுரிமைகள் கூட்டத் தொடரில் இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.**

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 28 ஆவது கூட்டம் ஜெனீவாவில் தொடங்கியுள்ளது. இலங்கை அரசின வேண்டு கோளை ஏற்று இந்தக் கூட் டத்தில் இலங்கையின் போரக் குற்றங்கள் குறித்து சமர்ப்பிக்கப்படவிருந்த அறிக்கை செப் டெம்பர் மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

புதிய ஜனாதிபதி பதவியேற்று இத்தன்ன நாட்கள் ஆன பிறகும்கூட தமிழர் பகுதிகளிலிருந்து இராணுவத்தை வெளியேற்றவோ, இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட தமிழர்களின் நிலங்களைத் திருப்பிக்கொடுக்கவோ இலங்கை அரசு எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அதுபோலவே ஐந்து ஆண்டுகளுக்கு மேல் எந்தவித விசாரணையும் இல்லாமல் இரகசியச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்களை விடுவிப்பது பற்றியும் இலங்கை அரசு வாய் திறக்கவில்லை.

போர்க்குற்ற அறிக்கை சமர்ப்பிப்பதை அடுத்த கூட்டத்துக்கு ஒத்தி வையுங்கள் எனக் கேட்ட இலங்கை அரசு இப்போது செப்டெம்பரில் நடைபெறவுள்ள கூட்டத்திலும் அறிக்கையை சமர்ப்பி க்க விடாமல்முட்டுக்கட்டை போடும வகையில் பேசிவரு கிறது.

இலங்கையின் வெளியுறவுத் துறை துணை அமைச்சர் அஜித்பெரேரா 'செப்டெம்பருக்குள்ளங்களால்விசாரணையை முடிக்க முடியாது' என இப்போது கூறியிருக் கிறார்.

பொதுத்தேர்தல் நடத்தப்பட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கையில் அதிகாரம் உறுதிப்படுத்தப்பட்டுவிட்டால் அதன் பின்னர் அவரும் மகிந்த ராஜபக்ஷ போலத்தான் நடந்துகொள்வார் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இந்திய மீனவர்கள் தொடர்ந்து கைதுசெய்யப்படுகிறார்கள், இலங்கையின் சீன ஆதரவு நிலையிலும் பெரிதாக மாற்றம் இல்லை, இந்தியா பலமுறை வலியுறுத்தியும் கூட தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வு குறித்து இலங்கை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, இலங்கையின் ஏமாற்று வேலைகளுக்கு இந்தியா பலியாகி விடாமல் இந்த ஐ.நா. மனித உரிமைக கூட்டத்தில் உறுதியான நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.

தமிழர் பகுதிகளிலிருந்து இராணுவத்தை வெளியேறவும், அபகரிக்கப்பட்ட நிலங்களைத் திருப் பிக் கொடுக்கவும், சட்டவிரோதமாக இரகசியச் சிறைகளில் அடைத்து வைக் கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளை விடுவிக்கவும், தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வை அளிக்கவும் இந்தியா வலியுறுத்தவேண்டும்.

வடமாகாண சபையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட 'இனப்படுகொலை' தீர்மானத்தின் அடிப்படையில் ஐ.நா. விசாரணையை விரிவுபடுத்த இந்தியா குரலெழுப்ப வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வலியுறு த்துகிறோம் என தொல் .திருமாவளவன் தெரிவித்துள்ளார். (இ-5)

## சீன நிறுவனங்களுக்கான மீன்பிடி அனுமதி இரத்து



இலங்கை கடற்பரப்பில் இலங்கை கொடியை பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சீனாவின் எட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த மீன்பிடி அனுமதியை தற்போதைய புதிய அரசாங்கம் இரத்துச் செய்துள்ளது.

இந்நிறுவனங்கள் அரசாங்கத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கையை மீறி செயற்பட்டமையினால் அனுமதி இரத்துச் செய்யப்பட்டுள்ளது என மீன்பிடித்துறை அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

மேலும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று என்ன வகையிலான மீன்கள், எவ்வாறு பிடிக்கப்படுகின்றன என்பது பற்றிய விபரங்களை இந்த நிறுவனங்களினால் வெளியிடப்படாமை ஒப்பந்த மீறலாகும் எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். (இ-5)

## சி.சி.ரி.கமராவில் சிக்கினான் திருடன்

(கரணவாய்)

மந்திகை எரிபொருள் நிலை யத்திற்கு அருகிலுள்ள மாபிள் கடையில் இடம்பெற்றுவந்த திரு ட்டு சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடையில் தொடர்ந்து இடம் பெற்று வந்த திருட்டுச் சம்பவத் தையடுத்து சி.சி.ரி. கமரா பொருத் தப்பட்டது.

இதன்பின்னர்இடம்பெற்ற திரு ட்டுச் சம்பவத்தில் தொடர்புபட்ட நபர் கமராவில் பதிவாகியுள்ளார்.

இதனையடுத்து பொலிஸாரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டையடு த்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டதுடன் பருத்தித்துறை பொலி ஸாரால் தடுத்து வைக்கப்பட்டு ள்ளார். (இ-5)

## விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணிப்பகுதியில் மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கரவண்டியும் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினமிரவு 8 மணியளவில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் கீரிமலை வீதி, சித்தன்கேணியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான மாணிக்கம் இராசேந்திரம் (வயது - 56) என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

சுழிபுரத்திலிருந்து சங்கானை நோக்கி தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் இளைஞர்கள் இருவர் வேகமாகச் சென்றுள்ளனர்.

இதனால் துவிச்சக்கர வண்டியில் சென்ற குடும்பஸ்தர் அதிலிருந்து இறங்கி வீதியோரமாக நின்றுள்ளார்.

எனினும் குடும்பஸ்தரை மோதித் தள்ளிய மோட்டார் சைக்கிள் அவரை 50 மீற்றர் தூரம்வரை இழுத்துச் சென்றுள்ளது.

அத்துடன் பிறிதொரு வாகனத்தையும் மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு இளைஞர்களும் சைக்கிளில் சென்ற பிரஸ்தாப குடும்பஸ்தரும் படுகாயமடைந்தனர். மூவரும் உடனடியாக சங் கானை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

பிரஸ்தாப குடும்பஸ்தர் தலையில் கடும் காயங்களுக்கு உள்ளான நிலையில் அவரை உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்புவதற்காக அம்புலன்ஸின் உதவி கோரப்பட்டுள்ளது.

எனினும் இரவு 9.30 மணியளவிலேயே அம்புலன்ஸ் சங்கானை வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்துள்ளது. அங்கிருந்து உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட அவருக்கு 10.45 மணியளவிலேயே அவசர விபத்துப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

பிரஸ்தாப குடும்பஸ்தருக்கு உடனடியாக முதலுதவிச் சிகிச்சை அளிக்கப்படாமையும் மற்றும் காலதாமதமுமே அவர் உயிரிழந்தமைக்கு காரணம் என உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதேவேளை சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவரது மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மரண விசாரணைகளை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 11 1/2 உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L/ அரச தொழில்<br>தொ.இ: B/4201 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 12 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர்<br>தொ.இ: G/4204 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 28 3/4 செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/4202 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 32 1/2 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: B.COM, BSC லண்டன்<br>தொ.இ: G/4208 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 38 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4203 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 3 3/4 செவ் 4 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: HNDA/ அரச தொழில்<br>தொ.இ: G/4209 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 61 செவ் 2 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L பிரான்ஸ் PR<br>தொ.இ: B/4205 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 21 3/4 செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA, MSC<br>தொ.இ: G/4210 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு எதிராகப் போராடியவர்கள் பழிவாங்கப்படுவதாக குற்றச்சாட்டு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுத்த படையினர் பழிவாங்கப்படுவதாக தேசிய சுதந்திர முன்னணிக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அதேவேளை மனிதாபிமான மீட்புப் பணிகளில் முக்கிய பங்களிப்பினை வழங்கியவர்கள் இலக்கு வைக்கப்படுகின்றனர் என தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்துள்ளார்.

இதன் ஓர் கட்டமாகவே அண்மையில் முன்னாள் கடற்படைப் பேச்சாளர் கே.பி. தஸநாயக்க புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் தேவைகளுக்கு அமையவே நாட்டில் தற்போது ஆட்சி நடத்தப்படுகின்றது. நல்லாட்சி அரசாங்கம் அமெரிக்காவை திருப்திப்படுத்துவதில் அக்கறை காட்டி வருகின்றது.

கடந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் பதவி கவிழ்க்கப்பட்டதன் பிரதான சூத்திரதாரி அமெரிக்காவே.

அமெரிக்காவே திரை மறைவில் இருந்து கொண்டு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தியது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# பேசும் படம் - 41

ஆரம்பகாலத்தில் தபால் விநியோகம் செய்த தள்ளுவண்டில் இன்றும் யாழ்.தபாலகத்தில்...



என்னதான் புதுமை வந்தாலும் எம் பாரம்பரியத்தை மறந்திடலாமோ?

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.1
தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்:-
ந.சசிதரன்,
வேலணை

# ஒழுக்க விதியொன்றை சட்டமாக்க வேண்டும்

## மஹிந்த தேசப்பிரிய கருத்து

தேர்தல் ஒழுக்க விதியொன்றை சட்டமாக்க வேண்டுமென தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் அரசியல். கட்சிகள் சுயாதீனக் குழுக்கள் மற்றும் அதன் வேட்பாளர்கள் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்க விதிகள் குறித்து தெளிவுபடுத்தும் வகையில் இந்த ஒழுக்கக் கோவை அமைய வேண்டும்.

இந்த ஒழுக்கக் கோவை சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஓர் சட்டமாக அமுல்ப தேர்தலை சுயாதீனமானதும் நீதியானதுமான முறையில் நடத்தும் நோக்கில் 2012ஆம் ஆண்டில் தேர்தல் திணைக்களத்தினால் இந்த ஒழுக்கக் கோவை முன் வைக்கப்பட்டது.

பொதுமக்கள் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டு இந்த ஒழுக்கக் கோவை தயாரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# இனப்பிரச்சினை இதயச்சுத்தியோடு மகிந்தவினால் அணுகப்படவில்லை

## ரவூப் ஹக்கீம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்கு தீர்வுகண்டு நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இதய சுத்தியோடு முயற்சிக்க வில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐ.நா. அரசியல் விவகாரங்களுக்கான உதவி செயலாளர் ஜெப்ரி பெல்ட்மன் உடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதியினால் நியமிக் கப் பட்ட பாராளுமன்றத் தெரி வுக்குழு வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கி ரஸ் புறக்கணிக்கப்பட்ட தாகவும். தெற்கில் இனவாதத்தை கட்டவிழ்த்துவிட்ட பொதுபலசேனாவிற்கு அரசாங்க உயர் மட்ட தரப்பினரிடமிருந்து அனுசரணை கிடைத்ததாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தத்தை வெற்றி கொண்ட இறுமாப்பில் இருந்த முன்னாள் ஜனாதிபதி. இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளை குறைப்பதற்கும். விரிசலை நீக்குவதற்கும் வெறும் கண்துடைப்பிற்காக சில காரியங்களைச் செய்தாரே தவிர உண்மையாக எவ்விதமான பயனுள்ள முன்னெடுப்புகளையும் அவர் மேற்கொள்ளவில்லை.

இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

அத்துடன் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவராக செயற்பட்ட இடதுசாரி அரசியல் தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் திஸ்ஸ விதாரண கூட இத்தெரிவுக்குழுவில் தெரிவு செய்யப்படவில்லை. சிறுபா ன்மையினத்தவருக்கு எதிராக தெற்கில் இனவாதம் கட்ட விழ்த்து விடப்பட்ட நிலையில் பொது பல சேனா மற்றும் பேரினவாதச் சக்திகளுங் கு அப்போதைய அரசாங்க உயர்மட்டத்தினரின் அனுசரணை கிடைத்தது.

இனவாதம் மாத்திரமல்லாது ஊழல் மோசடிகள் நிறைந்த அப்போதைய அரசாங்கத்திற்கு முடிவு கட்டுவதற்கு சிறுபான்மை யினர் உள்ளிட்ட நாட்டு மக்களில் பெரும்பான்மையானோர் முன்வந்தனர்.

எனினும் புதிய ஆட்சியில் பாராளுமன்ற சமநிலை பேணுவதில் நிலவும் கருத்து வேறுபாடுகள், முன்னாள் ஜனாதிபதியின் விசுவாசிகளின் செயற்பாடுகள் என்பன சவாலாக இருந்த போதிலும்.100 நாட்கள் வேலைத்திட்டத்தின் பின்னர் பாராளுமன்றத் தேர்தலொன்றை நடத்தி தேசிய அரசாங்கத்தை கட்டியெழுப்பி நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதில் ஜனாதிபதி. பிரதமர் ஆகியோர் முயற்சித்து வருகின்ற னர் என அமைச்சர், ஐ.நா பிரதிநிதிக்கு தெளிவுபடுத்தினார். மேலும் தான் நீதியமைச்சராக பதவி வகித்த போது பாராளுமன்றத்தில் சட்டமாக்க கொண்டு வரப் பட்ட முக்கிய சட்டங்களை கடந்த கால ஆட்சியில் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டது எனவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
1968
08
11



இறப்பு
2009
03
08

அமரர் பூமிராசா லபிதா

குடும்பத்தின் ஒளி விளக்காய் அன்பின்
இருப்பிடமாய் நற்பண்புகளுடன் -நல்
வாழ்வுக்கு வழிகாட்டி எமக்காகவே
வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே
உங்கள் நினைவுடன் என்றும்
வாழ்கின்றோம்.

03.03.2015 செவ்வாய்க்கிழமை இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 01,
பாலிநகர்,
வவுனிக்குளம்.

தகவல்:-
கணவர்:-பூமிராசா,
பிள்ளைகள்:- கோபினாத்,
கோகிலாத், லோஜினி.

(9618)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண தமிழ் மக்களின் மனங்களை வெல்லும் வகையில் செயற்பட வேண்டும்

## அரசிடம் பிரதியமைச்சர் விஜயகலா வலியுறுத்தல்

**(யாழ்ப்பாணம்)**

**காணாமற் போனோர் விவகாரம், அரசியல் கைதிகள் விடயம்,மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் அரசாங்கமானது உரிய நடவடிக்கைகளை உடன் எடுக்காவிடின் வடமாகாண தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடியாது. இனியும் காலதாமதப்படுத்தாது அரசாங்கமானது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண முன்வர வேண்டும் என்று மகளிர் விவகார பிரதியமைச்சரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.**



தமிழ் மக்கள் கடந்த தேர்தலில் புதிய அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியிருந்தனர். எனவே இந்த ஆதரவிற்கு ஏற்ப சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இது குறித்து பிரதியமைச்சர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவி க்கப்பட்டுள்ளதாவது,

வடக்கில் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இர்ராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை .வலிகாமம் வடக்கில் விவசாயம் செய்யும் காணிகள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இதனால் அங்கு மக்கள் மீள்குடியேற முடியாத நிலை காணப்படுகிறது. மக்களின் காணிகள் மீளவும் அவர்களிடம் வழங்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவது அவசியம்.

கடந்த ஆட்சிக் காலத்தில் இரா ணுவத்தினரின் தேவைக்காக காணிகளின் சுவீகரிப்பு தொடர்கதையாக மாறியிருந்தது. புதிய அரசாங்கம் பதவி யேற்ற பின்னரும் இன்னமும் பொதுமக் களின் காணிகள் மீளவும் கைய ளிக்கப் படாமை வருத்தமளிக்கிறது.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலும், இது வரை ஆக் கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவி ல்லை.

சிறைச்சாலைகளில் தமிழ் இளைஞர், யுவதிகள் இன்னமும் பரிதவித்து வருகின்றனர். இவர்களை குடும்பத்தினர்களுடன் இணைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

யுத்தம் முடிவடைந்து ஆறு வருடங்கள் முடிவடைந்த போதிலும் தமிழ் இளைஞர், யுவதிகள் தமது விடுதலைக்காக இன்னமும் போராடும் நிலையே காணப்படுகின்றது.

காணாமற் போன உறவுகளைத் தேடி மக்கள் இன்னமும் அழுது புலம்பி வருகின்றனர். தமது உறவுகளை மீட்டுத்தருமாறு கோரி இவர்கள் போராட்டங்களையும் தொடர்ந்து நடத்துகின்றனர்.

காணாமற் போன இந்த உறவுகளின் விவகாரத்திற்கு உரிய தீர்வினை புதிய அரசாங்கம் காணும் என்று தமிழ் மக்கள் நம்பியிருந்தனர். ஆனால் புதிய அரசாங்கமும் இந்த விவகாரம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லை. இந்த விடயத்திற்கும் தீர்வு காணப்படவேண்டும்.

வடக்கில் அரச காணிகளில் குடியிருக்கும் மக்களுக்கு நிவாரணம் இன்றியநிலை காணப்படுகின்றது. இவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட உதவுவதில்லை. சொந்தக் காணி இல்லை என்ற காரணத்தினால் வீட்டுத் திட்டங்கள் கூட இவர்களுக்கு இல்லை.

வடக்கில் யுத்தத்தின் போது கணவன்மாரை இழந்த பல்லாயிரக்கணக்கான பெண்கள், தொடர்ந்தும் கைவிடப்பட்ட நிலையில் உள்ளனர். இவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் கிடைக்கவில்லை.

கடந்த அரசாங்க காலத்தில் எந்தவித உதவியுமின்றி இருந்த இந்த பெண்கள் தற்போதும் உதவிகள் இன்றி கஷ்டப்படுகின்றனர். இதனைவிட யுத்தத்தின்போது ஷெல் துகள்கள் உடலில் சென்று அந்த துக ள்களுடன் பெருமளவான மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களின் சிகிச்சைக்கென விசேட மருத்துவப்பிரிவு அமைக்கப்படவேண்டும். அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத்திட்ட த்திற்குள் இவர்களது விவகாரமும் உள்ளடக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார் .(இ

## எழுத்தாளரின் படுகொலையைக் கண்டித்து பங்களாதேஷில் பொதுமக்கள் போராட்டம்



அமெரிக்காவின் அட்லாண்டாவில் வசித்து வந்த பங்களாதேஷத்தின் புகழ்பெற்ற முக்கிய எழுத்தாளரான அவ்ஜித் ராய் என்பவர் கடந்த வியாழக்கிழமை மாலை பங்களாதேஷில் தனது மனைவியுடன் புத்தகக் கண்காட்சி ஒன்றிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த போது அடையாளம் தெரியாத நபர்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இதில் கடுமையாகத் தாக்கப்பட்ட அவரது மனைவி ரபிடா அஹ்மெட் பலத்த காயத்துடன் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவத்தை அடுத்து பங்களாதேஷத்தில் பதற்ற நிலை அதிகரித்துள்ளதுடன் தலைநகர் டாக்காவில் கருத்துச் சுதந்திரத்தை வலியுறுத்தி நூற்றுக்கும் அதிகமானவர்கள் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

அவ்ஜித் ராய் தீவிரவாதம் மற்றும் இஸ்லாம் உட்பட மத அடிப்படை வாதம் என்பவற்றுக்கு எதிராக சுதந்திரமாக எழுத்துக்களைப் படைத்து வந்தார். மேலும் இவரது சிந்தனைகள் விஞ்ஞானத்தால் வழிநடத்தப்படும் மனித நல்க் கோட்பாடுகள் பற்றியதாக இருந்தது. இவரது படைப்புக்களில் Virus of Faith மற்றும் From Vacum to The Universe ஆகியவை பிரசித்தமானவை.

இதைவிட அமெரிக்காவில் இருந்தவாறு free mind என்ற தலைப்பில் வலைப்பூவில் எழுதி வந்த இவர் தாயகம் திரும்பினால் கொல்லப்படுவார் என மிதவாதிகள் வெளிப்படையாகவே அச்சுறுத்தல் விடுத்திருந்தனர். தற்போது அவர்கள் மிரட்டியவாறே இக் கொலைச் சம்பவம் அரங்கேறியிருப்பது பங்களாதேஷ மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இந்நிலையில் முன்பு அடையாளம் காணப்படாத போராளிக் குழுவான **அன்சார் பங்களா 7** என்ற அமைப்பு தமது டுவிட்டரில் இப்படுகொலைக்கு உரிமை கோரியுள்ளதுடன் இதனை பிரதிப் பொலிஸ் ஆணையர் எஸ்.எம் ஷில்பி நோமன் என்பவரும் உறுதிப்படுத்தியுள்ளார்.

மேலும் இவ்வமைப்பு தமது டுவிட்டர் பதிவில் இஸ்லாமுக்கு எதிராகக் குற்றம் புரிந்தமையாலே ரோய் கொல்லப்பட்டுள்ளார் எனவும் அறிவித்துள்ளது. அவ்ஜித் ராயினது படுகொலையை அமெரிக்கா வன்மையாகக் கண்டித்துள்ளது. மேலும் இக்கொலைக்குப் பின்னணியில் உள்ளவர்களை நீதியின் முன் நிறுத்த விசாரணைக்குத் தன்னால் இயன்றதை அமெரிக்கா செய்யும் எனவும் அமெரிக்க மாநிலத் திணைக்கள பேச்சாளர் ஜென் ப்சாக்கி நிருபர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஒன்லைன் புத்தக வலைத் தளத்தில் இருந்து இவரது புத்தகத்தை நீக்க வேண்டும் என ஓர் அடிப்படைவாதியான ஷபியூர் ரகுமான் பாராபியிடமிருந்து இவருக்கு எதிராக மிரட்டல் வந்திருந்தது. இக்காரணத்துக்காக குறித்த நபர் பின்னர் கைது செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மரண அறிவித்தல்

## அமரர் மயில்வாகனம் சுப்பிரமணியம்



துரை வீதி, இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், 183, ஸ்கந்தபுரம் கிளிநொச்சி, இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சுப்பிரமணியம் 01.03.2015 ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் சின்னத்தங்கச்சியின் மகனும், கந்தையா கண்மணியின் மருமகனும், ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், குலசிங்கம், இலங்கநாதன், காந்தராஜா (வவுனியா), மகேஸ்வரி(கண்டி), இரத்தினமூர்த்தி (ஜெயகணன் ஸ்ரோர்ஸ், சுன்னாகம்)ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருட்செல்வம் (தம்பி), அருட்செல்வம் (தயா, இத்தாலி), நந்தினி (கனடா), ஜெயந்தா, சுதா, வவி (பிரான்ஸ்), கெங்கா (கனடா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் இந்திராதேவி, வதனா (இத்தாலி), நவதீபன் (தீபன், கனடா), ரஜிதரன் (கரன் பான்ஸி, சுன்னாகம்), கருணராஜன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சாணுகா (கனடா). ஆரண்யன், அனுஸ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (04.03.2015) புதன் கிழமை இணுவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துரைவீதி,
இணுவில் தெற்கு,
தாவடி

(9653)

தகவல்:-
குடும்பத்தினர்.
TP: 0779275886

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

1081

## முத்திரை மோதிரத்தின் மகிமை

அக்பரின் தர்பாரில் இருந்தவர்களில், பீர்பால் அக்பருக்கு மிகவும் நெருக்கமானவர். பீர்பாலுடைய அறிவும், நகைச்சுவையும் அக்பரைப் பெரிதும் கவர்ந்திருந்தன. பல சமயங்களில் தன்னுடைய நகைச்சுவைத் துணுக்குகளினால் அக்பரைக் குலுங்கக் குலுங்க சிரிக்க வைப்பதில் மிகவும் வல்லவர். வழக்கப்படி அவர் ஒருநாள் அக்பரை சிரிக்க வைத்தபோது, வாய்விட்டு சிரித்த அக்பர் பீர்பாலைப் பார்த்து, "நீ சக்திவாய்ந்தவனாக இருப்பதன் காரணம் உன் மதியூகமும், நகைச்சுவை உணர்வுமே!" என்று விமரசித்தார்.

"பிரபு! அதுதான் உங்களுக்கும், எனக்குமுள்ள வித்தியாசம! நீங்கள் ஒரு சக்கரவர்த்தியின் பிள்ளை என்ற ஒரே காரணத்தினால் எந்த சாதனையும் புரியாமல் சக்கரவர்த்தி ஆகிவிட்டீர்கள். ஆற்றல் மிக்கவராக இருக்கிறீர்கள். ஆனால், என்னுடைய பெருமைக்கும், பெயருக்கும் காரணம் திறமை மட்டுமே! உங்களைப் போல்பிறப்பினால்அடையவில்லை. உழைத்துப் பெற்றவன் நான்!" என்று பெருமை பேச அக்பருக்கு இலேசாகக் கோபம் வந்தது. "என்ன உளறுகிறாய்?" என்று கேட்டார் அக்பர்.

"சரியாகத்தான் சொல்கிறேன். என் மூளையை யாரும் என்னிடம் இருந்து திருட முடியாது? அதனால் என் சக்தியும், பெருமையும் என்றென்றும் இருக்கும். ஆனால், உங்கள் மகுடமும், முத்திரை மோதிரமும் உங்களிடம் இருக்கும் வரைதான் உங்களுக்கு சக்தி உண்டு. அவற்றைப் பறித்து விட்டால் நீங்கள் செல்லாக் காசு! உங்களுக்கு மதிப்பே கிடையாது" என்றார் பீர்பால்.





சினம் தலைக்கேறிய அக்பர், "நீ சொல்வதை நிரூபித்துக் காட்டு! இல்லை என்றால் உனக்கு மரண தண்டனை!" என்று பீர்பாலைப் பார்த்து சீறினார். அன்றிரவு பீர்பால் படுக்கையில் படுத்தவாறே அக்பரின் சவாலை சமாளிப்பது எப்படியென்று சிந்தனை செய்தார். கடைசியில்அவருக்குஒருயோசனை தோன்றியது.

அடுத்த நாள் வழக்கப்படி பீர்பால் தர்பாருக்கு வந்தார். அக்பர் வழக்கப்படி பீர்பாலுடன் பேசினாலும், அன்று அவர் இயல்பான பிரியத்துடன் பேசவில்லை.

தான் நேற்று கூறியது அவருடைய மனதை பாதித்து இருக்கிறது என்று பீர்பால் உணர்ந்து கொண்டார்.

இரண்டு வாரங்கள் சென்றன. வாரத்திற்கு ஒருமுறை அக்பர் இரவு நேரத்தில் மாறுவேடமணிந்து தனியாக நகர் வலம் வருவது வழக்கம்!

நாட்டில் சட்டம் ஒழுங்கு எப்படி இருக்கிறது. மக்கள் மனநிறைவுடன் இருக்கின்றனரா என்றெல்லாம் நேரில் கண்டறியவே அவர் அவ்வாறு செய்வார்.

மாறுவேடம் அணிந்து செல்லும் போது, அக்பரை யாராலும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாது. அந்த அளவுக்கு அஷ்ரப் எனும் ஒப்பனைக் கலைஞர் மிக அழகாக வேடம் அணிவிப்பார்.

அஷ்ரப்பும், பீர்பாலும் நண்பர்கள். ஒவ்வொரு முறை அக்பருக்குப் புதிய வேடம் அணிவிக்கும்போது அஷ்ரப் பீர்பாலைக் கலந்து ஆலோசிப்பார்.

இந்த வாரத்தில் இந்த மாறுவேடம் அணியப்போகிறார் என்பதை பீர்பால் முன்கூட்டியே ஊகித்து விடுவார். அக்பருக்கு எப்படி ஒப்பனை செய்தால் சிறபபாக இருக்கும் என்ற உத்திகள் பீர்பாலுக்கு நன்றாகத் தெரியும்.

அவற்றை அவர் அஷ்ரப்புக்குச் சொல்லிக் கெடுப்பார்.

ஒருநாள் மாலை அஷ்ரப் பீர்பாலைத் தேடி வந்தார்.

"இன்றிரவு அக்பர் மாறுவேடம அணியப் போகிறார்.

அவருக்குப் பிச்சைக்காரர் வேடம் போட்டு விடலாமா?" என்று பீர்பாலைக் கேட்டார்.

"தாராளமாகச் செய்! சக்கரவர்ததியை பிச்சைக்காரனாக்கும் சக்தி உனக்குத்தான் உண்டு" என்ற பீர்பால் தொடர்ந்து, "அவருக்கு ஒட்டுப்போட்ட சட்டையும், பைஜாமாவும் அணிவிப்பாய்.

பழைய, கிழிந்த துணியினால் தலைப் பாகை செய்! தேய்ந்துபோன செருப்புகளைக் கொடு. முகத்திலும், கழுத்திலும், கைகளிலும் கறுப்பு வண்ணக் கோடுகள்போட்டு, சாயம்பூசி சுருங்கிய தோலும், வெயில்பட்டுக் கன்றிய முகமுமாக இருப்பதுபோல் செய்!" என்றார்.

அஷ்ரப் பீர்பால் கூறிய அனைத்தையும் கவனமாகக் கேட்டுக் கொண்டபின் அங்கிருந்து அகன்றார்.

"நான் நினைப்பது நடக்கும் என்று தோன்றுகிறது" என்று பீர்பால் புன்னகைத்தார்.

பிறகு தன் மனைவியை அழைத்துத் தனக்கும் பிச்சைக்காரன் வேடம் அணிவிக்க வேண்டினார்.

"இந்த நேரத்தில் உங்களுக்கு எதற்குப் பிச்சைக்காரன் வேடம்?" என்று அவள் கேட்டாள்.

"ஊர் முழுவதும் சுற்றி பிச்சை எடுக்கப் போகிறேன். அப்போதுதான் பிச்சைக்காரர்களின் வாழ்க்கை எத்தனை கஷ்டமானது என்று உணர முடியும்" என்றார் பீர்பால். (தொடரும்)

03.2015
03

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1575 - இந்தியாவின் மொகலாயப் பேரரசர் அக்பர் வங்காளப் படைகளைத் தோற்கடித்தார்.
- 1833 - அகிலத்திரட்டு அம்மானையின்படி, நாராயணனின் அவதாரமாக அய்யா வைகுண்டர் திருச்செந்தூரில் பிறந்தார்.
- 1857 - பிரான்சும் ஐக்கிய இராச்சியமும் சீனா மீது போரை அறிவித்தன.
- 1878 - ஓட்டோமான் பேரரசின் கீழ் பல்கேரியா விடுதலை அடைந்தது.
- 1905 - ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலாஸ் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபையை ஏற்படுத்த இணங்கினான்.
- 1918 - முதலாம் உலகப் போரில் ரஷ்யாவின் பங்களிப்பை முடிவுக்குக் கொண்டுவர ஜேர்மனி, ஆஸ்திரியா மற்றும் ரஷ்யா ஆகியன உடன்பாட்டிற்கு வந்தன.
- 1923 - டைம் இதழின் முதல் பதிப்பு வெளியிடப்பட்டது.
- 1938 - சவுதி அரேபியாவில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1939 - மும்பாயில் மகாத்மா காந்தி ஆதிக்கவாதிகளுக்கு எதிராக உண்ணாநோன்பை ஆரம்பித்தார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: முன்னர் நடுநிலையாக இருந்த பின்லாந்து அச்சு நாடுகளுக்கெதிராக போரை அறிவித்தது.
- 1969 - நாசாவின் அப்பலோ 9 விண்ணில் ஏவப்பட்டது.
- 1971 - இந்தோ-பாகிஸ்தான் போர் ஆரம்பமானது.
- 1974 - லூத்தரன் சபைகளுல் சில கத்தோலிக்க திருச்சபையில் இணைந்தன.
- 1991 - சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்து செல்ல ஆதரவாக லாத்வியாவின் 74% மக்களும் எஸ்தோனியாவின் 83% மக்களும் வாக்களித்தனர்.
- 1992 - பொஸ்னியா என்ற நாடு உருவாக்கப்பட்டது.
- 2002 - சுவிட்சர்லாந்து ஐ.நாவில் இணைவதற்கு ஆதரவாக சுவிட்சர்லாந்தில் மக்கள் வாக்களித்தனர்.

### பிறப்புக்கள்

- 1839 - ஜாம்ஷெட்ஜி டாடா, இந்தியத் தொழிலதிபர் (இ. 1904)
- 1845 - கியார்கு கேன்ட்டர், கணிதவியலாளர் (இ. 1918)
- 1847 - அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல், கண்டுபிடிப்பாளர் (இ. 1922)
- 1867 - பாண்டித்துரைத் தேவர், தமிழறிஞர் (இ. 1911)
- 1935 - அன்புமணி, ஈழத்து எழுத்தாளர் (இ. 2014)
- 1941 - பங்காரு அடிகளார் இந்திய ஆன்மீக குரு
- 1950 - திக்குவல்லை கமால், ஈழத்து எழுத்தாளர்.
- 1955 - கணபதி கணேசன், தமிழ் இதழியலாளர் (இ. 2002)

### இறப்புக்கள்

- 1703 - ராபர்ட் ஹூக், ஆங்கிலேய அறிவியலாளர் (பி. 1635)
- 1707 - ஔரங்கசீப், மொகலாயப் பேரரசர் (பி. 1618)
- 1996 - சி. சிவஞானசுந்தரம், சிரித்திரன் ஆசிரியர்.
- 1999 - ஜேராட் ஹேர்ஸ்பேர்க், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1904)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

வி.சி.குகநாதன் எழுதிய கதைக்கு, பஞ்சு அருணாசலம் வசனம் எழுதினார். வைரமுத்து எழுதிய பாடல்களுக்கு இசை: சந்திரபோஸ். இந்தப் படத்தின் விசேஷ அம்சம்: ரஜினி அணிந்த புது விதமான உடைகம் ரொம்பவும் "ரிஸ்க்" எடுத்து செய்த சண்டை கம். ஜுடோ ரத்தினம் மிகுந்த முயற்சி எடுத்துக்கொண்டு, புதுவிதமான சண்டைக்காட்சிகளை அமைத்திஉருந்தார்.


### சரவணன் கருத்து

படம் முடிந்ததும், முதல் பிரதியை ஏவி.எம்.சரவணன் பார்த்தார். பிறகு, டைரக்டர் முத்துராமனை அழைத்து, படம் நன்றாக வந்திருக்கிறது. கிளைமாக்ஸ் காட்சிக்கு மட்டும் இன்னும் கொஞ்சம் மெருகு கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றுகிறது. ஆனால், படப்பிடிப்பு முடிந்துவிட்டதால், இனி ஒன்றும் செய்ய வேண்டாம். இப்படியே இருக்கலாம் என்று கூறிவிட்டுச் சென்று விட்டார்.

முத்துராமன் யோசித்தார். சரவணன் கூறியபடி கிளைமாக்ஸ் சண்டையில் இன்னும் விறுவிறுப்பு கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று அவருக்கும் தோன்றியது. ஆனால் ரஜினியோ வேறு படத்துக்கு கால்ஷீட் கொடுத்து, அதில் நடித்துக் கொண்டிருந்தார். என்ன செய்வது என்று தெரியவில்லை.

எதற்கும் ரஜினியிடம் பேசிப் பார்ப்போம்" என்று கருதி, அவருக்கு போன் செய்தார். விஷயத்தைச் சொன்னார்.

69



வேலைக்காரனில் ரஜினி, அமலா

அதற்கு ரஜினி, சார்! நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம். ஞாயிற்றுக்கிழமை காலை வந்துவிடுகிறேன். அன்று மாலை வரை என்னை வைத்து எந்தக் காட்சிகளை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கம். சரவணன் சார் பாராட்டுகிற மாதிரி, கிளைமாக்ஸ் காட்சியை எடுத்து விடுங்கள் என்று கூறினார்.

அதன்படி ஞாயிற்றுக்கிழமையன்று ரஜினியை வைத்து உச்சகட்ட காட்சிக்கு மேலும் விறுவிறுப்பு ஏற்படும்படியாக, சில காட்சிகளை எடுத்தார், முத்துராமன்.

இப்படி ரஜினியை வைத்து புதுக்காட்சிகள் எடுக்கப்பட்டது சரவணனுக்கே தெரியாது.

புதிய கிளைமாக்ஸ் காட்சி இணைக்கப்பட்டதும், சரவணனிடம் சென்றார், முத்துராமன். நீங்கள் சொன்னபடி, சில காட்சிகளை மாற்றி அமைத்திருக்கிறோம். வந்து பாருங்கள் என்று அழைத்தார்.

அதன்படி இறுதிக் காட்சிகளை போட்டுப் பார்த்தார், சரவணன். அப்படியே அசந்து போனார். ரொம்பப் பிரமாதம்! எப்படி இவ்வாறு மாற்ற முடிந்தது? என்று கேட்டார்.

ஞாயிற்றுக்கிழமையன்று ரஜினி வந்து நடித்துக் கொடுத்து விட்டுப் போனதைச் சொன்னார், முத்துராமன்.

உடனே சரவணன், ரஜினிக்கு போன் செய்து நன்றி தெரிவித்தார்.

2-10-1987 அன்று வெளிவந்த இந்தப்படம், வெள்ளி விழாவையும் தாண்டி, 200 நாட்கள் ஓடியது.

ரஜினியும், பிரபுவும் இணைந்து நடித்த "குரு சிஷ்யன்" வெற்றிப் படமாக அமைந்தது. இந்தப் படத்தின் மூலம்தான் நடிகை கௌதமி அறிமுகமானார்.

"வேலைக்காரன்" படத்தைத் தொடர்ந்து ரஜினி நடித்த படம் "ஊர்க் காவலன்." சத்யா மூவிஸ் தயாரிப்பு.

இந்தப் படத்திற்கான வசனத்தை ஏ.எல்.நாராயணன் எழுத, மனோபாலா டைரக்ட் செய்தார்.

பாடல்களை, புலமைப்பித்தன், முத்துலிங்கம், வாலி, வைரமுத்து, நா.காமராசன் எழுதினார். இசை: சங்கர் - கணேஷ்.

இந்தப் படத்தில் ரஜினிக்கு ஜோடி ராதிகா. சித்ரா, வரலட்சுமி, பாண்டியன், ஜனகராஜ், மலேசியா வாசுதேவன், சங்கிலி முருகன், மகேந்திரன், வெண்ணிற ஆடை மூர்த்தி ஆகியோர் நடித்தனர்.

4-9-1987இல் வெளிவந்த இந்தப்படம், நூறு நாள் ஓடியது.

### குரு சிஷ்யன்

ரஜினியும், பிரபுவும் முதன் முதலாக இணைந்து நடித்த படம் "குரு சிஷ்யன்."

பஞ்சு அருணாசலத்துக்காக, குறுகிய காலத்தில் ஒரு படத்தை தயாரித்து கொடுக்க விரும்பினார், ரஜினி.

இதுபற்றி, டைரக்டர் எஸ்.பி. முத்துராமனை அழைத்துப் பேசினார். இந்தப் படத்திற்கு 25 நாட்கள் கால்ஷீட் தருகிறேன். கௌரவ வேடத்தில் நடிக்கிறேன் என்று ரஜினி கூறினார்.

நீங்கள் கௌரவ வேடத்தில் நடிப்பதால், அது பஞ்சு அருணாசலத்துக்கு பெரிய அளவுக்கு உதவி செய்யாது. நீங்கள் ஹீரோவாக நடித்தால்தான் நன்றாக இருக்கும். நீங்கள் கொடுக்கும் 25 நாம் கால்ஷீட்டிலேயே படத்தை எடுத்து விடலாம் என்று முத்துராமன் சொன்னார்.

"அது எப்படி முடியும்? படத்தை முடிக்க 45 நாட்களாவது வேண்டாமா?" என்று கேட்டார், ரஜினி.

அதற்கு முத்துராமன், "இரண்டு ஹீரோக்கள் உள்ள நல்ல கதை ஒன்று இருக்கிறது. நகைச் சுவை கலந்த வேடம்.

(தொடரும்)

# கருவாச்சி காவியம்



## வைரமுத்து- 91

...கல கல கலன்னு வளவி பேசுறது பாதி சல சல சலன்னு அவர் வாய் பேசுறது. பாதி வளவிச் சத்தத்துல நீட்டிருவாக பொம்பளைக கைய. வாய்த்த பட்டியத்துலயே இவரு மாட்டிருவாரு வளவிய.

நூல்கயித்துல கோத்திருக்கிற இருபது தோடா வளையலையும் ரெண்டு திருகுத் திருகி ஒரு முறுக்கு முறுக்கி எறக்கி வப்பாரு பாருங்க..

ராசா வீட்டுப் பிள்ளைய வேலக்காரன் தரையில எறக்கி விடுறமாதிரி அம்புட்டுப் பக்குவமா எறக்கிவப்பாரு.

அவரு ஆயுசில ஒத்த வளவி ஒடஞ்சதில்லை.

கடை விரிச்சு ஊரக் கூட்டி வர்ணிப்பாரு பாருங்க வளவிய சும்மா கெறக்கம் வந்திரும் கெழவிகளுக்கும்.

யம்மா! நீ வானவில்லப் பாத்திருப்பீக.


அது ஏழு நெறம். அதுக்கு மேக் கொண்டதம்மா என் வளவி.

இது ஒம்போது நெறம்.

இந்தா அடுக்கி வச்சிருக்கேன்.

எண்ணிப் பாத்துக்குங்க.

பச்சை, செவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், காப்பி, நீலம், செந்தூரம், வெள்ள, ஊதா, சும்மா கண்ணப் பறிச்சு மின்னும் கண்ணாடி வளையல் என்னிய எடுத்துக்கிரியாம்மா என்னிய எடுத்துக்கிரியான்னு எல்லா நெறமும் கூப்பிடும்.



எந்தப் பொம்பள கண்ணு எந்த நெறத்துல [illegible] இந்த வளையல எடுத்து சும்மா போட்டுப் பாரு தாயின்னு மாட்டி விடுவாரு.

ஒரு பொம்பள கை பெறந்த ராசியப் பாத்தவுட்னயே அது என்னா அளவுன்னு அவரு கண்ணு சொல்லிப்படும்.

வளவிக்கு நெறம் ஒம்போதுங்கிற மாதிரியே வளவி போடுற பொம்பளைக கை இளவும் ஊர் தேசம் பூரா சுத்துனாலும் ஒம்போதுக்குள்ளதான் அடங்குது.

அரையரைக்கா முக்கா முக்காலேயரைக்கா ஒண்ணரை ரெண்டு ரெண்டேயரைக்கா ரெண்டேகால ரெண்டே காலரைக்கா இதுதான் பொதுவா பொம்பளைக கைகளுக்குன்னு ஒலகத்துல ஒண்டான அளவு.

என்னமோ தொட்டிலை ஆட்டுற கை தொல்லுலகை ஆள்ற கையின்னு பாட்டுக் கட்டி பாடுறாகளே ஒலகத்துல எந்தக் கையா இருந்தாலும் இந்த ஒம்போதுக்குள்ள அடக்கம். சிலதுக யானைக் காலக் கையின்னு வச்சு பொறந்திருக்கும்.

அதுகள்லாம் கணக்குல சேராது.

சுப்பஞ்செட்டியாரு ஒரு பொம்பளைக்கு வள்வி மாட்டிவிட்டாருன்னா அந்தப் பொம்பள வேற ஊருக்கு வாக்கப்பட்டுப் போனாலும் சுப்பஞ்செட்டயார் இந்த ஊருக்கு வார வரைக்கும் வேற யாருக்கிட்டயும் வளவி போடாமாட்டா.

வளவி போட வார எல்லாப் பொம்பளையும் மக மாதிரிதான் பாப்பாரு மகராசன்.

அவர் வளவி போடுறசோங்கும் பாங்கும் வேற யாருக்கும் சொல்லிக் குடுத்தெல்லாம் வராது.

வளவி போடுற பிள்ள கையை நிட்னவுடன அத வாங்கி வசதி பண்ணி லேசா ஒரு சொடக்கெடுத்து விடுவாரு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரங்களை பகிர்ந்து கொள்வதற்கு தமிழ்க் கூட்டமைப்பு முன்வர வேண்டும்

## ஆனந்தசங்கரி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அதிகார பரவலாக்கலையும், ஜனநாயகத்தையும் இலங்கை அரசிடம் கோரி நிற்கும் நாம் நமக்கு கிடைக்கும் அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளவும், ஜனநாயக வழிமுறைகளை மேற்கோள்ளவும் பழகிக் கொள்ள வேண்டும். கிழக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளின் உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அக்கட்சிகளின் தலைவர்களையோ, உறுப்பினர்களையோ கலந்து ஆலோசிக்காமல் தமிழரசுக் கட்சி மட்டும் தனது உறுப்பினர்களை அமைச்சர்களாக தொவு செய்வதென்பது மீண்டும் மீண்டும் தமிழ் மக்களை படுகுழிக்குள் தள்ளுவது போன்றதொன்றாகும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.



இதேபோன்றுதான் பல விடுதலை அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்ட விடுதலைப்போராட்டம், பின்னர் தமிழரசுக் கட்சி இப்போது நடக்கின்ற ஆணவப் போக்கைப் போன்று, விடுதலைப் புலிகளாலும் மேற்கோள்ளப்பட்டு தாங்கள் தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று கூறி, ஏனைய அமைப்புகளின் தலைவர்களை அழித்து விட்டு கடைசியில் தமிழ் மக்களை முள்ளிவாய்க்காலில் பழிகொடுத்ததுதான் அதன் விளைவாக அமைந்தது. இது அவர்களின் ஆணவப் போக்கு. ஆணவம் அழிவிற்கு வழிவகுக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

அதேபோன்று தமிழரசுக் கட்சியும், அதன் தலைவர்களும் இவ்வளவு அனர்த்தங்களையும், உயிர் இழப்புகளையும் தமிழ் மக்கள் அனுபவித்து, வேதனையின் விளிம்பில் துவண்டு கொண்டிருக்கின்ற நேரத்திலும் இவ்வாறான போக்கையே தொடர்ந்தும் கடைப்பிடிக்கின்றார்கள். ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களை தங்கள் பக்கம் சேர்த்துக் கொண்டு தாங்கள்தான் பலமான கட்சி என்று ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கி உலகிற்கு ஜனநாயகம் என்ற போலி வேட த்தை காட்டிக் கொண்டிருக்கின் றார்கள்.

இலங்கை அரசு மீது சர்வதேச விசாரணை வேண்டும் என்று ஒரு சாராரும் வேண்டாம் என்று ஒரு சாராரரும் அறிக்கை விட்டுக் கொண்டு தமிழ் மக்களை குழப்பத்திற்கு ஆளாக்கி குளிர்காய நினைக்கின் றார்கள்.

கடந்த சில ஆண்டுகளாகவே தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் இதை வழக்கமாகவே கொண்டுள்ளார்கள். தங்களின் பதவி சுகத்திற்காக தமிழ் மக்களை பலிக்கடாய் ஆக்குகின்றார்கள். தொடந்து இந்த நிலை நீடித்தால் தமிழ் மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.

எனவே தமிழரசுக் கட்சியின் ஆணவப்போக்கையும் அதன் தான தோன்றித்தனத்தையும் இனிமேலும பொறுத்துகொள்ளாமல் ஒரு முடிவு எடுக்க வேண்டிய தருணம் இது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து, தமிழ் தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, ஒரு ஜனநாயக அமைப்பை உருவாக்க வேண்டிய நேரம் வந்து விட்டது. புத்தி ஜீவிகளும், தமிழ்த் தலைவர்களும், ஜனநாயகத்தை விரும்பும் அனைத்து மக்களும் ஒன்று சேர்வோம் ஒரு புதிய அணியை உருவாக்குவோம் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# தீக்காயங்களுடன் இளம் குடும்பப்பெண் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

இளம்குடும்பப் பெண் ஒருவர் உடலில் எரிகாயங்களுக்கு உள்ளானநிலையில் நேற்று அதிகாலை 2 மணியளவில் மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி வதிரியைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தரின் மனைவியான பிரதீபன் சரண்யா (வயது-24) என்பவரே இவ்வாறு எரிகாயங்களுடன் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியாவில் கடமைபுரியும் பிரஸ்தாப பொலிஸ் உத்தியோகத்தர் கச்சைதீவு புனித அந்தோனியார் திரு விழாவுக்கு பாதுகாப்புப் பணியின் நிமிர்த்தம் சென்றுவிட்டு கரவெட்டி வதிரியிலுள்ள தனது வீட்டிற்கு சென்றுள்ளார் எனவும் பிரஸ்தாப பொலிஸ் உத்தியோகத்தர் வீட்டில் இருந்த பொழுதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-3-60)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 70 | 120 |
| உருளைக்கிழங்கு | 50 | 80 | 60 | 90 |
| பச்சைமிளகாய் | 100 | 140 | 120 | 120 |
| தக்காளி | 50 | 80 | 140 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 50 |
| கோவா | 50 | 80 | 70 | 80 |
| கரட் | 200 | 100 | 140 | 160 |
| பூசணி | 100 | 100 | 70 | 120 |
| புடோல் | 60 | 80 | 70 | 100 |
| வாழைக்காய் | 100 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 110 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 120 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 130 | 120 |
| லீக்ஸ் | 200 | 150 | 120 | 160 |
| பீற்றூட் | 60 | 80 | — | 80 |
| கறிமிளகாய் | 250 | 200 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 600 | — | 320 |
| போஞ்சி | 200 | 200 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 100 | 40 | — |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 40 | 40 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 50 | 40-60 |
| இராசவள்ளி | 100 | 150 | — | 120 |
| வெங்காயப்பூ | 60-90 | 140 | — | 160 |

# காய்ச்சலிருந்து பாதுகாப்பது எப்படி?

இன்புளுவென்சா H1N1 என்பது புளு (Flu) காய்ச்சல் போன்ற நோயாகும். இந்நோய் ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு மூக்கிலிருந்து வெளியேறும் சளி மற்றும் இருமும் போதும் வெளியேறும் கிருமிகள் மூலம் தொற்றுகிறது. இந்நோய் முன்னர் பன்றிக் காய்ச்சல் என்றழைக்கப்பட்டது. ஆயினும் இந்நோய் பன்றிகளிலிருந்து தொற்றுவதில்லை என்ற காரணத்தால் இப்பொழுது "பன்றிக்காய்ச்சல்" என்றழைக்கப்படுவதில்லை. இது ஒரு புதிய வகை வைரஸ் கிருமியினால் ஏற்படும் நோய். ஆகையால் பெரும்பாலான மக்கள் இந்நோய்க்கான எதிர்ப்பு சக்தியை கொண்டிருப்பதில்லை. ஆகவே இந்நோய் மிகவும் வேகமாக பரவி வருகின்றது. இது சிறு பிள்ளைகள் மற்றும் இளம் வயதினர் மத்தியில் அதிகமாக பரவுகின்றது.

### குணங்குறிகள்

பொதுவாக இது ஒரு சாதாரண நோயாகும். ஆகவே தேவையற்ற பதற்றம் அடையத் தேவையில்லை. பொதுவான குணங்குறிகளாவன,

காய்ச்சல், தலையிடி, உடல் வலி, தொண்டை வலி, இருமல், மூக்கிலிருந்து சளி வடிதல், சில வேளைகளில் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்படும்.

இது சாதாரண தடிமன் போன்றது. ஆகவே மற்றைய இன்புளுவென்சா காய்ச்சல் வகைகளிலிருந்து வேறுபடுத்தி இனங்காண்பது கடினமானது. இந்நோய் சில நோயாளிகளிலிருந்து நியூமோனியா காய்ச்சலாக மாறக்கூடிய வாய்ப்புண்டு. இவ்வாறு நியூமோனியா காய்ச்சலாக மாறுமிடத்து மூச்சு விடுதல் கடினமாக இருக்கும். மேலும் கடுங்காய்ச்சலாகக் காணப்படக் கூடும். அல்லது காய்ச்சல் காணப்படாமலும் நோய் கடுமையாகும்.

### மேற்கூறிய குணங்குறிகள் காணப்படின் செய்யப்பட வேண்டியவை

குணங்குறிகள் அகலும் வரை நோயாளி படுக்கையில் ஓய்வெடுத்தல், சன நெருக்கடி மிகுந்த இடங்களைத் தவிர்த்தல், இது நோய் பரவுதலை தடுக்கும், போசாக்கு மிகுந்த உணவு வகைகளையும் அதிகளவு நீராகாரங்களையும் உட்கொள்ளுதல், குடும்ப வைத்தியரிடம் குணங்குறிகளுக்கான வைத்திய ஆலோசனை பெறுதல், சாதாரண நோய்க்கு விசேட வைத்திய சோதனைகள் மற்றும் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுதல் முதலியன தேவையில்லை, சவர்க்காரம் கொண்டு கைகளை அடிக்கடி கழுவுதல், தும்மும் போதும் இருமும் போதும் கைக்குட்டையை உபயோகித்தல், பேப்பர் டிசு (Tissue) உபயோகிப்பின் அதை உரிய முறையில் அகற்ற வேண்டும். எக்காரணம் கொண்டும் கைகளை உபயோகிக்கக் கூடாது. கைகளின் மூலம் மற்றைய இடங்களைத் தொடும்போது இவ் வைரஸ் மற்றைய இடங்களுக்கும் பரவக்கூடும்.

அரிதாக சிலரில் இந்நோய் முற்றி நியூமோனியாவாக மாறக் கூடும், அல்லது வலிப்பு ஏற்படக் கூடும். மேலும் தடுமாற்றம், மாறுபட்ட விழிப்புணர்வு ஏற்படக்கூடும்.

- கீழக் காணப்படும் குணங்குறிகள் காணப்படின் வைத்திய ஆலோசனை பெற வேண்டும்.

கடுங்காய்ச்சல், மூச்சுவிடுதல் கடினமாதல், மாறுபட்ட விழிப்புணர்வு, குணங்குறிகளின் கடுமை அதிகரித்தல், உடல் சோர்வு.

### இந்நோய்க்கு சிகிச்சை உண்டா?




இந்த நோய் பற்றிய ஆய்வுகள் நோய் முற்றிய நோயாளிகளுக்கும் நோய் ஆபத்து சாத்தியக்கூறுகள் அதிகமானவர்களுக்கும் மட்டுமே அவசியமாகும். ஆகவே எல்லோரும் பதற்றப்படவோ வைத்திய பரிசோதனைகள் செய்ய வேண்டிய அவசியமில்லை. இந்நோய் கடுமையாகுமிடத்து அதை எதிர்கொள்ளத் தேவையான வளங்களும் மருந்துகளும் நம் நாட்டில் உண்டு. ஆகவே இதைக் குறித்து கவலையடையத் தேவையில்லை.

### அதிக கவனம் எடுக்க வேண்டியவர்கள் யார்?

கடுமையாக நோய் வாய்ப் படக்கூடிய சாத்தியக் கூறுகள் அதி கம் உள்ளவர்கள், 2 வயதிற்கு உட்பட்டவர்கள், 65 வயதிற்கு மேற்பட்டவர்கள், கர்ப்பிணிகள், நீரிழிவு, ஆஸ்துமா, சிறுநீரக நோய், புற்றுநோய் உள்ளவர்கள் பிரட்னிசலோன் (Prcdnisolone) மருந்து நீண்ட காலமாக பாவிப்பவர்கள்.

ஆகவே நீங்கள் மேற்குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தவராயின் அதிக கவனம் எடுக்க வேண்டும்.

### இந்நோயிலிருந்து பாதுகாப்பது எப்படி

சன நெருக்கடி மிகுந்த இடங்களைத் தவிர்த்தல், சவர்க்காரம் கொண்டு அடிக்கடி கை கழுவுதல், வாய் மற்றும் மூக்கு பகுதிகளை தேவையின்றி தொடுவதைத் தவிர்த்தல், மூக்கால் நீர், சளி வடியும் நோயாளிகளிடமிருந்து குறைந்தது ஒரு மீற்றர் தூரம் தள்ளி நிற்றல், வீடுகளிலும் அலுவலகங்களிலும் யன்னல்களை திறப்பதன் மூலம் காற்றோட்டத்தை அதிகரிக்கச் செய்தல், Mask உபயோகிப்பின் மூக்கையும் வாயையும் மூடக் கூடியதாக சரியான முறையில் அணியப்பட வேண்டும். தவறான உபயோகம் நோய் தொற்றும் சாத்தியக்கூறுகளை அதிகரிக்கும். நோய் தொற்றுதலை தவிர்க்க ஒரு சுகதேகி Mask அணிவதை பார்க்கிலும் நோயாளி நோய் பரவுதலை தடுக்க Mask அணிவது சிறந்தது.

**DR. இ.தெய்வேந்திரன்**
MBBS(Cey) MSC (Community Medicine)
முன்னாள் மாநகர சுகாதார வைத்திய அதிகாரியும்
உதவி பிராந்திய சுகாதார பணிப்பாளரும்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை உறுப்பினர்களின் மனவருத்தங்களினால் கிழக்கு ஸ்திரத்தன்மைக்கு எதனையும் செய்ய முடியாது

## ஹசனலி தெரிவிப்பு

(கொழும்பு)

**கிழக்கு மாகாண சபை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையில் அனைத்து கட்சிகளினதும் ஆதரவுடன் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. இதற்கு அக்கட்சிகளின் தலைவர்களினதும், உயர்மட்டத்தினதும் பூரண ஆதரவுள்ளது. எனினும், சில மாகாண சபை உறுப்பினர்களின் மன வருத்தங்களினால் இம்மாகாண சபையின் ஸ்திரத்தன்மைக்கு எதனையும் செய்ய முடியாது. இவ்வாறு இராஜாங்க சுகாதார அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான ஹசனலி தெரிவித்துள்ளார்.**

கிழக்கு மாகாண சபையில் அமைச்சரவை நியமனம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் கிழக்கு மாகாணசபை கலைக்கப்படக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் கிழக்கிலிருந்து வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே இராஜாங்க அமைச்சர் ஹசனலி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துக் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குமிடையில் எந்தவிதமான முறுகல் நிலையும் இல்லை. இவ்வாறான கருத்துக்களை எமக்கு எதிரான சிலர் வேண்டுமென்றே பரப்பி வருகின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க, இரா.சம்பந்தன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகிய கட்சித் தலைவர்களுக்கிடையில் உடன்பாடு உள்ளது.

இதற்கமையவே தற்போது கிழக்கு மாகாண சபை செயற்பட்டு வருகின்றது. கட்சிகளுக்கிடையில் எந்த வித பிரச்சினையும் இல்லை. எனினும், கட்சி உறுப்பினர்களிடையே தனிப்பட்ட பிரச்சினைகள் இருக்கலாம். இது கிழக்கு மாகாண சபை பிரச்சினையாக கருதுவதை விட அக்கட்சிப் பிரச்சினையாகவே பார்க்க வேண்டும்.

அவர்களுக்கு ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் அது தொடர்பில் அவர்களது கட்சித் தலைவருடன் பேச்சு நடத்துவதே சிறந்தது எனக் கருதுகின்றேன்.

கிழக்கின் முதல்வர் விடயத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு தீர்மானமெடுக்கும் முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி மைத்திரிபால தந்திருந்தார்.

இதற்கமைய ஹாபிஸ் நஸீர் அஹமட் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். மாகாண சபை கலைக்கப்படும் என பேச்சில் குறிப்பிட்டாலும் நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னரே அதனைச் செய்ய முடியும். இது ஒருபோதும் சாத்தியப்படாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## சமிதாவிற்கு நட்டஈடு வழங்க போதியளவு பணமில்லையாம்

### பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

வைத்தியர் சமிதா சமன்மலிக்கு நட்டஈடு வழங்குவதற்கான போதியளவு பணம் இல்லையென பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் பணிப்பாளர் நாயகம் மல்லிக்கா கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற விபத்தொன்றில் சிக்கி ஊனமுற்ற கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வைத்தியர் சமிதா சமன்மலிக்கு 18 மில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்க வேண்டும் என கடந்த 27ஆம் திகதி பண்டாரநாயக்க-சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் நிர்வாகத்திற்கு கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனினும் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் வருடாந்த வருமானம் 200 மில்லியன் மட்டுமே எனவும் குறித்த நட்டஈட்டு தொகையினை வழங்குவதற்கு போதியளவு பணம் எம்மிடம் இல்லையென அதன் பணிப்பாளர் நாயகம் மல்லிக்கா கருணாரத்ன மேலும் தெரிவித்தார். (இ-5)

## பகிஷ்கரிப்பு படுதோல்வி

(கொழும்பு)


தனியார்பேருந்த உரிமையாளர்களால் நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்ட பணிப் பகிஷ்கரிப்பு தோல்வியடைந்துள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

மேலும் சுமார் 1,500 பேருந்துகள் மாத்திரமே நேற்றைய பணி பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனை தெரிவித்தார். தமது சங்கத் தின் கீழ் 22 ஆயிரம் பேருந்துகள் உள்ளதாகவும் அவர் மேலும தெரிவித்தார். (இ-5)





சாகி சாகித்தியா




மோகன் ராஜ்




பவானி சங்கர்




ரகு ரகுராம்




தனு தனுசன்



மாது மாதுசன்





**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

noolaham.org | aavanaham.org

# தி.மு.க-வும் அ.தி.மு.க-வும் ஒழிந்தால்தான் தமிழ்நாடு உருப்படும்!

## ராமதாஸ் தாண்டவம்


ராமதாஸ்

"காலங்கள் மாறும்... காட்சிகள் மாறும் என்பது இயற்கையின் நியதி. வரலாற்று விதி. அதுதான் இதுவரை நடந்துகொண்டிருக்கிறது. இனியும் நடக்கும். ஆனால், எது மாறினாலும் என்னைப் பற்றி கட்டமைக்கப்பட்ட தவறான சில அபிப்பிராயங்கள் மட்டும் மாறவில்லை. அதை மாற விடாமல் தடுப்பது சில ஊடகங்கள்தான். அவை என்னைப் பற்றி தவறான பிரசாரங்களைத் தொடர்ந்து செய்துகொண்டே இருக்கின்றன.

சரி... பேட்டி எனக் கேட்கிறீர்கள். என் விளக்கத்தைச் சொல்ல இதை ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொள்கிறேன்" - கொஞ்சம் கோபம், நிறைய ஆதங்கத்துடன் தைலாபுரம் தோட்டத்தில் தயாராகிறார் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸ்.

**"உங்களுக்கு எதிராக ஊடகங்கள் வைக்கும் தவறான அபிப்பிராயங்கள் என எதைச் சொல்கிறீர்கள்?"**

"வன்னியர்கள் இடஒதுக்கீடு கேட்டு நடைபெற்ற போராட்டத்தில் விழுந்த மரங்களை நான் வெட்டியதாக இன்னும் சொல்கிறார்கள். ஆனால், அப்போது அரசாங்கம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களைப் பற்றி இவர்கள் எதுவும் பேசுவது இல்லை. "நான் மரம் நட்டால், வெட்டியதற்குப் பிராயச்சித்தமாக நடுகிறீர்களா?" என்கிறார்கள். ஜாதி, தேர்தல் கூட்டணி, வாரிசு அரசியல் என எல்லாவற்றிலும் மற்றவர்களுக்கு ஒரு பார்வையையும்... எங்களுக்கு என ஒரு பார்வையையும் இந்த ஊடகங்கள் முன் வைக்கின்றன. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, மரக்காணத்தில் ஒரு கலவரம் நடைபெற்றது. அதில் எனக்கு எந்த சம்பந்தமுமில்லை. ஆனால், அதற்குக் காரணம் நான்தான் என்று அவர்கள் இன்னமும் கூச்சல் போட்டுக்கொண்டிருக் கின்றனர். தலித் மக்களுக்கு நாங்கள் எதிரானவர்கள்போல தொடர்ந்து சித்திரிக்கிறார்கள்."

**"ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும், 'இனிமேல் திராவிடக் கட்சிகளோடு கூட்டணி இல்லை. தேசியக் கட்சிகளோடு கூட்டணி இல்லை' எனச் சொல்கிறீர்கள். ஆனால், தேர்தல் சமயத்தில் அந்த நிலைப்பாட்டை உடனடியாக மாற்றிக்கொள்கிறீர்களே... ஏன்?"**

"தேர்தல் சமயத்தில் தி.மு.க., அ.தி.மு.க கட்சிகளோடு கூட்டணி வைத்ததற்காக, நான் தமிழ்நாட்டு மக்களிடம் பல முறை மன்னிப்புக் கேட்டிருக்கிறேன். எதிர்காலத்தில் இப்படி ஒரு கேள்வி எழக்கூடாது. இதுபோன்ற விமர்சனம் வரக்கூடாது என்பதற்காகத்தான், எங்கள் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளரை இப்போதே அறிவித்துவிட்டோம். நாங்கள் மாறி மாறி கூட்டணி வைப்பவர்கள் என்ற வாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கத்தான் இந்த முடிவு."

**"கூட்டணியில் இருக்கும்போதே அன்புமணியை முதலமைச்சர் வேட்பாளராக அறிவித்தது கூட்டணி தர்மத்தை மீறிய செயல் என்கிறதே பா.ஜ.க?"**

"அரசியலில், கூட்டணி தர்மம் என்ற ஒன்று இல்லவே இல்லை. எங்களுடைய அனுபவத்தில் இதை நாங்கள் உணர்ந்துகொண்டோம். தமிழகத்தில் உள்ள பெரிய கட்சிகளுடன் கூட்டணி வைத்து நாங்கள் தேர்தலைச் சந்தித்த போதெல்லாம், நாங்கள் வெற்றி பெற்றுவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் எதிர் அணி கட்சிக்கு வாக்களித்தார்கள். அதற்குக் காரணம், எங்கள் வளர்ச்சி அவர்களுக்கு உறுத்தலாக இருந்தது. குறிப்பிட்ட தொகுதியில் நாங்கள் வெற்றி பெற்றுவிட்டால், மீண்டும் அதே தொகுதியைக் கேட்போம் என்பதற்காக, இப்படி உள்ளடி வேலைகளைச் செய்தார்கள். அதனால்தான் கூட்டணி தர்மம் என்ற வார்த்தையைக்கேட்டாலே எனக்கு எரிச்சல் வரும். குறைந்தபடச செயற்திட்டத்தின் அடிப்படையில் கட்சிகள் எல்லாம் சேர்ந்து கூட்டணி அமைக்கும் போதுதான், கூட்டணி தர்மம் என்ற ஒன்று நிலைநிறுத்தப்படும். அதற்காக உருவாக்கப்பட்ட அறிக்கையில் ஒவ்வொரு கட்சியும் கையெழுத்துப்போட வேண்டும். வட இந்தியாவில் அந்த நடைமுறை உள்ளது. தமிழ்நாட்டில் அதுபோன்ற நிலை இதுவரை இல்லை. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் போதும் அப்படி ஒரு குறைந்தபட்ச செயற்திட்டம் உருவாகவில்லை. 'நீ ஒரு தொகுதியில் நிற்கிறாய்... அங்கு நான் உன்னை ஆதரிக்கி றேன். நான் ஒரு தொகுதியில் நிற்கிறேன். அங்கு நீ என்னை ஆதரி' என்ற அடிப்படை யிலான தொகுதி உடன்பாடு அது. தேர்தலுக் குப் பின் நீ யாரோ... நான் யாரோதான்."

**"அப்படியானால் பா.ஜ.க., பா.ம.கவுக்கு உள்ள கூட்டணி முறிந்துவிட்டதா?"**

"மத்தியில் உள்ள பாரதிய ஜனதாவோடு எங்கள் கூட்டணி தொடர்கிறது. ஏனென்றால், வரும் ஐந்து வருடங்களுக்கு மோடி தலைமையிலான மத்திய அரசுக்கு முழுமையான ஆதரவு தெரிவிக்கிறோம் எனச் சொல்லி, நாங்கள் குடியரசுத் தலைவரிடம் கடிதம் கொடுத்துள்ளோம். அதனால், நாங்கள் தொடர்கிறோம். மாநிலத்தில் உள்ள பாரதிய ஜனதாவோடு கூட்டணி இல்லை என நாங்கள் இதுவரை சொல்லவில்லை. ஆனால், மாநிலத்தில் எங்களுடைய தலைமையை ஏற்றுக்கொண்டு பாரதிய ஜனதா வந்தால், கூட்டணி தொடரலாம்!"

**"ஸ்ரீரங்கம் இடைத்தேர்தலை ஒட்டி வெளியிட்ட அறிக்கையில் 'இடைத்தேர்தல் அவசியமற்றது' என்ற ஒரு கருத்தை முன்வைத்துள்ளீர்களே?"**

"பெண்ணாகரம் இடைத்தேர்தலிலிருந்து இதை நான் வலியுறுத்திவருகிறேன். இடைத்தேர்தல் வரும் சூழ்நிலை ஏற்பட்டால், அங்கு ஏற்கனவே வெற்றிபெற்ற கட்சிக்கே, அந்தத் தொகுதியைக் கொடுத்துவிடலாம். ஏனென்றால், இடைத்தேர்தலின்போது அந்தத் தொகுதியில் போட்டியிடும் ஆளும் கட்சி விதிமுறை மீறல்களில் ஈடுபடுகிறது. ஒரு ஓட்டுக்கு கொடுக்கப்படும் தொகை ஒவ்வொரு இடைத் தேர்தலுக்கும் அதிகரித்துக்கொண்டே போகிறது. திருமங்கலத்தில் 2,000 ரூபாய் கொடுக்கப்பட்டது. இப்போது திருவரங்கத்தில் அது 5,000 ரூபாயாக உயர்ந்துள்ளது. வீட்டுக்கு வீடு பணம் கொடுத்து ஓட்டு வாங்கியிருக்கிறார்கள். [illegible] யிலும்தான் தேர்தல் நடைபெற்றது. யாராவது ஒரு பைசா கொடுத்தார்களா? இல்லையே!"

**"முதலமைச்சராக ஜெயலலிதா இருந்த காலகட்டத்தை எப்படிப் பார்க்கீறீர்கள்?"**

"தமிழ்நாட்டில் முதலமைச்சராக இருந்த போது செய்த ஊழலுக்கு ஜெயலலிதா தண்டிக்கப்பட்டார். அவர் தவறு செய்தபோதும் முதலமைச்சராக இருந்தார் தண்டிக்கப்பட்ட போதும் முதலமைச்சராக இருந்தார். இது இந்தியாவின் ஜனநாயகத்துக்கு ஏற்பட்ட மிகப் பெரிய தலைக்குனிவு. 1991-1996 இல் செய்தது ஊழல். 2001-2006 காலகட்டத்தில் செய்தது ஊழலோ ஊழல். அதன் பிறகு, 2011 முதல் தற்போதைய அ.தி.மு.க அரசில் நடப்பது இமாலய ஊழல். அ.தி.மு.க-காரன் தான் தங்கள் கட்சித் தலைவியை மீட்டுக் கொண்டுவர மண்சோறு சாப்பிடுகிறான். பால் அபிஷேகம் பண்ணுகிறான். நெய் ஊற்றுகிறான். இந்த அபத்தங்களை மக்களிடம் எடுத்துச் சொல்லவேண்டிய சில ஊடகங்களும் மௌனமாக இருப்பது வேதனை. நாட்டில் ஊழல்... சிறைக்குப்போன முதலமைச்சர்... வளர்ச்சி இல்லாத மாநிலம்... இதுதான் ஜெயலலிதாவின் நிர்வாகத்திறன். இதுதான் அவரது சாதனை."

**"கவர்னரிடம் கொடுத்த புகாரில் முக்கியமான ஊழல்களாக நீங்கள் எதைப் பட்டியலிட்டுள்ளீர்கள்?"**

"தமிழகத்தில் நடைபெறும் ஊழல்கள் தொடர்பாக கவர்னரிடம் மொத்தம் 209 பக்க ஆதாரங்களைக் கொடுத்துள்ளோம். விசாரணை என வரும்போது, அதை நாங்கள் விசாரணை அமைப்பிடம் தாக்கல் செய்வோம். தாதுமணல் கொள்ளையில் நடந்த ஊழல், கிரானைட் கொள்ளையில் நடைபெற்றுள்ள ஊழல், ஆற்று மணல் அள்ளுவதில் நடைபெற்றுள்ள ஊழல்... என வரிசையாகச் சொல்லலாம். நிலக்கரி ஊழல், 2ஜி ஸ்பெக்ரம் ஊழலைவிட மிகப் பெரிய ஊழல் தமிழகத்தில் நடந்திருக்கிறது. இந்தத் தொகை சரியாக தமிழகத்தின் அரசு கஜானாவுக்கு வந்திருந்தால், பட்டிதொட்டியெங்கும் இன்பம் கொட்டிக்கிடந்திருக்கும்!"

**"தமிழகத்தில் தற்போது நடக்கும் அ.தி.மு.க ஆட்சிக்கு எவ்வளவு மதிப்பெண்கள் கொடுப்பீர்கள்?"**

"விவசாயத் துறையில் தமிழகம் அடைந்துள்ள வளர்ச்சிதான், தமிழக அரசுக்கு நான் கொடுக்கும் மதிப்பெண்கள். அந்த வகையில், விவசாயத் துறையின் வளர்ச்சி மைனஸ் 2. அதையே தமிழக அரசுக்கும் நான் கொடுக்கிறேன்."

**"முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தின் செயற்பாடு எப்படி?"**

"பன்னீர்செல்வம் எங்கு செயற்படுகிறார்? 'தமிழகத்தை நான் ஆட்சி செய்யவில்லை. அம்மாதான் ஆட்சி செய்கிறார்' என அவரே சொல்கிறார். தஞ்சாவூர் பொம்மை கூட அந்தப் பக்கம் இந்தப் பக்கம் ஆடும். ஆனால், இந்தப் பொம்மை அதைக்கூட செய்ய மாட்டேன் என்கிறது!"

**"திராவிடக் கட்சிகளுடன் கூட்டணி கிடையாது எனச் சொல்லும், நீங்கள் தேசியக் கட்சிகளுடன் கூட்டணியில் தொடர்கிறீர்கள்... அவற்றைவிட திராவிடக் கட்சிகள் ஆபத்தா?"**

"தேசியக் கட்சிகளைவிட தி.மு.க-வும் அ.தி.மு.க-வும் நிச்சயம் ஆபத்தான கட்சிகள்தான். இந்த இரண்டு கட்சிகளும் 48 ஆண்டுகாலமாக மாறி மாறி ஆண்டு, தமிழ்நாட்டைச் சீரழித்துவிட்டன. இந்த இரண்டு கட்சிகளும் ஒழிந்தால்தான் தமிழ்நாடு உருப்படும். வேரோடும் வேரடி மண்ணோடும் இந்தக் கட்சிகளை வீழ்த்த வேண்டும். இந்த இரண்டு கட்சிகளும், நாட்டிலேயே இனி இருக்கக் கூடாது."

**"கூட்டணி இருந்தாலும் இல்லையென்றாலும் மற்ற கட்சித் தலைவர்களுடன் இணக்கமான ஒரு போக்கு உங்களுக்கு இருக்கிறது. குறிப்பாக, அரசியல் முரண்பாடுகளைத் தாண்டியும் கருணாநிதியுடன் நல்ல உறவைப் பேணுகிறீர்கள்? ஆனால், விஜயகாந்த் விவகாரத்தில் அப்படி நீங்கள் இல்லையே?"**


"என்னைப் பொறுத்தவரையில் நான் எல்லாத் தலைவர்களையும் மதிக்கிறேன். கலைஞர் ஒரு மூத்த தலைவர். எந்தப் பிரச்சினை என்றாலும், என்னால் அவரோடு உடனே பேச முடியும். அதனால்தான் அரசியல் முரண்பாடுகளைத் தாண்டியும் என் பேரன் பேத்தி திருமணத்துக்கு நான் அழைத்தேன். அவரும் வந்திருந்து வாழ்த்தினார். ஆனால், விஜயகாந்தைப் பொறுத்தவரை இதுவரை நான் அவரைச் சந்தித்ததும் இல்லை. பழகியதும் இல்லை. அவ்வளவுதான். அதனால் நீங்கள் சொல்வது போல் அவருடன் எந்த வெறுப்பும் இல்லை. விஜயகாந்துடன் மட்டும் அல்ல... வேறு எந்தக் கட்சித் தலைவருடனும் எனக்கு வெறுப்பு இல்லை... விருப்பு உண்டு!"

-ஆனந்த விகடன்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என்னைத் தேடி வலை விரிக்க வேண்டிய அவசியமில்லை

## குமார் குணரட்னம் தெரிவிப்பு



(கொழும்பு)

என்னைத் தேடி எவரும் வலை விரிக்க வேண்டிய அவசியமில்லை என முன் னிலை சோஷலிச கட்சி யின் அரசியல் சபை உறுப்பி னர் குமார் குணரட்ணம் தெரிவித் துள்ளார்.

கொழும்பு ஊடகமொன் றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

நான் தலைமறைவாக வாழ வில்லை. நானும் எனது கட்சி யினரும் பொது அரசியலில் ஈடுபட்டு வருகின்றோம்.

நான் இந்த நாட்டில் அரசியலில் ஈடுபடுவதற்கான உரிமை தொட ர்பில் போராடி வருகின்றேன்.

இதனால் என்னைக் காணவில்லை தலைமறைவாகிவிட்டேன் என எவரும் பதற்றம டையவோ, குழப்பமடையவோ தேவை யில்லை என குமார் குணரட்னம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# முகத்தை முழுமையாக மறைக்கும் கவசத்துக்குத்தடை

(கொழும்பு)

மோட்டார் சைக்கிள்களில் முகத்தை முழுமையாக மறைக் கும் தலைக்கவசங்களை அணிந்து கொண்டு பயணிப்பது, மார்ச் மாதம் 21 ஆம் திகதி முதல் தடை செய்யப்படும் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள் ளது.

முகத்தை முழுமையாக மறை க்கும் தலைக்கவசங்களை அணி ந்து கொண்டு மோட்டார் சைக்கி ள்களில் வந்து பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்து வருவதன் காரணத்தி னாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(இ-5)

# இந்தியப் பிரதமர் மோடி வடக்கில் என்ன பேசுவார்

## ஆராயப்பட வேண்டிய விடயம் என்கிறார் அத்துரலிய ரத்ன தேரர்

**இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கை வரும் போது வடக்குக்கும் யாழ்ப்பாணத்துக்கும் செல்லலாம். ஆனால் அவர் வடக்குக்குச் சென்று என்ன பேசப் போகின்றார் என்பது ஆராயப்பட வேண்டிய விடயம். இந்தியா, சீனாவை விட எமது பாதுகாப்பும் வளங்களும் முக்கியமானவையாகும் என்று ஜாதிக ஹெல உறு மயவின் தலைவரும் தூய்மையானதொரு நாளை அமைப்பின் தலைவருமான அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்துள்ளார்.**

இந்திய பிரதமர் மோடியின் இலங்கை வருகையின்போது எவ் வாறான உடன்படிக்கைகள் கைச் சாத்திடப்படப்போகின்றன என்பது குறித்து நாம் அறிந்திருக்க வேண் டும். சீபா போன்ற மற்றுமொரு உடன்படிக்கைக்கும் அனல் மின் நிலைய உடன்படிக்கைக்கும் இந் தியா தயாராகுவதாக தெரிகின்றது. இந்தியா, சீனா உள்ளிட்ட மேற் குலக நாடுகளின் உபாய ரீதியான செயற்பாட்டுக்குள் எமது நாடு சிக்கி விடக்கூடாது என்றும் தேரர் குறிப் பிட்டார்.

மேலும் ஜனாதிபதியையும் பாராளுமன்ற உறுப்பினர்களை யும் ஒரே தேர்தலில் தெரிவு செய் யும் மாற்றங்கள் அவசியம். அத்து டன் விருப்புவாக்கு முறையற்ற தேர்தல் முறை கொண்டுவரப் பட வேண்டும் என்றும் அவர் தெரி வித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சமூக நீதிக்கான அமை ப்பின் தொழில்சார் கலந்துரை யாடலில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் மேற்க ண்டவாறு தெரிவித்தார்.

அத்துரலிய ரத்ன தேரர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மிகவும் முக்கியமான கால கட்டத்தில் நாங்கள் இருக் கின்றோம். சீனா, இந்தியா போன்ற நாடுகளும் மேற்குலக நாடுகளும் எமது நாட்டில் தமது உபாய ரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சிக்கின்றன.

எமது நாட்டுக்கு தெற்கேயுள்ள மாலைதீவில் இந்தியாவின் உத வியுடன் பதவியில் இருந்த ஜனா திபதியை நீக்கிவிட்டு அமெரிக்கா பாதுகாப்பு நிலையம் ஒன்றை அமைத்துள்ளது. இந்நிலையில் இலங்கை இன்று பல நாடுகளின் உபாய ரீதியான தேவைக்கான செல்வாக்கு மிக்க நாடாக உள்ளது. துறைமுகம் மற்றும் எரிசக்தி ரீதி யில் இந்தியா உபாய ரீதியான செயற்பாடுகளை இலங்கையில் முன்னெடுக்கலாம்.

இலங்கைக்கும் இந்தியாவு க்கும் இடையில் தற்போது காண ப்படுகின்ற சீபா போன்று மற்று மொரு உடன்படிக்கையை இந்தியா இலங்கையுடன் முன்னெடுக்க லாம். குளிரூட்டப்பட்ட அறைகளில் இதற்கான பேச்சுக்கள் இடம்பெறு கின்றன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியாவுக்கு செல்கின் றார்.

இந்தியப்பிரதமர் மோடி இலங்கை வருகின்றார். மேலும் இலங்கை யில் அடுத்த ஆட்சியில் அமரப்போ வது யார் என்பது தொடர்பில் ஆரா யப்படுகின்றது. எனவே இவ்வா றான சர்வதேச ரீதியான உபாய செயற்பாடுகளுக்கு இடையில் எமது நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் வளங்களை பாதுகாப்பது தொடர் பில் நாங்கள் கவனமாகயிருக்க வேண்டும்.

குறிப்பாக இந்திய பிரதமர் மோடி யின் இலங்கை வருகையின் போது எவ்வாறான உடன்படிக் கைகள் கைச்சாத்திடப்படப் போகி ன்றன என்பது குறித்து நாம் அறிந் திருக்கவேண்டும். அனல் மின்நி லையம் ஒன்றுக்கான உடன்படி க்கை கைச்சாத்திடப்படும் நிலை காணப்படுகின்றது. இந்தியாவு க்கும் சீனாவுக்கும் தேவையா னதை இங்கு செய்ய முடியாது. இந்தியாவின் நகர்வுகள் குறித்து நாம் கவனமாக இருக்கவேண்டும். அறைகளில் திருட்டுத்தனமாக பேச்சுவார்த்தை நடத்தி எமது நாட் டின் தேசிய பாதுகாப்பையும் வள த்தையும் விற்க இடமளிக்க முடி யாது.

இந்திய பிரதமர் இலங்கை வரும்போது வடக்குக்கும் யாழ்ப்பா ணத்துக்கும் செல்லலாம். ஆனால் அவர் வடக்கு சென்று என்ன பேசப் போகின்றார் என்பது ஆராயப்பட வேண்டிய விடயம். இந்தியா சீனாவை விட எமது பாதுகாப்பும் வளங்களும் முக்கியமானவையாகும்.

தற்போது புதிய அரசாங்கத்தின் 100 நாட்கள் திட்டம் குறித்து பேசப் படுகின்றது. இதில் பல விடயங்கள் உள்ளன. எவ்வாறெனினும் அரசி யலமைப்பு திருத்தங்கள் மற்றும் ஊழலுக்கு எதிராக விசாரணைகள் என்பன கட்டாயம் இடம்பெற வேண்டும். ஜனாதிபதி முறை மையை மாற்றியமைக்க ஐக்கிய தேசிய கட்சிக்கு தேவை உள்ளது. காரணம் அடுத்த தேர்தலில் வெற் றிபெற்று ஆட்சியமைக்க அந்தக் கட்சி முயற்சிக்கின்றது. ஆனால் இந்த விடயத்தில் சுதந்திரக் கட்சி வேறு நிலைப்பாட்டில் உள்ளது. இந்த இரண்டு விடயங்களுக்குள் ளும் சிக்கிவிடாமல் நாம் இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## நாக்கு

**இந்த நாக்கு இருக்கே அது ரொம்ப பொல்லாதது. புலியாவது குகையை விட்டு வெளியே வந்துதான் வேட்டையை நடத்தும். ஆனால் இந்த நாக்கு வாய் என்கின்ற குகைக்குள் இருந்துகொண்டே வேட் டையை நடத்திவிடும். ஒருவருடைய நாக்கு என்ன பேசுகிறது என்பதை வைத்தே அவருடைய பண்பை புரிந்துகொள்ளலாம் அல்லவா. அது மட்டுமல்ல, ஒருவருடைய நாக்கைப் பார்த்தே அவருடைய நோய் களையும் புரிந்து கொள்ளலாமாம்.**

சுவையை அறிவதும் பற்கள் உணவுப் பொருட் களை மெல்லும் போது அதற்கு தோதாக தள்ளிக் கொடுக்கிறதும் இந்த நாக்குத்தான்.

பொதுவாக நாக்கு இளஞ்சிவப்பு நிறமுடையதாக இருக்கும். இதில் ஏதாவது மாறுதல் ஏற்பட்டால் உடம்பில் ஏற்பட்டிருக்கின்ற நோயை சுட்டிக்காட்டு வதாக அது இருக்கும்.

அதனால்தான் டாக்டர்கள் நோயாளிகளினுடைய நாக்கை பார்க்கிறதை ஒரு பழக்கமாக வைத்திருக் கிறார்கள். நாக்கு வழவழப்பாகவோ இரத்த சிவப் பாகவோ இருக்குமென்றால் ஈரலினுடைய இயக்க மின்மையை அது காட்டுகிறதாம்.

நாக்கு வெளிறிப் போயிருந்தால் இரத்த சோகை என்று தெரிந்துகொள்ளலாம். நாக்கு மஞ்சளாக இருந்தால் மஞ்சள் காமாலை என்று ஊகித்துக் கொள்ளலாம்.

வெளிறிய நாக்கில் ஆங்காங்கே கறுப்புத் திட்டுக் கள் இருந்தால் விற்றமின் பி-12 குறைபாட்டால் வருகின்ற இரத்தசோகை அது என்று தெரிந்து கொள் ளலாம்.

ஊட்டக் குறைவால் ஏற்படுகின்ற தோல் வெடிப்பு நோய் வந்தால் நாக்கு இரத்த சிவப்பாகிவிடும். இரத்த புற்றுநோய் இருந்தால் நாக்கும் ஈறும் வெளிறிப் போகின்றதோடு தடிப்பாகவும் ஆகிவிடும்.

இரத்தத்தோடு சம்பந்தப்பட்ட எதிர்ப்புசக்தி குறை வாக இருந்தால் வாயிலேயும் நாக்கிலேயும் புண் ஏற்படும். இரும்புச்சத்து குறைபாடு இருந்தால் வாயோ ரங்களில் வெடிப்பு ஏற்படும்.

புகை பிடிக்கிறது, மது அருந்துகிறது. இதனால் உள்நாக்கு எரியலாம். நீரிழிவு நோய் வியாதி உள்ள வர்களில் சில பேருக்கும் இது மாதிரி நமைச்சல் ஏற்பட லாம். இன்னும் இதுபற்றிய ஆராய்ச்சி நடந்துகொ ண்டே இருக்கிறது. அதனால்தான் நாக்கை நோய் காட்டும் கண்ணாடி என்று சொல்கிறார்கள்.

நோயை மட்டுமல்ல எங்களுடைய குணத்தைக் காட்டுகிறதும் நாக்குத்தான். எங்களுடைய பேச்சே எங்களுடைய பண்பாட்டைக் காட்டிக் கொடுத்துவிடும். தெளிவில்லாமல் பேசுகின்ற ஒருத்தர் என்ன பாடு படுத்துகின்றார் பாருங்கள்.

உங்கள் வீடு எங்கே இருக்கின்றது? பிள்ளையார் கோவிலுக்கு எதிரில். பிள்ளையார் கோவில் எங்கே இருக்கிறது? எங்களுடைய வீட்டுக்கெதிரில்.

உங்கள் வீடு எந்தத் தெருவில் இருக்கின்றது என்று கேட்கின்றேன். பிள்ளையார் கோவில் இருக்கும் தெருவில்தான் எங்கள் வீடு இருக்கின்றது.

பிள்ளையார் கோவில் எந்தத் தெருவில் இருக் கின்றது? எங்கள் வீடு இருக்கின்ற தெருவில்தான் இருக்கின்றது.

பிள்ளையார் கோவிலும் உங்கள் வீடும் எந்தத் தெருவில் இருக்கின்றன. நான் குடியிருக்கின்ற தெரு வில்தான். நீங்கள் குடியிருக்கின்ற தெரு எது என்று தான் கேட்கின்றேன். அதுதான் பிள்ளையார் கோவில் இருக்கின்ற தெரு என்று சொன்னேனே.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய உதயம் ஒன்றுக்கான ஆரம்பம்!



நேற்றைய தொடர்ச்சி...

...'TNA' பொறுமையுடன் கடைப்பிடித்துவரும் மிதவாதப் போக்கானது புலம்பெயர் தமிழ் மக்களிடையே செல்வாக்குமிக்க சில குழுக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கக்கூடிய பகுத்தறிவு பூர்வமான தெளி

**சண்டே லீடர் பத்திரிகையில் புதிய உதயம் ஒன்றுக்கான ஆரம்பம் என்னும் தலைப்பில் என். சத்தியமூர்த்தி எழுதிய ஆய்வுக் கட்டுரையின் மொழியாக்கம்**

**தமிழில்- யோகர்**

வானது எஞ்சிய பொறுமையற்ற ஏனையோரை மீண்டும் விரக்தியின் விளிம்பிற்கு தள்ளிவிட்டதொன்றாகிவிடாது.

**நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல்**

புதிய தலைமைத்துவமானது, தமிழ் மக்களது நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை நல்ல விதமாகவே தான் ஆரம்பித்துள்ளது. முறைப்படியான அதனது ஆரம்ப செயற்பாடாக, வட மாகாணத்திற்கு ஆளுநராக இருந்த முன்னாள் இராணுவ அதிகாரிக்குப் பதிலாக சர்வதேச அனைத்து மட்டங்களிலும் பரந்துபட்ட பல்வேறு அனுபவ அறிவு மிக்க ஓர் இராஜதந்திரியும் நாட்டின் பொதுமகனுமான எச்.எம். ஜி.எஸ். பலிகக் காரவின் நியமனத்தை TNA யும் தமிழ் பொது மக்களும் பரந்த நல்மனத்துடன் நோக்க வேண்டும். முக்கிய மான இந்த இரு தரப்புகளுக்கு மிடையில் தமிழ் மக்களது இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முன்னெடுப்புக்களை ஜனாதிபதி சிறிசேனவும் பிரதம மந்திரி விக்கிரமசிங்கவும் சேர்ந்தே மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கலாம். இந்த வகையில் தமிழர்களது உடனடி அக்கறைக்குரிய விடயங்களாகிய இராணுவத்தை விலக்கிக் கொள்ளுதல், விடுதலைப்புலிக் கைதிகளை விடுவித்தல், புலம்பெயர் தமிழர்களை மீள்குடியமர்த்துவதுடன் சர்வதேசமெங்கும் புகலிடம் தேடி புலம்பெயர்ந்து சென்றிருக்கும் தமிழ் அகதிகளையும் மீள் அழைத்துக் கொள்தல் போன்ற நடவடிக்கைகள் இவற்றில் அடங்கும். இதன் ஆரம்பமாக இந்தியாவிலுள்ள பெருந்தொகை இலங்கைத் தமிழ் அகதிகளது தொகுதியே ஒருமித்தவிதமாக கருத்திற்கொள்ளப்பட இருக்கின்றது. தற்போது வட மாகாணத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக அலகாக முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதியான சி.வி. விக்னேஸ்வரனை முதலமைச்சராகக் கொண்டு அவர் தலைமையில் இயங்கிவரும் வடமாகாண நிர்வாகம் இப்போது அரசியல்தீர்வுக்கான அரசியல் விடயங்களை சபையின் ஏனையோரிடம் விடுத்து சபையின் சட்ட விதிமுறைக்குட்பட்ட சமூக மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை நகர்த்திச் செல்ல முடியும். ஒரு காலத்தில் கொழும்பிலுள்ள மத்திய அரசிலிருந்து தூர விலகியதாயிருந்த இந்த விடயங்களனைத்தும் இப்போது மாகாணசபையினூடாக கொழும்புடன் நெருங்கியதாயிருப்பது செயற்பாடுகளை எளிதாக்கியுள்ளது.

> ”
>
> **தொடர்ந்தும் மக்கள் ஆதரவைப் பெறும் நோக்கில் புலிகளுக்கெதிரான வெற்றியையே அடிக்கடி தூக்கிப்பிடித்தபடி தேசிய பிரச்சினையை தீர்வெதுவுமின்றி தட்டிக் கழித்து வந்ததே ராஜபக்சவை அவரது இறுதிப் போட்டியில் விழ்த்தியது.**
>
> ”

ஏற்கனவே, உள்ள முந்திய பிரச்சினைகளை தாமதிக்கலாகாது என்பதுடன் பிந்தியவற்றுக்கு ஒரு இரவிலேயே தீர்வு கண்டுவிடவும் முடியாது. அத்துடன் இனங்களனைத்துக்குமாக் போருக்குப் பிந்திய காலங்களிலேயே வாக்குறுதியளிக்கப்பட்டதென்ற காரணத்திற்காக அவற்றை எதிர்காலத்திற்கு தள்ளிப் போடுதல் ஆகாது. முன்னையதையும் பின்னையதையும் சேர்த்தே பார்ப்பது அனைத்தையும் கடந்த காலத்திற்கே மீண்டும் இட்டுச் செல்வதாக அமையும்.



இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. போருக்குப் பிந்திய இலங்கை விடயத்தில் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட கடந்த கால மற்றும் போருக்குப் பிந்திய காலப்பகுதியையும் சேர்ந்த தமிழ் சமூகத்தினருக்கான இணக்கப்பாடானது பெரும் பங்கிற்கு அயலிலுள்ள இந்தியாவுடன் ஆரம்பித்து சர்வதேச சமூகத்தினருடனான உறவுகளையுங் கூட மீள புதுப்பித்துக்கொள்வதையும் உள்ளடக்குகிறது. மீள் எழுச்சி பெறும் இலங்கை சர்வதேச உறவுகளை இவ்விதம் மீள் இயல்பாக்கல் செய்வதென்பது பிராந்தியத்தில் சீன பிரசன்னத்தை தடுத்து மறிக்கும் பொறுப்புணர்வினால் ஆனதேயாகும். குறிப்பாக, இலங்கையில் புதியதொரு நம்பிக்கையுடன் கைகோர்த்து புதிய பாதையில் நடைபோட ஆரம்பித்திருக்கும் தமிழ் மற்றும் பெரும்பான்மை சிங்கள அரசியல் சமூகங்களதும் தோள்களிலேயே இந்த பொறுப்பு சமமாக சுமத்தப்பட்டுள்ளது.

புதிய அரசனாது, தனது சாதனைக்கென நியமித்துக்கொண்ட 100 நாட்காலக்கெடு என்ற அந்த மைல்கல்லை எட்டித் தொடுவதற்குள்ளாகவே அதனது உடனடி அக்கறைக்குரிய விடயம் நிரூபிக்கப்பட வேண்டிய அதனது நம்பகத்தன்மையே என ஐ.நா.மனித உரிமை சபையின் இவ்வருடத்திற்கான மார்ச் மாத அமர்வுகள் நினைவூட்டிக்கொண்டிருக்கின்றன. நாடு மீட்சிபெறுவதற்கென இவர்களனைவரும் இணைந்தே நிர்ணயித்துக் கொண்டிருக்கும் இந்த சுயகட்டுப்பாட்டை மீறிச் செயற்பட முடியாத நிலையே இப்போது உள்ளது. இந்த இணைப்பிலுள்ள எத்தரப்புமே ஒட்டுமொத்தமான கடந்தகால தவறுகளுக்கும் ஒழுக்கக்கேடான முறையில் நாம் விட்ட பிழைகளுக்குமான குற்றச்சாட் டுக்களை ஒருவர் மற்றவர் மீது சுமத்திவிட முடியாது. கடந்த சில தசாப்தங்களாக தமக்குத் தாமே பழக்கப்படுத்திக்கொண்டிருக்கும் நீண்ட காலத்தவறுகளிலிருந்து அவர்கள் தாமாகவே வெளிவர வேண்டியதருணமும் இதுவேயாகும்!

**போர் என்ற ஓர் பொது எதிரியின் இறுதி முடிபு**

குறிப்பிடத்தக்க விதத்தில் தமிழர்கள் மற்றும் குறைந்தளவில் நெருக்கடக்குட்பட்டிருந்த போதிலும், தமிழ் பேசுபவர்களாக அவர்களுக்குச் சமமான அளவில் துன்பத்திற்காளாகியவர்களான முஸ்லிம் சமூகத்தினருடன் முடிவேயில்லாத விதத்தில் புறக்கணிப்பிற்குள்ளாகி வரும் மலை நாட்டைச் சேர்ந்த வம்சாவழித் தமிழர்களுக்கும் பொதுவான அந்த யுத்த நிறுத்த கால அனுபவங்கள் மீண்டும் நினைவிற் கொள்ளப்படுவது அவசியமாகும். குறிப்பாக இந்த சமூகங்களுக்கும் பொதுவாக நாட்டிற்கும் ஒப்பீட்டளவில் ஒருவித சமாதானத்தையும் பொருளாதார வளத்தையும் ஓரளவு ஏற்படுத்தக்காரணமாயிருந்தது இந்த யுத்தநிறுத்த ஒப்பந்த காலமேயாகும். அத்துடன் வடக்குக் கிழக்கு தமிழ் சமூகத்துக்கிடையே உள்ளூர இருந்து வந்த பிரதேசவாதம் எனும் இனத்துவ வேறுபாடு கருணாவால் உருவான பிளவுடன் வெளிப்பட்டது. பொதுப் படையாக தமிழ் சமூகத்தையும் TNA கட்சியினரையும் பிணைத்து வைத்திருந்த போர் அச்சம் என்ற மாயை தேர்தலின் பின் அகன்று போனது. அவர்களனைவரும் இப்போது தமது கடந்த கால போர்பற்றிய சிந்தனைகளை விடுத்து கூடுதல் வெளிப்படையான கொள்கைகள் திட்டங்களுடன் கூடிய நேர்மையானதும் பொறுப்புணர்வுடனுமான முன்னேற்றகரமான நடவடிக் கைகளையே மேற்கொள் வேண்டுமென்பதே சர்வதேசத்தின் எதிர்பார்ப்புமாகும். இதனையே முழு உலகமுங்கூட எதிர்பார்த்து காத்திருக்கிறது.

இப்போது போர் முடிந்து ஐந்து வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் தமிழர்களுக்கும் அதிகாரத்திற்கு வந்திருக்கும் புதிய அரசிற்கும் கூட நினைவில் நிற்கவேண்டிய விடயமொன்று உள்ளது. கடந்த காலத்தை மறந்து முன்னோக்கி நகர்வை மேற்கொள்ள முடியாதவராயிருந்த முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ச அதற்கான விளைவை தேர்தல் தோல்வி என்ற வகையில் செலுத்தினார் என்பதே அதுவாகும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெப்ரவரியில் மட்டும் 1100 பேர் உயிரிழப்பு!

## ஈராக்கில் தொடர்கிறது மோதல்

(பக்தாத்)

**ஈராக்கில் கடந்த பெப்ரவரி மாதம் மட்டும் இடம்பெற்ற தாக்குதல்களில் 1100 பேர் உயிரிழந்துள்ளதாக ஈராக்கிலுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் தூதரகம் அறிவித்துள்ளது.**

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

ஈராக்கில் கடந்த பெப்ரவரி மாதத்தில் மட்டும் ஆயிரத்து நூறு ஈராக்கியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் 600க்கும் அதிகமானவர்கள் பொது மக்கள் என்றும் ஐ.நா.வின் அறிக்கை ஒன்று கூறுகின்றது.

மேலும் இரண்டாயிரத்துக்கும் அதிகமானவர்கள் கடந்த மாத வன்முறைகளில் காயமடைந்துள்ளனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டிலுள்ள ஈராக்கின் பெரும்பகுதிகளை ஐ.நா.வின் இந்த புள்ளிவிபரங்கள் உள்ளடக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)






பிரித்தானிய இளவரசர் வில்லியம்ஸ் மற்றும் ஜப்பான் பிரதமர் சின்சோ அபே ஆகியோர் கடந்த சனிக்கிழமை ஜப்பானின் ஸ்மைல் கிட்ஸ் பாக் (smil kid's park) இல் சிறுவர்களுடன் விளையாடும் காட்சி

## பனிச்சரிவில் பலியானோரின் எண்ணிக்கை 247 ஆகஉயர்வு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட தொடர் பனிச் சரிவில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 247 ஆக உயர்ந்துள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலின் வடக்கு பகுதியிலுள்ள பஞ்ச்ஷீர் மாகாணத்தில் கடுமையான பனிப்பொழிவு நிலவி வருகிறது. கடந்த மாதம் 24 ஆம் திகதி திடீரென பனிச் சரிவு ஏற்பட்டது.

கடுமையான பனி பொழிவால் பாதிக்கப்பட்ட சில நாட்களில் ஏற்பட்ட பனி சரிவுகளால் மாகாணத்தில் இருந்த 100 இற்கும் அதிகமான வீடுகள் அழிந்து விட்டன. பஞ்ச்ஷீர் மாகாணத்தில் பெரும்பாலானோர் பலியாகியுள்ளனர்.

முக்கிய சாலைகள் முடங்கின. இதன் காரணமாக பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு மீட்பு பணியாளர்கள் செல்வதற்கும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

பனிச்சரிவு ஏற்பட்ட பகுதி களில் பனியை அகற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பனி நீக்கப்பட்ட இடங்களில் இருந்து இறந்தவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளது. பனிசரிவுகளில் சிக்கி பலியானவர்கள் எண்ணிக்கை 247 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் பஞ்ச்ஷீரில் இது போன்ற அதிகளவிலான பனியை பார்த்ததில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நூரிஸ்தான் மற்றும் படாக்ஷான் மாகாணங்களின் வடமேற்கு பகுதிகளிலும் பலியாகியுள்ளனர். நங்கர்ஹார் மற்றும் லாக்மான் மாகாணங்களின் கிழக்கு மற்றும் பமியான் மாகாணத்தின் மத்திய பகுதியிலும் பலியாகியுள்ளனர். பனிக்கு அடியில் சிக்கி பலியான மற்றும் உயிருடன்இருப்வர்களை மீட்கும் பணியில் மீட்பு குழுவினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

காபூலில் இருந்து பஞ்ச்ஷீருக்கு ஹெலிகாப்டர்கள் நிவாரண உதவிபொருட்களை கொண்டு வந்து அவற்றை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குறிப்பிட்ட அளவில் விநியோகம் செய்து வருகின்றன. தொடர்ந்து அங்கு மீட்பு பணிகள் நடை பெற்று வருகிறது.

ஆப்கானிஸ்தானில் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டுள்ள பனிச்சரிவில் சிக்கி பலியானோருக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப்கானிக்கு பிரதமர்மோடிகடிதம்எழுதியுள்ளார். பனிச்சரிவு ஏற்பட்டுள்ள இடங்களில் மீட்பு மற்றும் நிவாரண பணிகளுக்கு இந்தியா உதவி செய்யும் என்று தெரிவித்துள்ளார். (இ-5)

## மாஸ்கோவில் பாரிய அஞ்சலிப் பேரணி

கடந்த வெள்ளிக்கிழமை இரவு ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி புடினின் விமர்சகருமான 55 வயதாகும் போரிஸ் நெம்ட்சோவ் உக்ரைன் பெண் ஒருவருடன் கிரெம்ளினில் ஓர் ஆற்றுப் பாலத்தில் நடந்து சென்று கொண்டிருக்கும் போது வெள்ளை நிற காரில் வந்த மர்ம நபர் களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் போரிஸ் எல்ட்சின் ஜனாதிபதி இருந்த போது துணைப் பிரதமராகக் கடமை ஆற்றியவர்.

ஞாயிற்றுக்கிழமை உக்ரைனுக்கு ஆதரவாக மாஸ் கோவில் பிரமாண்ட பேரணி ஒன்றை நடத்தும் நோக்கில் ஏற்பாடுகளைச் செய்து வந்த போதே இவர் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனை அடுத்து மாஸ்கோவில் இவரின் ஆதரவாளர்களால் நேற்று ரஷ்ய அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணியாக நடைபெறவிருந்த குறித்த நிகழ்வு ஆயிரக் கணக்கானோர் ஒன்று கூடி நெம்ட்சோவின் மரணத்துக்கு அஞ்சலி செலுத்தும் ஒன்று கூடலாக மாறியுள்ளது. நெம்ட்சோவின் ஆதரவாளர்கள் ஜனாதிபதி மாளிகை அருகே மலர்க் கொத்துக்களை வைத்தும் மெழுகுவர்த்திகளை ஏற்றியும் தமது அஞ்சலிகளை செலுத்தி வருகின்றனர்.



இந்நிலையில் கூலிப்படையினால் அரசியல் நோக்கத்துக்காக நிகழ்த்தப்பட்டுள்ள நெம்ட்சோவின் படுகொலையானது ரஷ்ய மக்களிடையே சர்ச்சைக்குரிய கேள்விகளையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மேலும் ரஷ்ய உள்துறை அமைச்சர் விளாடிமிர் கோலோகொல்ட்சேவ் போரிஸின் படுகொலை தொடர்பில் குற்ற விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தீவிரவாதிகளுக்கு பதிலாக புடினின் படம் ஒளிபரப்பு

(வோஷிங்டன்)

மேலைத்தேய நாடுகளை சேர்ந்த பிணைக்கைதிகள் 5 பேரை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தலை துண்டித்து கொலை செய்தனர். அவர்களை கொலை செய்த முகமூடி அணிந்த தீவிரவாதி கையில் கத்தியுடன் இருப்பது போன்று காணொலி வெளியிடப்பட்டது.

அந்த தீவிரவாதி யார்? என்ற விவரம் தெரியாமல் இருந்தது. அவரை 'ஜிகாதி ஜான்' என அழைத்து வந்தனர். இந்த நிலையில் முகமூடி தீவிரவாதியின் பெயர் முகமது என்வாஷி (26). அவர் லண்டனை சேர்ந்தவர் என. அமெரிக்காவின் வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை அண்மையில் செய்தி வெளியிட்டது.

இந்த நிலையில் அமெரிக்காவில் இருந்து ஒளிபரப்பாகும் சி.என்.என். டி.வி. அண்மையில் இதுகுறித்து செய்தி வெளியிட்டது. அப்போது 'ஜிகாதி ஜான்' படத்துக்கு பதிலாக ரஷிய ஜனாதிதி விளாடிமிர் புடின் படத்தை தவறுதலாக ஒளிபரப்பியது. இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

உடனே சுதாரித்து கொண்ட டி.வி. ஊழியர்கள் சில வினாடிகளில் புடின் படம் ஒளிபரப்புவதை நிறுத்தி விட்டனர்.

இதற்கிடையே சி.என்.என். டி.வி. நிறுவனம் ரஷியாவின் 'தாஸ்' செய்தி நிறுவனத்துக்கு பேட்டி அளித்தது.

அப்போது தவறுதலாக விளாடிமிர் புடின் படம் ஒளிபரப்பப்பட்டதற்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டது. (இ-5)

## அரச ஆதரவு இயக்கத்தால் சிறுவர்கள் கடத்தப்பட்டனர்

### ஐ.நா.குற்றச்சாட்டு

தெற்கு சூடானில் அண்மையில் கடத்தப்பட்ட சிறுவர்கள் எல்லாம் அரசாங்கத்துடன் கூட்டு வைத்திருக்கும் ஒரு ஆயுதக் குழுவாலேயே கடத்தப்பட்டிருப்பதாக ஐ.நா. குற்றம் சாட்டியுள்ளது.

ஜோண்சன் ஒலொனியின் சில்லுக் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட சிறார்களின் எண்ணிக்கை நூற்றுக் கணக்கிலானது என்றும், முன்னர் நம்பப்பட்டது போல அது 89 அல்ல என்றும் ஐ.நா.வின் சிறார்களுக்கான அமைப்பான யுனிசெஃப் கூறியுள்ளது.

அவர்களில் பலர் பயிற்சி முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும், 12வயது வரை கொண்ட அந்த சிறுவர்கள் ஆயுதந்தாங்கியுள்ளதாகவும் நேரில் பார்த்தவர்கள் கூறியுள்ளனர்.

அந்த தீவிரவாதக் குழு எந்த வகையிலும் தமது கட்டுப்பாட்டில் இல்லை என்று அரசாங்கம் மறுப்பு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் கொலை ஐ.நா பொதுச் செயலாளர் கண்டனம்

ரஷ்யாவின் முக்கிய எதிர்க்கட்சித் தலைவரான போரிஸ் நிம்ட்சோவ், சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு ஐ.நா.பொதுச் செயலாளர் பான் கீ மூன் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பான் கி மூன் சார்பில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் நிம்ட்சோவின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரை சுட்டுக் கொன்ற குற்றவாளிகளை நீதிக்கு முன் நிறுத்த வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ரஷ்யாவின் முக்கிய எதிர்க்கட்சி தலைவரான் போரிஸ் நிம்ட்சோவ், உக்ரைன் விவகாரத்தில் ஜனாதிபதி புடினின் செயற்பாடுகளை விமர்சித்து வந்தார்.

இந்த நிலையில் இரு தினங்களுக்கு முன்பு வானொலி நிகழ்ச்சியில் பங்கேற்று விட்டு திரும்பியபோது, கார் ஒன்றில் இருந்து அடையாளம் தெரியாத நபர் போரிஸ் நிம்ட்சோவை சுட்டுக்கொன்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 19 கிறிஸ்தவர்கள் விடுதலை

சிரியாவில் பணிபுரிந்த எகிப்து கிறிஸ்தவர்களை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கடத்தி சென்று தலை துண்டித்து படுகொலை செய்தனர். மேலும் 220 கிறிஸ்தவர்களை இன்னும் பிணைக் கைதிகளாக வைத்துள்ளனர்.

இந்த நிலையில் கடத்தி சிறை வைத்திருந்த 19 சிரியா கிறிஸ்தவர்களை தீவிரவாதிகள் விடுவித்தனர். அவர்களில் 16 பேர் ஆண்கள். 3 பேர் பெண்கள். இவர்கள் ஹசாசேக் நகருக்கு பத்திரமாக திரும்பி விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்கள் விரைவில் விடுவிக்கப்படுவர்

## பா.ஜ.க. தேசிய செயலர் ஹெச்.ராஜா உறுதி

(புதுக்கோட்டை)

**இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 86 பேரும் விரைவில் விடுவிக்கப்படுவார்கள். இலங்கைக்கு பிரதமர் மோடி செல்லும் போது மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என்றும் பாரதிய ஜனதா கட்சியின் தேசிய செயலர் ஹெச். ராஜா தெரிவித்துள்ளார்.**

புதுக்கோட்டையில் நேற்று முன்தினம நடைபெற்ற பா.ஜ.க. மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற அவர், பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

இலங்கை ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்ற பிறகு, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். அதேபோல, கடந்த சில நாட்களுக்கு முன் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 86 பேரும் விரைவில் விடுவிக்கப்படுவார்கள். இந்தியப் பிரதமர் மோடி இலங்கை



செல்லும்போது, மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும்.

மத்திய அரசின் பட்ஜெட் மூலம் விலைவாசி கட்டுக்குள் கொண்டுவரப்படும். பொருளாதாரம் வளர்ச்சி அடையும். பெற்றோல், டீசல் விலை உயர்வுக்கு சர்வதேச சந்தையில் ஏற்பட்ட விலை உயர்வே காரணம். டில்லி தேர்தல் முடிவால் பா.ஜ.க.வுக்கு பின்னடைவு இல்லை. காங்கிரஸ் கட்சியின் வாக்குகள்தான் ஆம் ஆத்மி கட்சிக்குக் கிடைத்துள்ளன. எனினும், பா.ஜ.க. தோல்விக்கான காரணம் குறித்து ஆராயப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

பாரதச் செய்தி

# அமெ.இந்திய தூதராக அருண் சிங் அறிவிப்பு!

அமெரிக்காவுக்கான இந்தியாவின் புதிய தூதராக, பிரான்ஸ் தூதராக தற்போது பதவி வகித்து வரும் அருண் சிங் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்ததாவது, அமெரிக்காவுக்கான இந்தியத் தூதராக இருந்த ஜெய்சங்கர், இந்திய வெளியுறவுத் துறைச் செயலராக கடந்த ஜனவரி மாதம் 28ஆம் திகதியன்று நியமிக்கப்பட்டார். இதையடுத்து, அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் பதவிக்கு அருண் சிங்கின் பெயரை இந்தியா அறிவித்துள்ளது.

அமெரிக்காவுக்கான தூதராக அருண் சிங்கை நியமிப்பது தொடர்பான ஒப்பந்தத்தை அந்நாட்டு அரசுக்கு இந்திய அரசு ஏற்கெனவே அனுப்பி வைத்துவிட்டது. இதுகுறித்து அமெரிக்க அரசு எடுக்கும் முடிவுக்காக இந்திய அரசு காத்திருக்கிறது.

பிரதமர் நரேந்திர மோடி, பிரான்ஸ் நாட்டில், எதிர்வரும் ஏப்ரல் மாதம் சுற்றுப்பயணம் செய்யத் திட்டமிட்டுள்ளார். அருண் சிங்கை தூதராக நியமிக்க அமெரிக்க அரசு ஒப்புக் கொண்டாலும், மோடியின் பிரான்ஸ் நாட்டு சுற்றுப்பயணத்துக்குப் பிறகே, அந்தப் பதவியில்



அவர் நியமிக்கப்படுவார்.

1979ஆம் ஆண்டு ஐஎஃப்எஸ் அதிகாரியான அருண் சிங், வெளியுறவுத்துறை அமைச்சகத்தில் பாகிஸ்தான், ஈரான், ஆப்கானிஸ்தான் நாடுகளின் விவகாரங்களை கவனிக்கும் துறையில் கூடுதல் செயலாளராகப் பணியாற்றியுள்ளார். ஜப்பான், இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளில் அவர் பணியாற்றியுள்ளார். அமெரிக்காவின் வோஷிங்டன் நகரில் உள்ள இந்தியத் தூதரகத்தில் துணைத் தூதராக 5 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

எனினும், அருண் சிங்குக்கு மாற்றாக, பஹ்ரைன் நாட்டுக்கான இந்தியத் தூதராக பதவி வகித்து வரும் மோகன் குமாரின் பெயரும் இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது என்று மத்திய அ... வட்டாரங்கள் தெரிவித்தன.(இ-5)

# ஏர்செல்-மேக்சிஸ் வழக்கில் மாறன் சகோதரர்கள் ஆஜர்

**பிணை மனுவை மார்ச் 16ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது சிறப்பு நீதிமன்றம்**

(புதுடில்லி)

ஏர்செல்-மேக்சிஸ் வழக்கு தொடர்பாக முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன், அவரது சகோதரர் கலாநிதி மாறன், சன் டைரக்ட் நிறுவனர் சாமி உள்ளிட்டோர் டில்லி சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று ஆஜரானார்கள்.

அதே வேளையில்,மலேசிய தொழிலதிபர் அனந்த கிருஷ்ணன் மற்றும் அந்நிறுவனத்தின் சிஇஓ ரால்ப் மார்செல் ஆகியோர் ஆஜராகவில்லை.

**16ஆம் திகதி விசாரணை:**

டில்லி சிபிஐ சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகிய மாறன் சகோதரர்கள், முன் பிணை கோரி மனுத்தாக்கல் செய்தனர். முன் பிணை மனு மீது சிபிஐ வரும் 16இல் விளக்கமளிக்கிறது. இதனையடுத்து, முன் பிணை மனு மீதான விசாரணை வரும் 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**வழக்கு பின்னணி:**

இந்த வழக்கில் நேற்று ஆஜராகும்படி கடந்த ஆண்டு ஒக்டோபர் 29ஆம் திகதி சிறப்பு சிபிஐ நீதிமன்ற நீதிபதி ஓ.பி.சைனி அழைப்பாணை அனுப்பி இருந்தார்.

இவ் வழக்கில் சிபிஐ ஏற்கெனவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது. சிபிஐ தாக்கல் செய்த ஆவணங்களை ஆய்வு செய்த நீதிபதி, குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்கள் மீது விசாரணை நடத்த முகாந்திரம் உள்ளது என்று தெரிவித்திருந்தார்.

இவ்வழக்கில் மாறன் சகோதரர்கள், மலேசியாவின் மேக்சிஸ் நிறுவனத் தலைவர் அனந்த கிருஷ்ணன் உள்ளிட்டோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

தயாநிதி மாறன் தொலைத் தொடர்புத் துறை அமைச்சராக இருந்தபோது தமிழகத்தைச் சேர்ந்த தொழிலதிபர் சி.சிவசங்கரனுக்கு நிர்ப்பந்தம் அளித்து மலேசியாவின் மேக்சிஸ் நிறுவனத்துக்கு ஏர்செல் நிறுவன பங்குகளை விற்கச் செய்தார் என்று சிபிஐ குற்றம் சாட்டியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மும்பைத் தாக்குதலின் சூத்திரதாரி லக்வி பாகிஸ்தான் சிறையில் சொகுசு வாழ்க்கை

மும்பைத் தாக்குதல் சம்பவத்தல் மூளையாக செயற்பட்ட ஜகியூர் ரஹ்மான் லக்வி பாகிஸ்தான் சிறையல் இணைய வசதி, தொலைபேசி என சகல வசதிகளுடன் சொகுசாக வாழ்ந்து வருவதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி மும்பையின் பல்வேறு பகுதிகளில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 164 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட லஷ்கர் இ-தொய்பா தீவிரவாதி ஜகியூர் ரஹ்மான் லக்வியை பாகிஸ்தான் பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

தற்போது அவர் ராவல்பிண்டியில் உள்ள சிறையில் உள்ளார். அவரை பிணையில் விடுதலை செய்ய அந்த நாட்டு நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது. சர்வதேச நாடுகளின் கடும் எதிர்ப்பு காரணமாக வேறு சில வழக்குகளில் அவர் கைது செய்யப்பட்டு தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். சிறையில் இருக்கும் போதே மனைவியோடு சேர்ந்து குடும்பம் நடத்தினார் என்றும் இதன் மூலம் அவருக்கு ஒரு மகன் உள்ளார் என்றும் சில மாதங்களுக்கு முன்னர் செய்தி வெளியானது.

இப்போதும் அவர் சிறையில் சொகுசாக வாழ்ந்து வருவதாகவும் மும்பைத்தாக்குதல் வழக்கில் கைது செய்யப்பட்ட லக்வியும் அவரது நண்பர்கள் 6 பேரும் ஒரே சிறை வளாகத்தில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் விருப்பப்படி 7 பேருக்கும் தனித்தனி அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவர்களது அறையில் தொலைக்காட்சி தொலைபேசி, இணையம் என சகல வசதிகளும் உள்ளன. லஷ்கர்-இ-தொய்பாவின் மூத்த தலைவரான லக்விக்கு சிறையில் கூடுதல் வசதி கள் செய்து தரப்பட்டுள்ளன. அவரை யார் வேண்டுமானாலும் எப்போது வேணடுமானாலும் சந்திக்கலாம்.

நாளொன்றுக்கு அவரை சுமார் 100 பேர் சந்திக்கின்றனர். சிலர் இரவில்கூட சிறைக்கு வரு... றனர். ஆனால் சிறை அதிகாரிகள் எதையும் கண்டுகொள்வது இல்லை. தீவிரவாதிகளுக்கு எதிராக போரிட்டு வருவதாக பாகிஸ்தான் பறைசாற்றி வருகிறது. ஆனால் இந்தியாவுக்கு எதிராக செயற்படும் தீவிரவாதிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து பாதுகாத்து வருவது பிபிசி செய்தி மூலம் அம்பலமாகியுள்ளது. (இ-5)

# தெலுங்கானாவின் முதலமைச்சரை ஆச்சரியத்தில் ஆழ்த்திய பொலிஸ்

தெலுங்கானாவில் அன்பளிப்பு வாங்க மறுத்த பொலிஸார் ஒருவரை தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர ராவ் நேரில் அழைத்து பாராட்டியுள்ளார். தெலுங்கானா மாநிலம் ஜுப்ளி ஹில்ஸ் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையத்தில், பணிபுரிந்து வரும் ஜி.நாராயணராவ் என்பவர், நேற்று முன்தினம் கடவுச் சீட்டுக்கு விண்ணப்பித்திருந்த ஒரு குடும்பத்தினரை நேரில் சந்தித்து தகவல்களைச் சரி பார்க்கச் சென்றார்.

அந்த விசாரணையின் முடிவில் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்த விரும்பிய அக்குடும்பத்தினர், நாராயணராவுக்கு 2500 ரூ அன்பளிப்பாக கொடுத்துள்ளனர்.

ஆனால், அந்த அன்பளிப்பைப் பெற மறுத்த நாராயணராவ், அரசு எனக்கு சம்பளம் தருகிறது. அதனால் எந்தவித அன்பளிப்பும் தேவை இல்லை.

எங்களது தேவைகளையெல்லாம் முதல்வர் தாராளமாகவே செய்து வருகிறார் எனத் தெரிவித் துள்ளார்.

அந்த குடும்பத்தினர் தெலுங்கானா முதல்வர் சந்திரசேகரராவின் குடும்ப மருத்துவருடைய குடும்பம் என்பதால் இது தொடர்பாக முதலமைச்சர் சந்திரசேகர ராவுக்கு கடிதம் மூலம் இத்தகவலை தெரிவித்தனர். (இ-5)

# பிரிவினைவாதிகளைப் பாராட்டிய முதலமைச்சருக்கு மக்களவையில் எதிர்ப்பு; எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு

ஜம்மு-காஷ்மீரில் சட்டப்பேரவைத் தேர்தல் அமைதியாக நடைபெற்றதற்கு பாகிஸ்தானும், பிரிவினைவாத தலைவர்களும் ஒத்துழைப்பு அளித்ததே காரணம் என அம்மாநிலத்தின் புதிய முதல்வர் முப்தி முகமது சையத் கூறிய கருத்து மக்களவையில் கடும் சர்ச்சையை கிளப்பியிருந்தது.

காஷ்மீர் முதல்வர் சர்ச்சைக் கருத்து தொடர்பாக பிரதமர். நரேந்திர மோடி அவையில் விளக்கம் அளிக்க வேண்டும் என வலியுறுத்தி எதிர்க்கட்சியினர் அவையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

குறிப்பாக காங்கிரஸ் உறுப்பினர் கே.சி.வேணுகோபால் மக்களவையின் பூஜ்ய நேரத்தின்போது இவ்விவகாரத்தை எழுப்பினார்.

எதிர்க்கட்சிகள் அமளியை அடுத்து மக்களவையில் விளக்கமளித்த உள் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், "ஜம்மு-காஷ்மீர் தேர்தல் சுமுகமாக நடைபெற்றதற்கு பாகிஸ்தானையும், பிரிவினைவாத தலைவர்களையும் பாராட்டிப் பேசிய ஜம்மு முதல்வர் முப்தி முகமது சையத் நிலைப்பாட்டில் இருந்து மத்திய அரசும், பா.ஜ.கவும் முற்றிலுமாக விலகி நிற்கிறது.

பிரதமர் நரேந்திர மோடியுடன் தகுந்த ஆலோசனை மேற்கொண்டதற்கு இணங்கவே இந்த அறிவிப்பை அவையில் நான் தெரிவிக்கிறேன்.

ஜம்மு-காஷ்மீரில் தேர்தல் அமைதியாக நடைபெற தேர்தல் ஆணையம், இராணுவம், துணை இராணுவம் மற்றும் அம்மாநில மக்களே காரணம்.

முப்தி முகமது சையத் கருத்தை மத்திய அரசோ, பா.ஜ.க.வோ எவ்வித த்திலும் ஆதரிக்கவில்லை. இது தொடர்பாக முப்தி முகமது, பிரதமரிடம் எவ்வித ஆலோச னையும் மேற்கொள்ளவில்லை" என்றார்.

ஆனால் ராஜ்நாத் சிங் விளக்கத்தை ஏற்க எதிர்க்கட்சியினர் தயாராக இல்லை. காங்கிரஸ் உறுப்பினர் வேணுகோபால் கூறும் போது, "இது மிகவும் சிக்கலான விவகாரம். காஷ்மீர் முதல்வர் பேச்சைக் கண்டித்து மக்களவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் 400 ஏக்கரில் எள்ளை பயிரிட ஏற்பாடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடைப்போகமாக 400 ஏக்கர்வயல் நிலத்தில் அதிக வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய கறுப்பு நிற எள் வர்க்கம் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் பாட விதான உத்தியோகத்தர் (மறுவயற் பயிர்கள்) கு.கஜரூபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது பெரும்போக நெல் அறுவடை முடிவுறும் நிலையை எட்டியுள்ளது.

இதனைத் தொடர்ந்து அடுத்து வரும் சிறுபோகத்திற்காக 2 தொடக்கம் 3 மாத காலங்கள் வரை வயல் நிலங்கள் தரிசு நிலமாகக் காணப்படும்

இவ்வாறு தரிசு நிலங்களாகக் காணப்படும் வயல் நிலங்களில் மிகக்குறுகிய காலத்தில் அதிக வருமானத்தை ஈட்டக்கூடியதாக எள்ளுப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பொதுவாக எள்ளுப் பயிரானது 80 தொடக்கம் 85 நாட்களில் அறுவடை செய்யக் கூடிய பயிராகும்.

அத்துடன் நன்கு வறட்சியை தாங்கக் கூடிய பயிராகவும் நோய்பீடைத் தாக்கங்களால் அதிக பாதிப்படையாத ஒரு பயிராகவும் காணப்படுகின்றது.

தற்போது வயல் நிலங்களில் காணப்படுகின்ற தாய் ஈரத்தை (ஈரப்பற்று) வீணாக்காது பயன்படுத்துவதுடன் மிகக் குறைந்த செலவில் ஒற்றை உழவுடன் விதைத்து மிக சிறப்பான விளைச்சலைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதற்காக சுமார் 400 ஏக்கர்களில் பயிரிடக்கூடியதாக வயல் நிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.



இதற்காக கறுப்பு நிற எள் வர்க்க விதைகள், தெரிவு செய்யப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டு விதைகள் விவசாய போதனாசிரியர் பிரிவுகளின் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள விவசாய போதனாசிரியர் பிரிவுகளான பாண்டியன் குளம், பாலிநகர், துணுக்காய், ஐயன்குளம், ஒலுமடு, ஒட்டுசுட்டான், முள்ளியவளை, குமுழமுனை ஆகியவற்றில் தற்போது கறுப்பு நிற எள் வர்க்கத்தை பயிரிட விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர்.

எனவே முல்லை.மாவட்டத்தில் பொருத்தமான நிலமுள்ள, ஆர்வம் கொண்ட விவசாயிகள் தங்களின் வயல் நிலங்களில் விதைப்பதற்குத் தேவையான தரமான விதை எள்ளினை பெற்றுக் கொள்வதற்கு தங்கள் பகுதிகளுக்குரிய விவசாய போதனாசிரியர்களை தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)




## சிறுவர் பாதுகாப்பு கலந்துரையாடல்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச மட்டத்திலான சிறுவர் அபிவிருத்திக் குழு மற்றும் பெண்கள் உரிமைகள் பாதுகாத்தல் தொடர்பான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு துணுக்காய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென துணுக்காய் பிரதேச செயலர் எஸ்.குணபாலன் அறிவித்துள்ளார்.

துணுக்காய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் வசிக்கும் சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் பற்றி ஆராயும் முகமாக இக்கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சுகாதாரத்துறையினர் மற்றும் கல்வித்துறையினர், உளவளத் துறையினர், பொலிஸ் உத்தியோகத்தர்கள், சர்வமதக்குழுவினர், பொது அமைப்புக்களின் பிரதிநிதகள் உள்ளடங்கலாக அரச சார்பற்ற நிறுவனங்களின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அழைப்புக்கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள துறை சார்ந்தவர்கள் தவறாது கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2-15)

## விபத்தில் சிக்கி வாகனங்கள் சேதம்

(குருமன்காடு)


வேகக்கட்டுப்பாட்டை இழந்த லொறி டிப்பர் வாகனத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் டிப்பர் வாகனம் தலைகீழாக கவிழ்ந்ததுடன் இரு வாகனங்களும் பலத்த சேதத்திற்குள்ளாகின.

இச்சம்பவம் நேற்றுக்காலை மன்னார்-மதவாச்சி வீதி நேரிய குளம் சந்திப்பில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் தெரியவருவதாவது,வவுனியா நேரிய குளம் சந்தியில் மண் ஏற்றும் டிப்பருடன் வேகமாக அருகே பயணித்த லொறி திடீரென வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோதியது. இதன்போது டிப்பர் வாகனம் தலைகீழாக கழ்ந்தது. இவ்விபத்தில் உயிர்ச்சேதமோ காயமோ எவருவிக்கும் ஏற்படவில்லை. (அ-2-250)



உலக வங்கியின் நிதியனுசரணையுடன் துணுக்காய் கல்வி வலயத்தில் அமைக்கப்பட்ட இருமாடிகளைக் கொண்ட கட்டடத் திறப்பு விழா நேற்று காலை 9 மணியளவில் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவினால் திறந்து வைக்கப்பட்ட போது... (படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

## கற்குளம் மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்



(குருமன்காடு)

வவுனியா பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கற்குளம் படிவம் 1,2,3 ஆகிய கிராமங்களில் வசித்து வருகின்ற மக்கள் தமக்கான வீட்டுத்திட்டம் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு கோரி நேற்றைய தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா கோவில் குளம் சந்தியில் இருந்து வவுனியா மாவட்ட செயலகம் வரை ஊர்வலமாக வந்த சுமார் 200 இற்கும் மேற்பட்ட மக்கள் வவுனியா மாவட்ட செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அவர்கள் மக்கள் வசிக்கக் கூடிய வகையில் நிரந்தர வீடுகளை அமைத்துத் தாருங்கள், வீதியை புனரமைத்து தாருங்கள், வெள்ள நிவாரண முத்திரை மட்டுமே வழங்கப்பட்டது, நிவாரணம் எங்கே? ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியவாறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

நலன்புரிநிலையங்களில்வாழ்ந்த மக்களை கற்குளம் பிரதேசத்தில் குடியேற்றியபோது சுமார் 6வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட அரை நிரந்தர வீடுகள் முற்றாக சேதமடைந்த நிலையில் மக்கள் வாழ முடியாத சூழலில் நிரந்தர வீட்டுத்திட்டத்தில் தாம் புறக்கணிப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

தங்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் கலந்து கொண்டார். (அ-2-250)

## பாலைதீவு அந்தோனியாருக்கு எதிர்வரும் 8ஆம் திகதி திருவிழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 08ஆம திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இவ் ஆலய திருவிழாவை நடத்துவது தொடர்பான ஏற்பாட்டுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதில் ஆலயத்திற்கு செல்லும் பக்தர்கள் பின்வரும் நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்று பக்தர்களின் தேவைக்காக திறந்திருக்கும். கடற்போக்குவரத்தில் ஈடுபடும் கடற்கலன்கள் பக்தர்களுக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

பக்தர்கள் தங்கள் தேவைக்கு போதுமான குடிநீரை தாங்களே கொண்டு செல்லுதல் வேண்டும். பெறுமதி வாய்ந்த தங்க நகைகள் மற்றும் ஏனைய பொருட்களைக் கொண்டு செல்வதனை தவிர்த்தல் வேண்டும் . பச்சை குத்துவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.சர்பத் தயாரித்து விற்பது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. ஆலய புனித பிரதேசத்திற்கான ஒழுங்கு நடைமுறைகளைப் பின்பற்றி சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும், பொது சுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும் என்பனவாகும்.

எனவே பக்த அடியார்கள் அறிவுறுத்தல்களை பின்பற்றி ஆலய உற்சவம் சிறப்பாகவும் அமைதியாகவும் நடைபெற பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சர்வதேச ரீதியில் I.S.K.A. கராத்தே கழகத்தினால் கண்டி பேராதனை பல்கலைக்கழகத்தில் அண்மையில் கராத்தே சுற்றுப்போட்டி இடம்பெற்றது. இப்போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் பதக்கம் வெற்று சாதனை படைத்துள்ளனர். அவர்களின் விபரம் பின்வருமாறு, ஏ.தனுசன் காட்டா குமித்தே தங்கப்பதக்கம் , ஏ.துஸ்யந்தன் காட்டா வெள்ளிப்பதக்கம், எஸ்.நிதர்சன் காட்டா வெண்கலப்பதக்கம் மற்றும் பயிற்சி ஆசிரியர் சென்சே விஜயராஜ் மற்றும் நடுவர்கள் போட்டியாளர்களையும் படத்தில் காணலாம்.




## புதிய சாதனை படைத்தார் சங்கா



இங்கிலாந்து அணிக்கு எதிரான உலகக்கிண்ண லீக் ஆட்டத்தில் சதம் விளாசிய இலங்கை அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் சங்கக்கார புதிய மைக்கல்லை எட்டியுள்ளார்.

நியூசிலாந்தின் வெலிங்டன் நகரில் உலகக்கிண்ண தொடருக்கான ஏ பிரிவு லீக் போட்டியில் நேற்று இங்கிலாந்து, இலங்கைஅணிகள்மோதியது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 6 விக்கெட் இழப்பிற்கு 309 ஓட்டங்கள் குவித்தது. இதைத் தொடர்ந்து களமிறங்கிய இலங்கை அணி 47.2 ஓவர்களிலே ஒரு விக்கெட் மட்டும் இழந்து 312 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. திரிமன்னே (139), சங்கக்கார (117) ஆகியோர் சதம் அடித்து இலங்கை அணிக்கு கைகொடுத்தனர்.

இந்தப்போட்டியில் சதம் அடித்த தன் மூலம் சங்கக்கார சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் அதிக சதம் அடித்தவர்கள் வரிசையில் கோலி (22), கெய்ல் (22), கங்குலி (22) ஆகியோர்களை பின்னுக்குத் தள்ளி 4 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

சங்கக்கார இதுவரை 377 இன்னிங்ஸிகளில் விளையாடி 23 சதங்களை எடுத்துள்ளார். சச்சின் (49) பெண்டிங் (30 ஜெயசூரியா (28) ஆகியோர் முதல் மூன்று இடங்களிலுள்ளனர். (கு)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலக விளையாட்டுப்போட்டி





சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு போட்டி (01) சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் தலைமையில் ஆரம்பமாகியது.

ஆண்களுக்கு இடையிலான இறுதி கரப்பந்தாட்டப் போட்டியில் வசந்தசிறி விளையாட்டுக்கழகத்துக்கும் கல்வளை விளையாட்டுக்கழகத்துக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் வசந்த சிறி விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது. பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் சாந்தை விளையாட்டுக்கழகத்துக்கும் யங்கென்றிஸ் விளை யாட்டுக்கழகத்துக்கும் இடையில் நடைபெற்றது. இதில் சாந்தை விளையாட்டுக்கழகம் வெற்றியீட் டியது.

பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டி சண்டிலிப்பாய் விளையாட்டுக்கழகத்துக்கும் சண்டிலிப்பாய் றோக் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையில் நடைபெற்றது. இதில் சண்டிலிப்பாய் றோக் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது. (கு-23)

## நெடியகாடு இளைஞர் வி.கழகத்தின் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி



நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் jaffna challengers cup உதைபந்தாட்ட சுற்றுத்தொடரின் 28 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்தாடிய உடற்கல்வி ஐக்கிய விளை யாட்டுக் கழகம் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாம் சுற்றுக்கு தகுதிபெற்றது. உடற்கல்வி ஐக்கிய விளையாட்டுக் கழகம் சார்பில் இந்துக்கான் 3 கோல்களையும் பொலிகை பாரதி அணி சார்பில் வினோத் , அனுஜனன் தலா ஒரு கோல்களையும் பெற்றுக்கொடுத்தனர். நடைபெற்ற மற்றுமொரு ஆட்டத்தில் மானிப்பாய் ரெட்றேன்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்தாடிய சக்கோட்டை சென்சேவியர் விளையாட் டுக்கழகம் 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக் தகுதி பெற்றது. சென்சேவியர் அணி சார்பாக நிரேஜன் ஒரு கோலை பெற்றுக்கொடுத்தார். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வத்தின் விருப்பத்திற்கு எதிராக
எந்த ஒரு மனித சக்தியும் நிற்க முடியாது.
-ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எதிர்வரும் பொதுத் தேர்தல் மகிந்தவை காப்பாற்றும்

எதிர்வரும் ஏப்ரல் மாதம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு ஜூன் மாதம் பொதுத் தேர்தல் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்து நான்கு மாதங்களுக்குள் பாராளுமன்றத்தைக் கலைப்பது ஜனாதிபதி மைத்திரிக்கு ஆரோக்கியமானதல்லதாயினும் தேர்தலின் போது, தான் வழங்கிய வாக்கைக் காப்பாற்றும் பொருட்டு பாராளுமன்றக் கலைப்பும் பொதுத் தேர்தலும் உரிய காலத்தில் இடம்பெறும் என உறுதிபடக் கூறமுடியும்.

பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னதாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தேர்தலில் போட்டியிடாதவாறு தடுக்கும் வகையில் சில திட்டங்களை மைத்திரி அரசு செய்யும். அதாவது நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ போட்டியிட்டு, பிரதமர் பதவியைக் கைப்பற்ற வேண்டும் என மகிந்தவின் விசுவாசிகள் விரும்புகின்றனர்.

ஜனாதிபதியாக இருந்த ஒருவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்காகப் போட்டியிடுவதா? என்ற கௌரவப் பிரச்சினை இவ்விடத்தில் ஏற்படச் செய்யுமாயினும் மகிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரை அப்படியான கௌரவப் பிரச்சினைகள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

மைத்திரிக்கு தலையிடி கொடுப்பதற்காகவேனும் பாராளுமன்ற உறுப்பினராகத் தான் வரவேண்டும் என மகிந்த ராஜபக்ஷ நிச்சயம் நினைப்பார். எனினும் அந்த நினைப்பு நிறைவேறுமா? என்பதுதான் கேள்விக்குரிய விடயம்.

பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ போட்டியிடுவதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரும்பினாலும் பிரதமர் ரணில் ஒரு போதும் விரும்பமாட்டார். எனவே எதிர்வரும் பொதுத் தேர்தலில் மகிந்த போட்டியிடுவதை தடுப்பதற்கு இரண்டு வழிகள் உண்டு.

அதில் ஒன்று, பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மகிந்தவைச் சிறையில் அடைத்து, தேர்தலில் போட்டியிடுதல் என்ற நினைப்பை அவரிடம் இல்லாமல் செய்தல். இதைச் செய்யும் போது மகிந்த தரப்பு ஜனாதிபதி மைத்திரிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிராகக் கடும் பிரசாரம் செய்யும்.

புலிகளை வென்ற சிங்கத்தை சிறையில் அடைத்து வைத்திருப்பது முறையோ! என்று விமல் வீரவன்ச போன்றவர்கள் கூப்பாடு போடுவர்.

கூடவே, மகிந்தவை சிறையில் அடைத்து வைத்திருப்பதன் நோக்கம் விடுதலைப் புலிகளை மீண்டும் எழுகை பெறச் செய்வதே என்ற பிரசாரமும் முழங்கும். எனவே இது ஒரு நல்ல வியூகம் அல்ல என மைத்திரி தரப்பு முடிவு செய்யும்.

இங்குதான் ரணிலின் இராஜதந்திரம் வேலை செய்யும். அதாவது மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் ரணில் சந்திப்பார். சந்தித்து 'நீங்கள் 'சட்டத்திற்குப் புறம்பாகச் சேர்த்த சொத்துக்கள், உங்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நாங்கள் எதுவும் கண்டு கொள்ள மாட்டோம். இதற்காக நீங்கள் பொதுத் தேர்தலில் போட்டியிடாமல்-அரசியலில் இருந்து ஒதுங்க வேண்டும் என்று கேட்பார்.

என்ன செய்வது? எம்.பியாகுவதை விட, மாபெரும் குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்புவதே மேல் என்று மகிந்த முடிவு செய்வார். அப்படி ஒரு முடிவை ரணில் விக்கிரமசிங்கவினால் நிச்சயம் ஏற்படுத்த முடியும்.

ஆக, எதிர்வரும் பொதுத் தேர்தல் மகிந்தவை காப்பாற்றுகின்ற அருமருந்தாக அமையப் போகிறது என்பதை மட்டும் இப்போதைக்குக் கூறிக் கொள்ள முடியும்.

# முன்னாள் ஜனாதிபதிக்கு பிரதமராகும் கனவு!

## கே.டி தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வருவதற்கு ஒரு போதும் இடமளிக்க போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

விமல் வீரவன்ச உட்பட சிலர் மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வருவதற்கு சமீபத்தில் நுகேகொடயில் பேரணி ஒன்று நடத்தினார்கள்.

பேரணி விமல் வீரவன்சவின் தேவைக்காக மாத்திரம் இடம் பெறவில்லை. குறித்த பேரணியை நடத்த வேண்டும் என சூழ்ச்சி செய்தது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே. தோல்வியடைந்தும் அவருக்கு மீண்டும் அரசியலுக்கு வரவேண்டும் என்ற ஆசை உள்ளது. அதற்கு எங்களால் இடமளிக்க முடியாது.

ராஜபக்ஷ எங்களை வீட்டிற்கு அனுப்பினார். மீண்டும் மகிந்த ராஜபக்ஷ அரசியலுக்கு வரமுடியாது. வர இடமளிக்கவும் மாட்டோம். மகிந்தவிற்கு தற்பொழுது நாட்டின் பிரதமராக வேண்டும் என்ற ஆசை உள்ளது. அது கனவில் மட்டுமே நிகழும்.

அவர் தற்பொழுதெல்லாம் நினைப்பது தனக்கு வாக்களித்த 58 லட்ச மக்களை குறித்தே. மீண்டும் ஊழல் மோசடிகாரர்களை நாட்டில் ஆட்சி புரிய இடமளிக்க மாட்டோம் என மேல் மாகாண சபை உறுப்பினர் கே.டி. லால் காந்த தெரிவித்துள்ளார். (எ-11)

## இல்லமெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு சேர் துரைசுவாமி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று காலை 10 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி ம.கணேசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வைத்தியகலாநிதி கி.மோகனகுமார் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக வேலணை கோட்டக்கல்வி பணிப்பாளர் பொ.சிவானந்தராசா, ஓய்வுநிலை அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (எ)

XXXXXXXXXXXX

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் திறனாய்வு நாளை பிற்பகல் 12.30 மணிக்கு அதிபர் திருமதி. யோ.விநாயகமூர்த்தி தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர் வி. இராதாகிருஷ்ணன் கலந்து கொள்கிறார். (எ)

## கணிதத்தில் சித்தி எய்தாவிடத்தும் உயர் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த உயர்தர பரீட்சைக்கான விண்ணப்பங்களை அனுப்பிவைப்பதற்கான இறுதித் திகதி எதிர்வரும் 6 என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

க.பொ.த சாதாரண தரத்தில் கணித பாடத்தில் சித்திபெறாது உயர்தரத்திற்குத் தோற்றியுள்ள மாணவர்களும் விண்ணப்பங்களை அனுப்ப முடியும். அதற்கமைய க.பொ.த உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு கணித பாடம் சித்திபெற வேண்டிய அவசியம் இல்லை என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

க.பொ.த உயர் தரத்தில் தோற்றுவதற்கு கணித பாட சித்தி கட்டாயமில்லை என்றாலும், தொழில் வாய்ப்பு, தொழிற்பயிற்சிகள் ஏனைய கற்கை நெறிகளை கற்பதற்கோ அல்லது வேறு தேவைகளுக்கோ கணித பாடம் அவசியம் என்று கோரப்படும் பட்சத்தில் கணிதம் பாட சித்தி அவசியம் என்றும் கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (எ-11)

## மின்சாரம் தாக்கி ஊழியர் உயிரிழப்பு

(அளவெட்டி)

மின்சாரம் தாக்கி மின்சார சபை ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று இரவு 7.15 மணியளவில் கொல்லங்கலட்டி அரசடி சந்திக்கு அருகாமையில் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் சங்கானையை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான தங்கமுத்து சோதிநாதன் (வயது 33) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று இரவுவேளை மின்சார சபையில் ஒப்பந்த ஊழியராக பணியாற்றும் 3 ஊழியர்கள் குறித்த பகுதியில் உள்ள வீடொன்றிற்கு புதிதாக மின்சார இணைப்பு வழங்குவதற்கான பணியில் ஈடுபட்டிருந்தார்.

இதன்போது மின்சார கம்பத்தினை நிறுவ உதவும் கிரேன் மின்சார கம்பியுடன் தொடுகையுள்ளதால் குறித்த வாகனத்தை இயக்கிய சாரதியை மின்சாரம் தாக்கியுள்ளது.

மின்சார சபையின் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் குறித்த ஊழியர்கள் செய்வது ஏதுமறியாது சுமார் 15 நிமிடங்கள் போராடியுள்ளனர்.

பின்னர் அப்பகுதி மக்களின் உதவியுடன் மின்சார சபை ஊழியர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்கள் வந்து மின் இணைப்பை துண்டித்து ஊழியரை மீட்டுள்ளனர்.

சம்பவத்தில் மின்சாரம் தாக்கிய ஊழியர் உயிருக்கு ஆபத்தான நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (எ-25)

## தோல்வியடைந்திருந்தால் சிறையில் தள்ளி சித்திரவதை

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

நான் தோல்வியடைந்திருந்தால் என்னை சிறையில் தள்ளி சித்திரவதை செய்திருப்பார்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பதவியில் இருந்து நீக்கியும் மீண்டும் அவர் வெட்கமில்லாது, பிரதமர் வேட்பாளராக தேர்தலில் போட்டியிட முயற்சிக்கின்றார் என அவரிடம் தான் கேள்வி எழுப்ப நேரிடும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு இலங்கை மன்றக்கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற கலைஞர்கள், புத்திஜீவிகள் மற்றும் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதியையும் [illegible] வரும் [illegible] டுள்ளனர். அவர்கள் மைத்திரிபால யார் என்பதை சரியாக அறியாது செயற்பட்டு வருகின்றனர்.

தோல்வியடைந்த முன்னாள் ஜனாதிபதி ஹெலிகொப்டரில் மெதமுலன கிராமத்திற்கு சென்றார். அன்று நான் தோல்வியடைந்திருந்தால், கையில் விலங்கிட்டு, சிறையில் தள்ளி கொடூர சித்திரவதைகளை செய்ய தீர்மானித்திருந்தனர்.

அதற்கு தேவையான ஆவணங்களும் தயாரிக்கப்பட்டிருந்ததாக புலனாய்வுப் பிரிவின் மூலம் நான் அறிந்து கொண்டேன். முன்னாள் ஜனாதிபதி மெதமுலன கிராமத்திற்கு சென்ற பின்னரே அவர் அங்கு ஹெலிகொப்டரில் சென்றதை அறிந்து கொண்டேன்.

நான் அதற்கு அனுமதியை வழங்கியதாக கூறுகின்றனர். அப்படியான அனுமதி எதனையும் நான் வழங்கவில்லை. அதனை முன்கூட்டியே அறிந்திருந்தால், ஹெலிகொப்டரில் செல்ல நான் அனுமதித்திருக்க மாட்டேன் எனவும் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். (எ-11)

## இராணுவத்தினிடையே பேச்சுவார்த்தை

இலங்கை- இந்திய இராணுவ அதிகாரிகளுக்கு இடையிலான 4-ம் கட்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த பேச்சுவார்த்தை நேற்று கொழும்பிலுள்ள இராணுவ தலைமையகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாட்டு இராணுவ அதிகாரிகளின் பங்கேற்றலுடன் வருடந்தோறும் இக்கலந்துரையாடல் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இக்கலந்துரையாடல் எதிர்வரும் 4 நாட்களுக்கு நடைபெறும். இதன்படி இந்திய இராணுவத்தினர் சார்பில் அனைத்துலக உறவுகளுக்கான மேலதிக பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ருஸ்டம் பட்நாயக் தலைமையிலான அதிகாரிகள் கலந்துரையாடலில் கலந்து கொண்டுள்ளனர்.

இராணுவ செயலாளர் மேஜர் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க தலைமையில் மேஜர் ஜெனரல் பி.ஏ.பெரேரா, பிரிகேடியர் கே.பி.ஏ.ஜெயசேகர, பிரிகேடியர் டி.ஆப்ரூ, கேணல் குலதுங்க, உள்ளிட்ட அதிகாரிகள் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டுள்ளனர். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் பலமிழக்கும் முஸ்லிம் காங்கிரஸ்?

## ஆதரவளித்த 6 பேர் வாபஸ்

(கொழும்பு)

**கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைப்பதற்காக ஆதரவு வழங்கிய ஆறு உறுப்பினர்கள் தமது ஆதரவை வாபஸ் பெறுவதாக அறிவித்துள்ளனர்.**

முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைப்பதற்காக மாகாண சபையிலிருக்கின்ற உறுப்பினர்களில் 20 பேர் சத்தியக் கடதாசியின் ஊடாக தங்களுடைய ஆதரவை தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்தே கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக நஷீர் அஹமட் தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிலையில், ஆறு உறுப்பினர்களை மட்டுமே கொண்டிருக்கின்ற, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தன்னிச்சையாக செயற்படுவதாக கூறி, ஏனைய இரண்டு கட்சிகளைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்கள் தங்களுடைய ஆதரவை நேற்று வாபஸ் பெற்றுக்கொண்டனர்.

இது தொடர்பாக குறித்த ஆறு பேரும் நேற்று திருகோணமலையில் ஊடகவியலாளர் சந்திபொன்றை நடத்தி தங்களுடைய தீர்மானத்தை அறிவித்தனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினர்களான விமலவீர திஸாநாயக்க, டபிள்யூ.டி.எச் வீரசிங்க, ஜயந்த விஜேசேகர, டி.எம்.ஜயசேனவும் கட்சியை சேர்ந்த எம்.எஸ் உதுமாலெப்பை மற்றும் தேசிய காங்கிரஸை சேர்ந்த எம்.எல்.எம்.ஆமீர்லெப்பை ஆகியோரே இவ்வாறு வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சேவை நலன் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசனின் சேவை நலன் பாராட்டுவிழா நாளை புதன் கிழமை பி.ப ஒரு மணிக்கு யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.கல்வி வலய தமிழ்ப்பாட ஆசிரியர்களால் முன்னெடுக்கப்படும் இவ்விழாவில் விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய தமிழ்ப்பாட ஆசிரியர்களால் முன்னெடுக்கப்படும் இவ் விழாவில் விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான கோ.வரதராஜமூர்த்தி, பொ.அருணகிரிநாதன், சி.மாணிக்கராஜா, ச.ரவீந்திரநாதன் ஆகியோரும் தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் தி.தயாபரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## மெய்வல்லுநர் போட்டி இன்று

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் இல்லமெய்வல்லுநர்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வடமாகாண கல்வியமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி எஸ்.எஸ்.செ பஸ்ரியன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## நிர்வாகத் தெரிவு

வல்வெட்டித்துறை கணபதி படிப்பகத்தின் 48 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவராக பூ.அகமணிதேவர், செயலாளராக சி.மதுசூத்னன், பொருளாளராக இ.இராதாகிருஷ்ணன், உப தலைவர்களாக கி.மகாலிங்கம், ச.ஜெயகணேஸ், உபசெயலாளராக வே.கண்ணதாசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-3)

# இந்திய - இலங்கைத் தமிழர்கள் கச்சதீவில் உறவுகளுடன் சந்திப்பு

கச்சதீவில் நடைபெற்ற புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் இந்திய-இலங்கை தமிழர்கள் தங்களது உறவினர்களை சந்தித்து மகிழ்ந்தனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து 12 கடல் மைல் தொலைவில் பாக் ஜலசந்தி கடற்பரப்பில் இயற்கை எழில் கொஞ்சும் கச்சதீவு அமைந்துள்ளது.

மீனவர்களின் காவல் தெய்வமாக விளங்கும் புனித அந்தோனியார் ஆலயத்தை இராமேஸ்வரம ஓலைக்குடாவைச் சேர்ந்த அந்தோனிப் பிள்ளை பட்டங்கட்டி, தொண்டியைச் சேர்ந்த சீனிக்குப்பன் பட்டங்கட்டி ஆகியோர் 1913-ம் ஆண்டு சிறிய ஓலைக்குடிசையில் நிறுவினர். அதையடுத்து ஆண்டு தோறும் பெப்ரவரி அல்லது மார்ச் மாதங்களில் அந்தோனியார் ஆலயத் திருவிழா நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டு கச்சதீவு புனித அந்ததோனியார் ஆலயத் திரு விழா பெப்ரவரி 28, மார்ச் 1 ஆகிய இரு தினங்கள் நடைபெற்றன. இதில் இந்திய பக்தர்கள் 4,003 பேர் கலந்து கொண்டனர். இலங்கையில் இருந்து மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்திரநாயகம் ஆலயத்தில் கொடியை ஏற்றி திருவிழாவை தொடங்கி வைத்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை சிறப்புத் திருப்பலி பூசை, அந்தோனியார் தேர் பவனி ஆகியவை நடைபெற்றது. பின்னர் காலை 9 மணி அளவில் கொடியிறக்கத்துடன் கச்சதீவு திருவிழா முடிவடைந்தது. இத் திருவிழாவில் தமிழகத்தில் உள்ள பக்தர்கள் இலங்கையில் உள்ள தங்கள் உறவினர்களை சந்தித்து மகிழ்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மகிந்த தோற்பார் என்பதை முன்னரே அறிந்திருந்தேன்

### முன்னாள் அமைச்சர் பௌசி கூறுகிறார்

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைவார் என தான் முன்னரே அறிந்திருந்ததாகவும் முன்னாள் ஜனாதிபதிக்கு 15 இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகள் எதிராகவே காணப்பட்டதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மூத்த துணைத் தலைவர் ஏ.எச்.எம் பௌசி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால வேலைத்திட்டங்கள் குறித்து தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

இன்னும் ஒன்றரை வருடங்கள் இருக்கின்றது ஏன் தேர்தலுக்கு போகிறீர்கள் என சிலர் கேட்டனர். தேர்தலுக்கு சென்று நடந்தது என்ன என்பது அனைவருக்கும் தெரியும்.

முன்னாள் ஜனாதிபதித் தேர்தலில் தோற்பார் என்பதை நான் அறிந்திருந்தேன். 15 இலட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக இருந்ததே இதற்கு காரணம், தேர்தல் நேரத்தில் சிறுபான்மையினரின் வாக் குகளும் இல்லாமல் போனது எனவும் பௌசி மேலும் தெரிவித்தார். (இ-5)

# கதியின் கையில் விதி (அனுபவத்திலிருந்து)

நான் ஓரளவு வசதியான குடும்பத்தில் பிறந்தவன். பெற்றோருக்கு ஒரேயொரு செல்லப்பிள்ளை. எப்போதும் வேகத்துடனும் விவேகத்துடனும் நடந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் கொண்ட 23 வயதேயான ஒரு துடிப்பான இளைஞன். கடந்த இரு வருடங்களில் என் வாழ்வில் ஏற்பட்ட காயங்களையும் அனுபவம் கற்றுத்தந்த பாடங்களையும் உங்களுடன் பகிர்ந்துகொள்ள நினைக்கின்றேன்.

இரு வருடங்களுக்கு முன் பல்கலை. அனுமதிக்காக காத்திருந்த வேளை, ஒருநாள் நண்பர்களுடன் ஊர் சுற்றுவதற்காக புறப்பட்டேன். வீட்டை விட்டுகிளம்பும்போது அம்மா சொன்னார் 'தம்பி மெதுவாகப் போ. முந்தநாள் அந்தச் சந்தியில இருக்கிற வீட்டுக்காரர் அக்ஸிடென்டாம் ஓட்டோவோட. கவனமா பார்த்துப்போ'' அம்மா ஒருமுறைக்கு இருமுறையே சொன்னா. அது அவவின் வழக்கம். பிள்ளைக்கு ஏதாவது ஆகிடுமோ என்ற ஆதங்கம்... ''ஓம் அம்மா'' என்று சொல்லிவிட்டு புறப்பட்டேன்.

மதியநேரமாகையால் வீதியில் சனம் குறைவு, வாகனங்களும் இல்லை. வெறிச்சோடிப் போயிருந்த நீண்ட வீதி.

''இப்ப எவ்வளவிலயும் போகலாம். என்னை என்ன வந்து அடிக்கப் போகுது'' அம்மாவின் அறிவுரைகள் காற்றில் பறந்தன.

''சிட்டுக்குருவியின் சிறகை வாங்கி அதில் பறக்கனும் போல இருக்கு'' எங்கிருந்தோ பாடல் வரி ஒன்று வந்து மனதில் ஒட்டிக்கொண்டது. அக்ஸிலேட்டரை முடுக்கினேன். வேகம் அதிகரிக்க அதிகரிக்க... அந்த வேகத்தில் தான் எத்தனை இன்பம்....

விதி என் வாழ்வில் விளையாடியது போலும். திடிரென்று எங்கிருந்தோ ஒரு நாய்...

நாய் என்னுடன் விளையாடுவதை விடுத்து என் வாழ்க்கையுடன் விளையாடியது போலும்... நாய் குறுக்கே பாய்ந்ததும் மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதும் தான் எனக்குத் தெரியும்.

நினைவு திரும்பிய போது நான் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்தேன். பக்கத்தில் கண்ணீரும் கம்பலையுமாக என் பெற்றோர். எனது முகம் சிதைவடைந்திருந்தது. மூக்கென்பு, முக என்புகள் சிதைவடைந்திருப்பதாகவும் மண்டையோட்டில் வெடிப்புகள் இருப்பதாகவும் மருத்துவர்கள் கூறினர்.

அதன்பின் பல சத்திர சிகிச்சைகள், மருத்துவமனை இடமாற்றங்கள். சில மாதங்களின் பின்பே நான் ஓரளவு நடமாடக்கூடிய நிலைக்கு திரும்பினேன். இருப்பினும் என் முகம் சிதைவடைந்தமையால் விகாரமாக தோற்றமளித்தேன். என்னை எனக்கே பார்க்க பிடிக்கவில்லை.

அதன் பின்னர் எனது பெற்றோர் முகமாற்று சத்திர சிகிச்சைக்காக என்னை இந்தியாவுக்கு கொண்டு சென்றனர். அங்கு சில கோடிகள் செலவில் முகமாற்று சத்திர சிகிச்சை (Plastic Surgery) செய்யப்பட்டது. அதிலிருந்து நான் முழுமையாக குணமடைய ஒரு வருடத்திற்கும் மேலானது. ஆனாலும் முகத்தில் சில பகுதிகளில் உணர்ச்சி இல்லை. நெருங்கிய நண்பர்கள் கூட அடையாளம் காணாதவாறு ஒரு புதிய முகம்.

இவற்றின் பின்னரும் இவ் விபத்தின் விபரீதம் முடிந்தபாடில்லை. தற்போது மூக்கினூடாக மூளைய முண்ணான் பாய்பொருள் (CSF) கசிவதால் அக்கசிவை நிறுத்தும் பொருட்டு சத்திர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கின்றேன்.

இவ்விரு வருடங்களில்தான் எத்தனை வலிகள், இழப்புகள் எத்தனை பேரின் பரிதாபப் பார்வைகள், கேலிப் பேச்சுக்கள். இவையனைத்துக்கும் மேலாக ஆறாத ரணங்கள். சேர்ந்திருந்த செல்வங்கள் அனைத்தும் செலவழிந்தன. இன்று நான் எனது கல்வி, வேலைவாய்ப்புக்கள், பழைய அடையாளங்களை தொலைத்தவனாக மாறாத வடுக்களோடு வைத்தியசாலைக்கும் வீட்டுக்குமாய் அலைந்து பெற்றோரையும் அலைக்கழித்துக் கொண்டிருக்கின்றேன்.

அன்று நான் அளவான வேகத்தில் அம்மா சொன்னதைப் போன்று பார்த்துப் போயிருந்தால் இன்று இந்நிலை ஏற்பட்டிருக்காது. இன்று என்னுடைய நண்பர்களில் சிலர் பல்கலை. படிப்பை முடிக்கப் போகின்றனர். சிலர் வேலை செய்கின்றார்கள். ஆனால் நான்? என்னுடைய வைத்தியசாலை வாழ்க்கை இத்துடன் முற்றுப் பெறுமா? அல்லது தொடருமா? என்று கூடத் தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு துரதிர்ஷ்டசாலி... நிமிடங்களை சேமிப்பதற்காய் வேகம் எனும் வார்த்தையில் வாழ்க்கையை, வருடங்களைத் தொலைத்தவன்.

நம்மில் பலர் இவ்வாறு தான் சில நிமிடங்களை சேமிப்பதற்காக மித மிஞ்சிய வேகங்களில் வாழ்க்கையை, வாழ்வின் வசந்தங்களை தொலைத்துக் கொண்டிருக்கின்றோம். என்னுடைய அனுபவத்தில் இருந்து கூறுகிறேன், எங்கும் எப்போதும் எது வேண்டுமானாலும் நிகழலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். மித மிஞ்சிய வேகங்களை விடுத்து அளவான வேகத்தில் உங்கள் வாகனங்களை கட்டுப்படுத்தக்கூடிய வேகத்தில் பயணம் செய்யுங்கள்.

வேகத்தை குறைப்பதன் மூலம் வரும் பாதிப்புகளை குறைத்துக் கொள்ளலாம். இயலுமானால் விபத்தையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

எனவே வீதியில் வேகம், விவேகம் அல்ல என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். உங்கள் விதியை கதியின் கையில் கொடுத்து விடாது மதியுடன் செயற்படுங்கள். விபத்துக்களை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

இப்படிக்கு, வளமான எதிர்காலத்தை வேகத்தில் தொலைத்து விட்டு வாழ்க்கையே கேள்விக் குறியாய் வாழும் "உங்களில் ஒருவன்".

J.B.Mercy Silvia

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கெடுபிடிகள்...

தின போது யாழ் மாவட்டச் செயலகததில் மாகாண ஒருங்கிணைப்புக குழுக் கூட்டத்தையும் நடத்தவுள்ளார்.

இந்தக் கூட்டம் நடைபெறுகின்ற மாவட்டச் செயலகத்திலோ அல்லது யாழ்ப்பாணத்திலோ பாதுகாப்பு படையினரின் அல்லது பொலிஸாரின் கெடுபிடிகள் எதுவுமோ அற்றசாதாரண நிலையையே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்ற தருணத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு இராணுவமும் பொலிஸாரும் வீதிகள் குறிப்பாக நிகழ்வு நடைபெறும் இடங்களில் குவிக்கப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்படுவது வழமையான ஒன்று.

இதனால் மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கையிலும் பாதிப்புக்களும் ஏற்பட்டிருந்தது. ஆனால் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்றையதினம் வருகை தரவுள்ள நிலையில் அவ்வாறான பாதுகாப்பு கெடுபிடிகளோ அல்லது பாதுகாப்பு ஏற்பாடுகளோ எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4)

## ஜனாதிபதி...

களிற்கும் விஜயம் செய்திருந்த நிலையில் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இன்றையதினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். இதற்கமைய இன்று காலை யாழ்ப்பாணம் வருகை தரும ஜனாதிபதி யாழ் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தையும் தலைமையேற்று நடத்தவுள்ளார். இதன்போது மத்திய அமைச்சர்கள் சிலரும் வருகை தரவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட கட்சிகளின் பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்களும் வடக்கு முதலமைச்சரும் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இக் கூட்டத்தின் போது வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களிலிருந்த நிலைமைகள் தொடர்பிலும் தற்போதுள்ள நிலைமைகள் தொடரபிலும் இதற்கு முன்னெடுக்க வேணடிய நடவடிக்கைகள் என்பன தொடரபிலும் பிரதானமாக ஆராயப்படவுளளது. அத்தோடு வடக்கில் மேற்கொளளப்பட்ட மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது. இவ்வாறு பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட இருக்கின்ற அதேவேளையில ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் சில அறிவிப்புக்களும் விடுக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதில் குறிப்பாக நீண்டகாலமாக இடம்பெயர்ந்திருக்கின்ற மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருக்கின்ற நிலப்பகுதிகளை விடுவித்தல் உள்ளிட்ட சில விடயங்கள் தொடர்பில் அறிவிக்கவுள்ளார் எனறும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

## இனப்படு...

காட்டியுள்ளார்.

ஐ.நா அரசியல் விவகாரங்களுககுப் பொறுப்பான பிரதிச் செயலாளர் ஜெவ்ரி வெல்டமன்தலைமையிலான குழுவினர்நேற்றைய தினம்வட மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களை முதலமைச்சரின் அலுவலகததில் சந்தித்துப் பேசியிருந்தனர். குறித்த சந்திப்பின்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

நேற்றைய தினம் காலை 11 மணி தொடக்கம் நண்பகல் 12.15 மணி வரையில் இடம்பெற்ற மேற்படிச் சந்திப்பின் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே முதலமைச்சர் தாம் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியிருப்பதாக தெரிவித்தார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில் ஆட்சிமாற்றத்தின் பின்னர் எவ்வாறான நிலை இங்கே உள்ளது?

அரசியல்ரீதியான மாற்றங்கள் எவ்வாறிருக்கின்றன? என்பது தொடர்பில் முக்கியமாக பேசியிருந்தார்கள். இதன்போது வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இனப்படுகொலை என சுட்டிககாட்டியருக்கின்றது. அந்த தீர்மானதது தின் அர்த்தம் என்ன? என்பது தொடரபாக அவர்கள் எங்களிடம் வினவியிருந்தார்கள். அதற்கு நாம் தெளிவாக பதிலளித்திருந்தோம்.

அதாவது, வடமாகாண சபையின் தீர்மானம் தமிழ் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு ஆவணம். அரசாங்கம் கூறுகினறது படையினரை வெளியேற்ற மாட்டோம் என இந்நிலையில் தமிழ மக்கள் அதனால் பல இன்னல்களை எதிர்கொள்கின்றார்கள். எனவே சரித்திர ரீதியாக தமிழ் மக்களுக்கு என்ன நடந்தது? என்பதை வெளிப்படுத்தவேண்டிய காலம், இதுவாகவே இருக்கும்.

எனவே அதனை நாங்கள் உலகத்திற்கு கூறவேண்டிய தருணத்தில கூறியிருக்கின்றோம் என்பதை அவர்களுக்கு சுட்டிக் காட்டியிருக்கின்றோம். மேலும் இந்த நாட்டில் தமிழ-சிங்கள மக்களுக்கிடையில் நல்லிணக்கம், சமாதானம் உருவாக வேண்டுமானால் தமிழ் மக்களுக்கு நடந்த அநீதிகள் அனைத்தையும் சிங்கள மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

எனவேசிங்கள மக்களும்அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே நாங்கள் அ ந்த தீர்மானத்தினை நிறைவேற்றியிருக்கின்றோம். இதனை சிங்கள மக்கள் இனரீதியாக பார்க்க கூடாது. இது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை வெளிப்படுத்தும் ஒரு ஆவணமாகவே பார்க்கவேண்டும். மேலும் ஐ.நா அறிக்கை பிற்போடப்பட்டமை தொடர்பாக நாங்கள் கேள்வி எழுப்பியிருந்தோம்.

அதற்குப் அவர்கள் பதிலளிக்கையல் ஐ.நாவின் அங்கத்துவநாடுகள் சில இலங்கையில் உருவாகியிருக்கும் ஆட்சிமாற்றத்தின் பின்னர புதிய அரசாங்கத்திற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கிப் பார்ப்பதற்கும், முன்னைய அரசாங்கத்தைப்போன்று அல்லாமல் சற்று சுமுகமாக நடந்து கொள்கின்றது என்ற அடிப்படையிலும் தாங்கள் அந்தச் சந்தர்ப்பத்தை வழங்கிப் பார்க்கலாம் என அவர்கள் கூறியிருந்தார்கள்.

ஆனாலும் அறிக்கை ஒரு தடவை மட்டுமே பிற்போடப்பட்டிருக்கின்றது. அது செப்ரெம்பர் மாதத்தில் நிச்சயமாக வெளியாகும் என்பதனை அவர்கள் எமக்கு கூறியிருக்கின்றாரகள் என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ-4)

## சுஷ்மா...

இந்தியப் பிரதமர் மோடி எதிர்வரும் 13ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார். எனவே அவரது வருகை தொடர்பில் ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டே கொழும்புக்கு சுஷ்மா வரவுள்ளார்.

அதனையடுத்தே இந்திய பிரதமரின் நிகழ்ச்சி நிரல் உறுதிப்படுத்தப்படும் எனவும் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 28 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்திய பிரதமர் ஒருவர இலங்கைக்கு முதல் தடவையாக வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஆயுத...

பட்ட அவன்ட் கார்டே என்ற தனியார பாதுகாப்பு நிறுவனத்தின் மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் கடந்த ஜனவரி மாதம் குற்றப்புலனாய்வுத் திணைகள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது.

இநத ஆயுதக்களஞ்சியம் தொடரபான விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில், அந்த விசாரணைகளை இடைநிறுத்துவதற்காக தற்போதைய அரசாங்கத்தில் உள்ள முக்கிய அமைச்சர் ஒருவருக்கு 300 மில்லியன் ரூபாயை இலஞ்சமாக கொடுக்க குறிப்பிட்ட நிறுவனம் முன்வந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இருந்து விலகி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளித்த முதல் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான அந்த அமைச்சர் குறித்த கடல்பாதுகாப்பு நிறுவனம் வழங்க முன்வந்த இலஞ்சத்தைப் பெற மறுத்துள்ளார்.

இந்த மிதக்கும்ஆயுதக்களஞ்சியம் தொடர்பான விசாரணைகளில் திருப்திகரமான முன்னேற்றம் காணப்படாது போனால், இரண்டு வாரங்களுக்குள் மிதக்கும் ஆயுதக களஞ்சியம் தொடர்பான விபரங்களைப் பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்தப் போவதாகவும் ராஜித சேனாரத்ன எச்சரித்துள்ளார்.

தறபோதைய அரசாங்கம் ஊழல் செய்தவர்களைத் தண்டிக்காதது தமக்கு ஏமாற்றம் அளிப்பதாக குறிப்பிட்டுள்ள ராஜித சேனாரத்ன, எதிர்வரும் நாடாளுமன்றத் தேரதலின் போது எல்லா குற்றவாளிகள் பற்றிய விபரங்களையும் தான் வெளியிடப் போவதாகவும் தெரிவித்துள்ளார். (எ-11)

## புனர்வாழ்...

புகள் நேற்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முன்வைத்தன.

இவ்வாறு முன்வைக்கப்பட்ட சர்வ்தேச சட்டத்தரணிகள் சங்கத்தின அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தினால் இலங்கையில் பாரிய மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருந்தன.

யுத்தம் நிறைவடைந்து பல வருடங்களின் பின்னரும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜனநாயகம் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.

இந்தநிலையில் புதிய அரசாங்கம் இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்என்று அந்த அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## ஜெனிவா...

இலஙகை ஆகிய நாடுகளின் தலைவர்கள் அளித்த வாக்குறுதிகள் மற்றும் அவர்களின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதை ஊக்குவித்து உண்மையான மாற்றங்களுக்கான வாய்ப்புகளை உருவாக்குவதில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை பங்காற்றியுள்ளது.

அழுத்தங்களைக் கொடுப்பதன் மூலம், மனித உரிமை மீறல்களில ஈடுபடுவோரை நிச்சயம் மாற்ற முடியும. எனினும் அது ஒரே இரவில நடந்து விடாது. அழுத்தங்களின் மூலம் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளும், சுதந்திரத்தை விரிவு படுத்திக் கொள்ளும் மாற்றங்களை ஏற்படுத்தமுடியும்என்றும்அவர்தனது உரையில் தெரிவித்துள்ளார். (எ-11)

## மனித உரிமை...

கடந்த ஜனாதிபதித்தேர்தலில்இலங்கை மக்கள் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை பெருவாரியான வாக்கு வீதத்தில் தோற்கடித்து மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக தெரிவு செய்தனர்.

மோதல்கள் இடம்பெற்ற வடக்கு, கிழககு உட்பட முழுநாட்டுமக்களுமபுதிய ஜனாதிபதியை தெரிவு செய்துள்ளனர்.

நாட்டின் புதிய அரசாங்கம், நாட்டு மக்களின் பேச்சுரிமை, ஜனநாயகம், ஊடக சுதந்திரம்உள்ளிட்டமனிதஉரிமைகளை பாதுகாக்கும் இனப்பாகுபாடு இன்றி அனைவருககும் சம உரிமை அளிப்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது.

இனஙகளுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை புதிய அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

கடந்த அரசாங்கம் பாரிய அளவில் மனித உரிமைகளை மீறி வந்தது.

உலகமனிதஉரிமை அமைப்புகள், மனிதஉரிமைஆணையாளர்புலம்பெயர தமிழர்கள்இலங்கைக்கு விஜயம் செய்து நிலைமைகளை கண்டறிந்து இலங்கைக்கு உதவ வேண்டும்எனவும்மங்கள சமரவீர கோரிக்கை விடுத்துள்ளார்.

ராஜபக்ஷ ஆட்சியில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும்.

மைத்திரி ஆட்சி பொறுப்பேற்று 48 நாட்களில் சமூக மக்களின் தனி உரிமைகளை பாதுகாப்பதில் மிகுந்த அக்கறை கொண்டு செயற்பட்டு வருகின்றது.

ஐக்கிய நாடுகள் வரையறுத்துள்ள மனிதவுரிமை சட்டதிட்டங்களை இலங்கையிலும் முழுமையாக பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்த நம்பகமான உள்நாட்டு விசாரணை கட்டமைப்பை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம்முனைபபுகளை மேற்கொண்டுள்ளது.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புகூறல் விடயத்தில் உலகத் தலைவர்களின் ஒத்துழைப்பு மற்றும் உதவிகளையும் இலங்கை அரசு எதிர்பார்த்துள்ளது.

மோதல்கள் இடம்பெற்ற வடக்கு. கிழக்கு பகுதிகளில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்காக முதல் கட்ட நடவடிக்கையாக இந்த மாகாணங்களுக்கு சிரேஷ்ட சிவில் அதிகாரிகள் இருவர் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை குறைக்கவும் நடவடிக்கை எடுககப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் வகையில், அதியுயர்பாதுகாப்பு வலயத்தில் 1000 ஏக்கர் நிலத்தை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கை, நாட்டில் ஐக்கிய மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த சர்வதேச உதவிகளை எதிர்பார்த்துள்ளது.

நாட்டில் நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக தென்னாபிரிக்காவின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும்செயற்பாடுகளை இலங்கை மேற்கொண்டுள்ளது.

இதனடிப்படையில், தென்னாபிரிக்கவின் சர்வதேச ஒத்துழைப்புக்கான பிரதியமைச்சர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார்.

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஐ.நா மனித உரிமை ஆணையாளருக்கு அழைப்பு விடுத்துள்ளோம், ஐ.நா பிரதிநிதியொருவர் தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாகவும் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார். (எ-11)


**பணியாளர்கள் தேவை**

2015 இன் இம்மாதத்திற்கான பல்வேறுபட்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன. தங்களிடம் O/L, A/L தகைமை இருப்பின் எமது நிறுவனத்தில் பணிபுரியலாம்.

- முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டத்தினருக்கு முன்னுரிமை
- தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு.
- வயதெல்லை 18 - 30.
- முன்அனுபவம் அவசியமற்றது.

No. 70, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (C-200)

தொடர்புகளுக்கு:
0773366453, 0771363797, 0214545634

**வெளிநாட்டு கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு**

வெளிநாட்டுப் பல்கலைக்கழக அனுமதிகள், சிறந்த ஆலோசனைகள், வழிகாட்டல்கள்
அனுமதிகள் முற்றிலும் இலவசம்

காலம் : 05.03.2015 காலை 10.00 மணி

கொழும்பில் இருந்து வருகைதரும் நிபுணத்துவம் வாய்ந்தவர்களால் செயலமர்வு இடம்பெறும்.

**E-CITY COLLEGE OF ENGLISH**

இல-372D, முதலாவது மாடி, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

0212217106 / 0773400418 / 0774924166 / 0770610271

(C-199)



**31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



மலர்வு 15 - 07 - 1942

உதிர்வு 01 - 02 - 2015

அமரர்

**கிருஸ்ணசாமி கந்தசாமி**

01.02.2015 இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரண செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசி மூலமும் கண்ணீர் அஞ்சலிகள் மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 03.03.2015 இன்று அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

C.C.T.M பாடசாலை ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(C-198)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தியோகபூர்வ அறிவிப்பு

வடக்கின் அச்சகதாரராக மிளிரும்

# கரிகணன் நிறுவனம்

தனது அச்சுப்பதிப்புச் சேவைகள் அனைத்திற்கும்

## மார்ச் 01 முதல் அதிரடி விலைக் குறைப்பு

உத்தியோகபூர்வ அறிவிப்பு

## இந்த விலைக் குறைப்பினை நம்பித்தான் ஆகவேண்டும்

### இது எவ்வாறு சாத்தியம்???

வாடிக்கையாளர் நலன் கருதி **அச்சிடல் செலவினை குறைக்கும் நோக்குடன் கரிகணன்** நிறுவனம் 02.12.2012 ஆம் ஆண்டு நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த அச்சுச் சேவை ஆய்வாளர் **அல்பேட் எமிங்** அவர்களுடனும் KPMG நிறுவனத்துடனும் தனது இவ் **விலைக்குறைப்பு ஆய்வினை** (Research) மேற்கொண்டது. இவ் ஒரு வருட கால ஆய்வின் தீர்வாக எம்மால் உள்வாங்கப் பட்டுள்ள **புதிய முறையிலான அச்சு இயந்திரத் தொழில் நுட்பங்கள்** எமது அச்சிடல் செலவினை குறைத்துள்ளமையினால், **எம்மால் உயர்ந்த தரத்திலும், குறைந்த செலவிலும்** வாடிக்கையாளர்களின் அச்சுத்தேவையினைப் பூர்த்தி செய்யமுடியும்.

- ✓ புதிய அச்சு இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு புதிய தொழில் நுட்பத்தின் மூலம் அச்சுப்பதிப்புச் செய்யப்பட்டு தீர்வு காணப்பட்டது.
- ✓ 01.08.2014 பரீட்சார்த்தமான அச்சுப்பதிப்பு; ஆரம்ப தீர்வு வெற்றி
- ✓ 01.01.2015 முதல் விலைக் குறைப்பு ஆரம்பம்
- ✓ 01.03.2015 முதல் உத்தியோகபூர்வ அறிவிப்பு





## இவ் விலைக் குறைப்பினை

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் மற்றும் கல்விச் சமூகத்தினர் (பாடசாலை மாணவர்கள்) அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகின்றோம்.

எந்த ஒரு விடயத்திற்குமான தீர்வு நீண்டகால ஆய்வின் அடிப்படையிலேயே எடுக்கப்படுகின்றது அவ்வாறான தீர்வே நீடிக்கக்கூடியது.







(C-195)

**NO DISCOUNT | NO CREDIT**

எதிர்பார்த்து காத்திருங்கள்

**MAY 1** முதல் மாபெரும் மாற்றம் Digital துறையில்

Harikanan
PRINTERS OF THE NORTH

Why us???

Lowest Price | Best Quality | Fast Delivery | 100% Satisfaction

#681, K.K.S. Road, Jaffna, Sri Lanka. T +94 21 222 2717|8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.